REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 மார்ச் 27 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 91 இல. 73 | Monday 27, March, 2023 | 16 பக்கங்கள் | 50/-

## பால் தேநீரின் விலை ரூபா 10ஆல் குறைகிறது

**இன்று முதல் நடைமுறைக்கு வரும்**



பால் தேநீர் கோப்பை ஒன்றின் விலையை இன்று முதல் 10 ரூபாவால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

06

**விவசாய அமைச்சு செயலாளர், கமநல ஆணையாளர் ஊடாக**

## அரசின் தலையீடு இல்லாது உர விநியோக வேலைத்திட்டம்

**ஜனாதிபதியின் ஆளணி பிரதானி சாகல தெரிவிப்பு**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



அடுத்த வருடம் முதல் உர விநியோக வேலைத் திட்டத்தை அரசாங்கத்தின் தலையீடு இன்றி முன்னெடுத்துச் செல்வதற்கான திட்டமொன்றை தயாரிக்குமாறு ஜனாதிபதியின் ஆளணி பிரதானி முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்க விவசாய அமைச்சின் செயலாளர் மற்றும் கமநல சேவை ஆணையாளருக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

06

## புலமைப்பரிசில் வெட்டுப்புள்ளி: ஆராய பாராளுமன்ற தெரிவுக் குழு

**யோசனையை அடுத்த அமர்வில் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கத் தீர்மானம்**



*லோரன்ஸ் செல்வநாயகம்*

புலமைப் பரிசில் பரீட்சை வெட்டுப் புள்ளிக்கு தெரிவுக்குழுவொன்று அவசியம் என முன்னாள் கல்வி மற்றும் உயர்கல்வியமைச்சரும் தற்போதைய ஊடகத்துறை அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர் பெற்றுக் கொள்ளும் புள்ளி, புலமைப்

06

## காரைக்கால் - KKS பயணிகள் படகுச்சேவை ஏப். 29 முதல்

**144 மில். ரூபா நிதியில் புதிய முனையம் KKS இல் நிர்மாணம்**

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

இந்தியாவின் காரைக்கால் துறைமுகத்திலிருந்து வடக்கில் காங்கேசன்துறை துறைமுகம் வரையிலான பயணிகள்

06



**25 வருட மறுசீரமைப்பு திட்டத்தின் ஊடாக அபிவிருத்தி**

# நாட்டுக்காக அனைவரும் ஒன்றுசேரும் தருணம் இது

**புலம்பெயர்ந்தோர் மற்றும் இளம் சமூகத்தினருக்கு ஜனாதிபதி அழைப்பு**



*லோரன்ஸ் செல்வநாயகம்*

இலங்கை அடுத்த 25 வருடங்களுக்குள் பாரிய அபிவிருத்தி இலக்குகளையடையும் நாடாக முன்னேற்றமடையும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரத்தின் ஏனைய நாடுகள் மற்றும் தெற்காசியாவுடன் இணைந்து இலங்கை பாரிய அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேற்படி 25 வருடகால புதிய மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் இலக்குகளை நோக்கி அரசாங்கம் முன் செல்லும் என குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி நாட்டை முன்னேற்றுவதற்கான தொடர்ச்சியான வேலைத்திட்டங்களில் இணைந்துகொள்ளுமாறு புலம்பெயர் சமூகத்தினருக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.ஹார்வட் பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற சூம் தொழில்நுட்பம் ஊடான நேர்காணலில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று 100 வருடங்கள் பூர்த்தியாகின்ற 2048 ஆம் ஆண்டில் இலங்கை நடுத்தர வருமானம் ஈட்டும் நாடாக மாறும் எனவும்

06



வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலயத்தின் 90வது ஆண்டு நிறைவை முன்னிட்டு பழைய மாணவிகளின் ஏற்பாட்டில் நடைபவனி ஒன்று (25) சனிக்கிழமை நடைபெற்றது. அதிபர் திருமதி அருந்ததி இராவிஜயன் தலைமையில் நடைபெற்ற நடைபவனியில் கல்லூரியின் முகாமையாளர் மாலா சபாரட்னம் அத்துடன் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படம் அஷ்ரப் ஏ சமத்)

## பாடசாலைகளின் முதலாம் தவணை இன்று ஆரம்பம்

**ஏப்ரல் 05 முதல் 16 வரை விடுமுறை**




2023 ஆம் ஆண்டுக்கான முதலாவது பாடசாலைத் தவணை இன்று திங்கட்கிழமை (27) ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி, அனைத்து அரச மற்றும் அரச அனுசரணை பெற்றுள்ள தனியார் பாடசாலைகள், 2023 ஆம் ஆண்டிற்கான முதல் தவணை இன்று தொடங்குகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமையுடன் 2022 ஆம்

06

**இயற்கை அனர்த்தங்களால் பாதிப்பு;**

## ஜனாதிபதி நேரடியாக உதவக்கோரும் சுரேஷ் MP



அசாதாரண காலநிலை மற்றும் மண்சரிவுகள் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களை ஜனாதிபதி நேரடியாக தலையிட்டு வழங்க வேண்டும் என்று பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

மண்சரிவுகளால் வீடுகளை இழந்த மக்களுக்கு ஜனாதிபதியின் நேரடி கண்காணிப்பின் கீழ் அனர்த்த முகாமைத்துவ திணைக்களத்தின் ஊடாக மீண்டும் புதிய இருப்பிடங்களை

06

## இலவச அரிசி வழங்கும் அரசின் திட்டம் இன்று முதல்

**அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு**



29 இலட்சம் குடும்பங்களுக்கு இலவச அரிசி வழங்கும் திட்டம் இன்று (27) ஆரம்பிக்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதன்படி, விவசாயிகளிடம் இருந்து வாங்கும் நெல்லை அரிசியாக மாற்றி, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அரசு வழங்கவுள்ளது. ஒரு குடும்பத்திற்கு மாதாந்தம் 10 கிலோ அரிசி வீதம் இரண்டு மாதங்களுக்கு இலவச

06

## IGPயின் பதவிக்காலம் 03 மாதங்கள் நீடிப்பு

**ஜனாதிபதியினால் வழங்கப்பட்டது**



பொலிஸ்மா அதிபர் C.D.விக்ரமரத்னவின் பதவிக்காலம் மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த பதவி நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து கடந்த 23 ஆம் திகதி C.D.விக்ரமரத்ன ஓய்வுபெறவிருந்தார். 2020 நவம்பர் 27 ஆம் திகதி, இலங்கையின் 35 ஆவது பொலிஸ்மா அதிபராக C.D.விக்ரமரத்ன கடமைகளை பொறுப்பேற்றார்.

## போராட்டங்களுடன் பிரச்சினை கிடையாது பின்னணியிலிருந்தோருடனே எமக்குப் பிரச்சினை

**நாமல் ராஜபக்ஷ எம்பி தெரிவிப்பு**



போராட்டங்களுடன் எமக்குப் பிரச்சினை கிடையாது என்றும் போராட்டக்காரர்களுடனேயே பிரச்சினை உள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல்ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

"சிஸ்டம் சேன்ஞ்"அவசியம்தான், அதனை நாம் ஏற்றுக் கொள்கிறோம்.அதற்காக உறுதியாக நிற்பவர்களில் நானும் ஒருவன் என்ற வகையில்,நாம் அதைச் செய்வோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

06

## பஸ் கட்டணங்கள் விரைவில் குறையும்

**அமைச்சர் பந்துல உறுதி**



ரூபாவின் பெறுமதி இயல்புநிலைக்குத் திரும்பும் நிலையில் பொது மக்களின் நன்மை கருதி பஸ் கட்டணங்களை குறைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க முடியும் என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

06

**புதுவருடத்தை முன்னிட்டு ஏப்ரல் 01 முதல் 12 வரை**


## வீதிகளின் இருமருங்குகளிலும் வியாபாரம் செய்ய விசேட அனுமதி

**பொது மக்களுக்கு அரசாங்கம் விசேட சலுகை வழங்கல்**

*லோரன்ஸ் செல்வநாயகம்*

பண்டிகை காலத்தை கவனத்திற் கொண்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான வீதிகளின் இருமருங்கிலும் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு தற்காலிக அனுமதியை வழங்குவதற்கு போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது. இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டுள்ள பஸ் வண்டிகளை

06






**சமூக ஊடகங்களை பயன்படுத்த சிறுவர்களுக்கு புதிய கட்டுப்பாடு**
அமெரிக்கா உட்டோ மாகாணத்தில் மசோதா
02



**150 பொருட்களின் இறக்குமதி மீதான கட்டுப்பாடு நீக்கம்**
தளர்த்த அரசாங்கம் நடவடிக்கை முன்னெடுப்பு
02



**உள்ளூராட்சி மன்றங்கள் குறித்து ஆராய புதிய குழு**
பிரதமர் தலைமையில் ஜனாதிபதியினால் நியமிப்பு
02

## பிரபா கணேசன் தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி உதயம்

**தபால் பெட்டி சின்னத்தில் 09 சிவில் அமைப்புகள் இணைந்தன**

*அஷ்ரப் ஏ சமத்*



மக்களின் தேவைகளையும் உரிமைகளையும் வென்றெடுத்து தமது அரசியல் செயற்பாடுகளை மேலும் விஸ்தரித்து செல்வதை நோக்காகக்கொண்டு முன்னாள் பிரதியமைச்சர் பிரபா கணேசன்

06

## திருடன் ஒருவனின் நூதனமான செயல்

**பணத்தை எடுத்த பின் உடமைகள் ஒப்படைப்பு**



இலங்கையில் திருடன் ஒருவனின் செயற்பாடு குறித்து நாட்டு மக்கள் வியப்பில் ஆழ்ந்துள்ளனர். கொழும்பில் இருந்து மாத்தறை நோக்கி பயணிக்கும் ரயிலில் பயணி ஒருவரின் பேர்ஸை ஒருவர் கொள்ளையிட்டுள்ளார்.

06

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின்**

## ஊடக கற்கைகள் துறை தலைவராக பூங்குழலி



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஊடகக் கற்கைகள் துறையின் புதிய துறைத் தலைவராக விரிவுரையாளர் பூங்குழலி சிறிசங்கீர்த்தனனை நியமிக்க யாழ். பல்கலைக்கழக பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

நேற்று கூடிய மாதாந்த பேரவை கூட்டத்தின் போதே இந்த நியமனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

06

## UK யிலிருந்து இந்தியாவுக்குள் நுழைந்த இலங்கையர் கைது

**தமிழக கடற்பகுதியில் வைத்து பிடிபட்டார்**



பிரித்தானியாவிலிருந்து இந்தியாவுக்குச் சென்ற இலங்கையர் ஒருவரை இந்திய கடலோர காவல்படையினர் தமிழக கடற்பகுதியில் வைத்து நேற்று முன்தினம் (25) கைதுசெய்துள்ளனர். இங்கிலாந்தில் வசிக்கும் இலங்கையரான ஜெகன் பெர்னாண்டோ மனோகரன் என்பவரே கைது

06

91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 மார்ச் 27 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN

**தொழுகை நேரம்**

10 முதல் 13 வரை

சுபஹ் - 05.04
லுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் சித்திரை 5

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

## தவக்கால சிந்தனை



### குற்றமற்றவர் யார்? இயேசு வழங்கிய தீர்ப்பு

(யோவான் 8: 1 – 11)

இன்றைய நற்செய்தியானது யோவான் நற்செய்திக்கே மட்டும் உரித்தான பகுதியுடன் விரிகின்றது. விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணை இயேசுவிடத்தில் கொண்டு வந்து நியாயம் கேட்கின்றனர் யூதத் தலைமையும் அவர்களின் அடிவருடிகளும்.

விபசாரத்தில் பிடிபடுகின்றவர்கள் கல்லால் எறிந்து கொல்லப்பட வேண்டுமென்பது யூத சட்டமாகும் (லேவியர் 10:10). அவ்வாறு கல்லால் எறிந்து கொல்லப்பட வேண்டியவர் பெண் மாத்திரமல்ல மாறாக அவ்விபசாரத்தில் ஈடுபட்ட ஆணுமே.

ஆனால் இங்கு பெண் மாத்திரமே தண்டனைக்குரியவளாக இயேசுவின் முன்னால் நிறுத்தப்படுகிறாள். இங்கு அவர்களது நோக்கமெலாம் அவள்மீது குற்றம் காண்பதல்ல மாறாக, இயேசு யூத சட்டத்திற்கு ஏதிராகச் செல்வாரா? அதனூடாக அவர்மீது எத்தகைய குற்றச்சாட்டினை முன்வைத்து அவரைக் கைது செய்ய முடியுமெனவே சிந்திக்கின்றார்கள்.

ஆனால் இயேசு அவர்களிடத்தில் "உங்களில் பாவம் இல்லாதவர் முதற்கல்லை எறியட்டும்"என்பதனூடாக பந்தினை அவர்கள் பக்கமே திருப்பி விடுகிறார்.

இயேசுவின் அந்த தீர்ப்பைக் கேட்டு அவர்கள் அனைவரும் செய்வதறியாது வந்தவழியே ஒருவர் பின் ஒருவராக நடையைக் கட்டுகின்றார்கள்.

இயேசுவும் அப்பெண்ணைத் தீர்ப்பிடாது திருந்திய வாழ்வுக்கு அழைக்கின்றார்.

தவக்காலம் எல்லோருக்குமான திருந்திய வாழ்வுக்கான அழைப்பு என்பதை உணர்ந்தால் எம் ஒவ்வொருவரது வாழ்க்கையிலும் மாற்றம் நிச்சயம்.

அருட்தந்தை நவாஜி...

## பேச்சுவார்த்தையொன்றுக்கு காலம் ஒதுக்கித் தருமாறு கோரி

# தேர்தல் ஆணைக்குழு பிரதமரிடம் எழுத்து மூலம் வேண்டுகோள்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் பேச்சுவார்த்தையொன்றை மேற்கொள்வதற்கு நேரமொன்றை ஒதுக்கித் தருமாறு தேர்தல் ஆணைக்குழு பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது.






அது தொடர்பில் கருத்து தெரிவித்த தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி புஞ்சிஹேவா, உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவது தொடர்பில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பில் பேச்சுவார்த்தையொன்றை நடத்துவதற்காகவே பிரதமரிடம் காலம் ஒன்றை ஒதுக்கித் தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அதேவேளை, உள்ளூராட்சி சபை தேர்தல் வேட்பாளர்களாக உள்ள அரசாங்க ஊழியர்களின் சம்பளம் தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்கள் தொடர்பிலும் பொது நிர்வாக, மாகாண சபைகள் அமைச்சராகிய பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பிரதமர் தினேஷ் குணவர்தன கடந்த இரண்டு தினங்களுக்கு முன் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போது மேற்படி வேட்பாளர்களின் சம்பளம் தொடர்பான பிரச்சினை சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்துவதற்காக தேர்தல் ஆணைக்குழுவை அழைக்கத் தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இத்தகைய நிலையிலேயே பிரதமருடன் பேச்சுவார்த்தை ஒன்றுக்காக நேரத்தை ஒதுக்கித் தருமாறுதேர்தல் ஆணைக்குழு கடிதம் மூலம் வேண்டுகோளை விடுத்துள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## உணவு என்ற போர்வையில் கஞ்சா விநியோகம்

### குடு சலிந்துவின் சகா கைது



போதைப் பொருள் வர்த்தகரான குடு சலிந்துவின் நெருங்கிய சகா ஒருவர் நேற்று முன்தினம் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார்.

விசேட அதிரடிப்படையின் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத் தடுப்பு பிரிவு III இன் அதிகாரிகளால், பாணந்துறை ஹொரண வீதியில், 33 வயதுடைய குறித்த நபர், 10 கிலோ கிராம் கஞ்சா மற்றும் ஒரு இலட்சம் ரூபா பணத்துடன் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் உணவு விநியோகம் என்ற போர்வையில் குறித்த போதைப்பொருட்களை பைசிக்களில் கொண்டு சென்றுள்ளதாக அதிரடிப்படையினர் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர் பாணந்துறையில் போதைப்பொருள் வலையமைப்பைக் கையாண்டவர் எனவும் பாதாள உலகக்குழு

06

# விமான நிலையத்திற்கு வெடி குண்டு மிரட்டல்

### போலி தகவல் வழங்கிய மாணவன் கைது





கட்டுநாயக்க, சர்வதேச விமான நிலையத்தின் இரண்டாம் முனையத்தில் வெடிகுண்டு இருப்பதாக பொலிஸாருக்கு போலியான அழைப்பு விடுத்தாக கூறப்படும் 14 வயது பாடசாலை மாணவனை விமான நிலைய பொலிஸார் நேற்று முன்தினம் (25) கைது செய்துள்ளனர்.

குறித்த பாடசாலை மாணவர் நேற்று முன்தினம் விமான நிலையத்தின் அவசர அழைப்புப் பிரிவுக்கு அழைப்பை விடுத்து, விமான நிலையத்தில் வெடிகுண்டு இருப்பதாகக் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.


அதற்கமைய, அதிகாரிகள் முனையத்தை சோதனை செய்துகொண்டிருந்தபோது, சில நிமிடங்களில் மாணவர் மீண்டும் தொலை பேசியில் தொடர்பு கொண்டு வெடிகுண்டு அச்சுறுத்தல் இல்லை என்றும் அது நகைச்சுவை என்றும் தெரிவித்ததாக பொலிஸார் கூறுகின்றனர்.

களுபோவில பிரதேசத்தில் வசித்து வரும் சந்தேக நபரான மாணவனை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து, பின்விளைவுகளை உணராமல் மேற்கொள்ளப்பட்ட அழைப்பு குறித்து பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

06

## கலைஞர் கருணாநிதியின் நூற்றாண்டு விழா

### தலைநகர் கொழும்பிலும் நடத்த ஏற்பாடு



தமிழகத் தலைவர் கலைஞர் கருணாநிதியின் நூற்றாண்டு விழா எதிர்வரும் ஜூன் மாதம் 03 ஆம் திகதி தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் கொண்டாடப்படவுள்ளது. அதே போன்று தலைநகர் கொழும்பிலும் விழா நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தில் அரசியலுக்கு அப்பாற்பட்டு இலங்கையில் அனைத்து கட்சி தலைவர்கள். முன்னாள்,இந்நாள் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்தோடு இலங்கை கலை, இலக்கியவாதிகள், நடிகை, நடிகர்கள், அரசியலுக்கு அப்பாற்பட்டுள்ள பொது வானவர்கள், தொழில் அதிபர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், செய்தி, தொண்டு நிறுவனத்தினர் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். விழா நடைபெறும் இடம் பின்னர் அறியத்தரப்படும்.விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் இலங்கை, இந்திய தொடர்பாளர் மணவை அசோகன் மேற்கொண்டுள்ளார். அனைவரதும் அன்பான ஆலோசனைகளும் ஆதரவுகளையும் தந்துதவுமாறும் அசோகன் கேட்டுக் கொண்டுள்ளார்.





## நோன்பும் அல்குர்ஆனும்

'மனிதர்களுக்கு நேர்வழியாகவும், நேர்வழியை விளக்கக்கூடியதாகவும், சத்தியம் அசத்தியத்தை பிரித்துக்காட்டக்கூடியதாகவும் விளங்கும் அல் குர்ஆன் ரமழான் மாதத்திலேயே அருளப்பட்டது' (பகரா 185) என்பது இறைவாக்காகும்.

அல்குர்ஆனின் பிரதான இலக்கு மனிதர்களுக்கு நேர்வழியை காட்டுவதே. எனவே அவன் அதனை விளங்கி செயல்பட வேண்டியுள்ளான். இது மனிதன் பயணிக்க வேண்டிய பாதையை வெளிச்சமிட்டு காட்டுகிறது. உள்ளத்தில் ஏற்படக்கூடிய உளநோய்களுக்கான மகத்தான நிவாரணியாக விளங்குகிறது. அறிவுக்கண்களை அகலத்திறந்து விடுகிறது. நாகரிகத்தையும் கலாசாரத்தையும் கற்பிக்கிறது. உயிரோட்டமானது. சூழ இருப்பவற்றை உயிர்ப்பிக்கக்கூடியது. மனிதனை அனைத்து தீங்குகளில் இருந்தும் பாதுகாக்கிறது. மகிழ்ச்சியின்பால் மனிதகுலத்தையே இட்டுச்செல்கிறது. இதனை நாடிநின்றவர்களை இது ஒரு போதும் கைவிட்டதில்லை.

எனவேதான், அல்லாஹ் 'நீங்கள் அல் குர்ஆனை நுணுக்கமாக ஆராயக்கூடாதா? அல்லது அப்படி விளங்க முடியாத பிரகாரம் உங்களது உள்ளங்கள் தாழிடப்பட்டுள்ளனவா'? (முஹம்மத் 24) என்றும் 'அவர்கள் அல்குர்ஆனை விளங்க வேண்டும் என்பதற்காக அதனை நாம் இலகுபடுத்தினோம். அதனை விளங்க முனைபவர்கள் இருக்கிறார்களா'? (கமர் 17) என்றும் கேட்கிறான்.

அல்குர்ஆனில் ஆழமான விளக்கமுடைய இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் 'எமக்கு அல்குர்ஆனை மனனம் செய்வது கஷ்டமானதாகவும் அதன்படி செயல்படுவது இலகுவானதாகவும் அமைந்திருந்தது. ஆனால் எமக்கு பின்னால் வந்தவர்களுக்கு அதனை மனனம் செய்வது இலகுவானதாகவும் அதன்படி செயல்படுவது கஷ்டமானதாகவும் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இமாம் ஹஸனுல் பஸரி (ரஹ்) அவர்கள் 'கருத்துக்களை விளங்காது எழுத்துக்களை மனனம் செய்வது மாத்திரம் அல்லது 'நான் அல்குர்ஆனை ஓதினேன் என்று கூறும் ஒருவனிடம் அதன் பண்பாட்டையோ செயல்பாட்டையோ காணாது விட்டால் அது அல்குர்ஆனுக்கு செய்யவேண்டிய கடமையை செய்துவிட்டது ஆகாது' என்றுள்ளார்.

ஆகவே அல்குர்ஆனை ஓதுவதிலும் அதனை விளங்குவதிலும் அதற்கேற்ப வாழ்வொழுங்கை அமைத்துக்கொள்வதிலும் கூடுதல் கவனம் செலுத்துவோம்.

அஷ்ஷெய்க
யூ.கே. ரமீஸ் எம்.ஏ
(சமூகவியல்)...

# 150 பொருட்களின் இறக்குமதி மீதான கட்டுப்பாடு நீக்கம்

### தளர்த்த அரசாங்கம் நடவடிக்கை முன்னெடுப்பு

எதிர்வரும் நான்கு மாதங்களுக்கு 100 முதல் 150 பொருட்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனை திறைசேரியின் மூத்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட பொருட்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகளை அரசாங்கம் நீக்கும் இந்த நடவடிக்கை நாணயமாற்று விகிதம், அந்நிய செலாவணி கையிருப்பு மற்றும் பணவீக்கம் என்பவற்றில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது என குறிப்பிட்டுள்ளனர்.



மத்திய வங்கி கைத்தொழில் அமைச்சு மற்றும் திறைசேரி என்பன கட்டுப்பாடுகள் நீக்கப்படும் பொருட்களின் அளவினைத் தீர்மானிக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்பிட்ட பொருட்கள் கறுப்புச் சந்தைகளில் விற்பனை செய்யப்படுவதைத் தடுப்பதற்காகவே இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் அடிப்படையில் கணினிகள், மொபைல் போன்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், வீட்டு உபயோகப் பொருட்கள், எழுதுபொருட்கள், உணவுப் பொருட்கள்,

06

## சமூக ஊடகங்களை பயன்படுத்த சிறுவர்களுக்கு புதிய கட்டுப்பாடு

### அமெரிக்கா உட்டோ மாகாணத்தில் மசோதா



அமெரிக்க உட்டா மாகாணத்தில் முதன்முதலாக சமூக ஊடகங்களை பயன்படுத்த சிறுவர்களுக்கு கட்டுப்பாடு விதிக்கும் வகையில் மசோதா கொண்டு வரப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் சமூக ஊடகங்களால் சிறுவர்களுக்கு ஏற்படும் தீமைகளை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.


அதனையடுத்து அங்குள்ள உட்டா மாகாணத்தில் முதன்முதலாக சமூக ஊடகங்களை பயன்படுத்த சிறுவர்களுக்கு கட்டுப்பாடு விதிக்கும் வகையில் மசோதா கொண்டு வரப்பட்டது. அந்த மசோதாவுக்கு கவர்னர் ஸ்பென்சர் காக்ஸ் ஒப்புதல் அளித்தார்.

இந்த சட்டத்தின்படி 18 வயதுக் குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களில் கணக்குகளை வைத்திருக்க அவர்களது பெற்றோர் அவசியம் சம்மதிக்க வேண்டும். மேலும் அவர்களது கணக்கை பெற்றோர்

06

## உள்ளூராட்சி மன்றங்கள் குறித்து ஆராய புதிய குழு

### பிரதமர் தலைமையில் ஜனாதிபதியினால் நியமிப்பு



அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதியினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் தலைமையிலான குறித்த குழுவில், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர, நிதி இராஜாங்க அமைச்சர், மாகாண ஆளுநர்கள், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக, மக்களுக்காக முன்னெடுக்கப்பட வேண்டிய அனைத்து பணிகளையும் எவ்வித இடையூறுமின்றி தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்குத் தேவையான வழிகாட்டுதல்கள் வழங்கப்படும் என இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர குறிப்பிட்டார்.

இது தொடர்பிலான மேலதிக நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் 03 ஆம் திகதி ஆளுநர்கள் மற்றும் பிரதேச செயலக

06

# மன்னார் இளைஞர் தமிழகத்தில் தஞ்சம்

### மண்டபம் பொலிஸார் விசாரணை



இலங்கைத் தமிழர் ஒருவர் படகு மூலம் அரிச்சல் முனைத் தீவை அடைந்து பின்னர் மண்டபம் பொலிஸ் நிலையத்துக்கு சென்றுள்ளார். இலங்கையின் மன்னார் மாவட்டம் முருங்கன் பூவரசங்குளம் பகுதியைச் சேர்ந்த வி.வசந்தகுமார் என்ற 38 வயதுடையவரே நேற்று அதிகாலை அரிச்சல்முனைத் தீவை அடைந்ததாக தெரிவிக்கபட்டுள்ளது.

இவர் 1.25 இலட்சம் இலங்கை ரூபாவை செலுத்தி படகில் பயணித்து இந்திய கடற்பரப்பை சென்றடைந்துள்ளார்.

பின்னர் தேவிபட்டினத்தில் இருந்து பஸ்ஸில் ஏறி மண்டபம் பொலிஸ் நிலையத்திற்கு சென்றுள்ளார்.

முதற்கட்ட விசாரணையில், வசந்தகுமார் 2007 முதல் 2018 வரை சேலம் அகதிகள் முகாமில் குடும்பத்துடன் தங்கியிருந்த நிலையில்,

06







2022 ஆம் ஆண்டுக்கான 'ரைகம் டெலி' விருது வழங்கும் விழா நேற்று முன்தினம் சங்ரில்லா ஹோட்டலில் பேராசிரியர் ஜே. பி திசாநாயக்க உள்ளிட்ட கலைஞர்களின் தலைமையில் நடைபெற்றது. இதன்போது விசேட விருதினை சிரேஷ்ட ஊடகவியலாளர் சமன் அதாவுத ஹெட்டி மற்றும் நடிகை நெத்தாலி நாணயக்காரவும் பெற்றுக்கொண்டனர். வாழ்நாள் சாதனையாளர் விருதை இம்முறை நடிகை வீணா ஜெயக்கொடி மற்றும் நடிகர் உந்திக்க பிரேமரத்னவும் பெற்றுக்கொண்டனர். ஜனரஞ்சக நடிகைக்கான விருதை நடிகை துசேனி மியுரங்கியும் சிறந்த நடிகருக்கான விருதை ஜகத் சமிலவும் சிறந்த நடிகைக்கான இரண்டு விருதுகள் முறையே வொல்கா கல்பனி மற்றும் உமாலி திலகரத்னவுக்கும் வழங்கப்பட்டன.

# பாதுகாப்பானதும் முறையானதுமான புலம்பெயர்வின் ஊடாக ஒரு சிறந்த எதிர்காலம்

හොඳ යන්න, හරි පාරෙන් රට යන්න
சரியான வெளிநாட்டு வழி வெற்றிக்கான வழி



சிறு வயது முதல் இருந்ததொரு ஆசையின் காரணமாக எப்படியோ வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக ஒரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையத்தில் இணைந்துகொண்ட நீங்கள் உங்களுக்கான வாய்ப்பு வரும்வரை பரபரப்புடன் காத்துக் கொண்டிருக்கிறீர்களா? இல்லையெனில் உங்களுக்கு தெரிந்த அல்லது உங்களுடைய நெருங்கிய உறவினர் ஒருவர் அவ்வாறு காத்துக்கொண்டு இருக்கின்றாரா? அப்படியானால் இக்கட்டுரை உங்களுக்கானது அல்லது அவ்வாறு காத்திருப்பவருக்கானது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

தேச எல்லைகள் ஊடாக இடம்பெறும் புலம்பெயர்வானது தொழிலுக்காக, கல்விக்காக, சுற்றுலாவுக்காக, சுகாதார வசதிகளுக்காக, நிரந்தரமாக குடியேறுவதற்காக அல்லது வேறு ஏதேனும் காரணங்களுக்காக இடம் பெறக்கூடும்.

இந்தக் கட்டுரையுடன் தொடர்புடையதாக மார்ச் மாதம் 19 ஆம் திகதியும் 20 ஆம் திகதியும் 26 ஆம் திகதியும் பிரசுரமாகிய கட்டுரைகள் ஊடாக தொழிலுக்காக வெளிநாட்டுக்கு செல்வதற்கு முன்னர் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளன. இக்கட்டுரைத் தொடர் ஊடாக எதிர்பார்க்கப்படும் விடயம் யாதெனில் வேலைவாய்ப்புக்காக புலம்பெயர்பவர்களுக்கு தேவையான முக்கியமான தகவல்களை வழங்குவதாகும். மேலும், இங்கு குறிப்பிடப்படும் சில விடயங்கள் அனைத்து புலம்பெயர்பவர்களுக்கும் பொதுவானதாக இருப்பதால் நீங்களும் இந்த கட்டுரை தொடரை வாசித்து முறையான புலம்பெயர்வு பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

விளக்கம் அளிப்பதற்கு வசதியாக நாம் புலம்பெயர்வினை மூன்று பகுதிகளாக பிரித்துக் கொள்வோம்.

1. புலம்பெயர்வதற்கு முன்னர்
2. புலம்பெயர்வின் போது
3. புலம்பெயர்வு நிறைவடைந்த பின்னர்

இக்கட்டுரையின் மூலம் புலம்பெயர்வின் போதும், புலம்பெயர்வு நிறைவடைந்த பின்னரும் ஒரு புலம்பெயர் ஊழியர் என்ற வகையில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டிய சில விடயங்கள் அலசப்படுகின்றன.

## புலம்பெயர்வின் போது

### புலம்பெயர் ஊழியர்களின் தொழில்சார் பிரச்சினைகள் / கோரிக்கைகள் தொடர்பான மத்தியஸ்த செயன்முறைக்கு ஏதுவாக நடவடிக்கை எடுத்தல்



வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்லும் புலம்பெயர் ஊழியர்களுடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு முன்வைக்கப்படும் முறைப்பாடுகளை தலைமை அலுவலகத்திற்கும் மாகாண / மாவட்ட புலம்பெயர்வு வள நிலையங்களுக்கும் நேரடியாகவே முன்வைக்க முடியும் என்பதுடன் அச்சேவைகளை www.slbfe.lk எனும் பணியகத்தின் இணைய தளத்தின் ஊடாக இணையவழி முறையிலும் (Online) முன்வைப்பதற்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கு புலம்பெயர் ஊழியரின் வெளிநாட்டு கடவுச்சீட்டு இலக்கம் அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கம் தொடர்பான தகவல்கள் அவர்களின் குடும்ப அங்கத்தவர்களினால் பணியகத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

இதன் மூலம் புலம்பெயர் ஊழியர் சேவையில் ஈடுபட்டுள்ள போதே அவர்களுக்கு இருக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பணியகத்திற்கு தகவல் வழங்குவதன் மூலம் அவர்களின் தொழிலுக்கு பாதுகாப்பு வழங்கும் விடயம் இலகுவானதாக அமையும்.

| வெளிநாட்டு தூதரதம் | சம்பந்தப்பட்ட தூதரகத்தின் தொழில் மற்றும் நலன்புரி பிரிவின் தொலைபேசி இலக்கம் | வெளிறாட்டு தூதரகத்தின் மின்னஞ்சல் |
|---|---|---|
| ஐக்கிய அரபு இராஜ்சியம் - அபுதாபி | 00-971-2-6316444 | slemb.abudhabi@mfa.gov.lk |
| பஹ்ரைன் | 00-973-17008410<br>00-973-17660408 | slemb.bahrain@mfa.gov.lk |
| ஐக்கிய அரபு இராஜ்சியம் - துபாய் | 00-971-43986535 | condubai@slcgdxb.ae |
| இஸ்ரேல் | 00-972-35277635/8 | slemb.telaviv@mfa.gov.lk |
| ஜோர்தான் | 00-962-65820611/2 | slemb.amman@mfa.gov.lk |
| ஜித்தா – சவுதி அரேபியா | 00-966-126065414/<br>6063442/6065772 | slcg.jeddah@mfa.gov.lk |
| குவைத | 00-965-25339140/42,<br>25354633/36/38/11 | slemb.kuwait@mfa.gov.lk |
| லெபனான | 00-961-5769585<br>00-961-5766294 | slemb.beirut@mfa.gov.lk |
| மலேசியா | 00-60-3-42568987,<br>00-60-3-42571394 | slhc.kl@mfa.gov.lk<br>slhcmy@gmail.com |
| மாலைத்தீவு | 00-960-3322845<br>00-960-3313546 | slhc.male@mfa.gov.lk |
| ஓமான் | 00-968-24697841/<br>00-968-24697842 | slemb.muscat@mfa.gov.lk<br>emb.omans@gmail.com |
| கட்டார் | 00-974-44677627/647 | slemb.doha@mfa.gov.lk |
| ரியாத் - சவுதி அரேபியா | 00-966-114608232/5 | slemb.riyadh@mfa.gov.lk |
| கொரியா | 00-82-27352966/7 | mission@slembkr.org |
| சிங்கப்பூர் | 00-65-62544595/6/7 | slhcs@lanka.com.sg |

மேற்படி இலக்கங்களை தொடர்பு கொள்வதன் மூலம் அவசர சந்தர்ப்பம் ஒன்றின்போது புலம்பெயர்ந்தவருக்கும் புலம்பெயர்ந்தவரின் குடும்ப அங்கத்தவர்களுக்கும் சம்பந்தப்பட்ட தனது உறவினருக்கு உதவியினை பெற்றுத்தருவதற்கு வாய்ப்பு கிட்டும்.

### இலங்கைக்கு வெளியே தொழில் புரிந்த பின்னர் நாடு திரும்பும் இலங்கையர்களை மீளிணைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

உரிய முறையில் தொழில் ஒப்பந்தத்தை நிறைவு செய்த பின்னர் வருகை தருகின்ற புலம்பெயர் ஊழியர்களுக்கு எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆலோசனைகளையும் கடன் வசதிகளையும் வழங்குவதற்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதற்கமைவாக அரச வங்கிகளின் ஊடாக குறைந்த வட்டி வீதத்தின் கீழ் கடனைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் ஊழியர்களுக்கு பதிலாக அவர்களினால் முன்மொழியப்படுகின்ற அவர்களின் பிரதிநிதிகளுக்கு இந்தக் கடன் வசதிகளை பெற்றுக்கொள்ளமுடியும். இத்தகவல்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின்
http://www.slbfe.lk/page.php?LID=2&MID=&PID=112?&NID=& எனும் இணையப்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### தங்கியிருக்கும் காலத்தை நீடித்தல் அல்லது சேவையினை நிறைவு செய்த பின்னர் இலங்கைக்கு மீள் திரும்புதல்.



உங்கள் தொழில்தருநர் உங்கள் சேவை தொடர்பாக திருப்தியடைந்து உங்கள் சேவையை நீடிப்பதற்கு தீர்மானிக்கலாம். அவ்வாறானதொரு சந்தர்ப்பத்தின் போது உங்கள் தொழில் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படுவதுடன் நீங்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் கொண்டுள்ள பதிவினையும் நீடிக்க வேண்டும் என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

அப்படியல்லாமல், உங்களின் ஒரு நண்பர் ஊடாக அல்லது வேறு ஏதேனும் முறையில் அறிந்துகொண்ட வேறு எவரேனும் ஒரு தொழில்தருநர் உங்களை ஒரு தொழிலுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு விரும்புவாராயின் தற்போதுள்ள தொழில்தருநரை கைவிட்டு புதிய தொழில் தருநர் ஒருவரிடம் நீங்கள் செல்ல இயலாது. மேலும் தப்பியோடி வேலை செய்தல் உங்களை ஒரு முறையற்ற புலம்பெயர்ந்தவராக மாற்றக்கூடியது, ஆதலால் தொழிலை மாற்றுவதைப் பற்றி கவனமாக இருங்கள்.

தொழிலை நிறைவுசெய்த பின்னர் நீங்கள் மீண்டும் இலங்கைக்கு திரும்புவதாயின் புலம்பெயர்ந்த நாட்டில் இருந்து புறப்படுவதற்கு முன்னர் உங்கள் தொழில்தருநர் உங்களுக்கு செலுத்த வேண்டிய அனைத்து கொடுப்பனவுகளையும் நிலுவை தொகைகளையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுங்கள். நீங்கள் புலம்பெயர்ந்த நாட்டிலிருந்து வெளியேறிய பின்னர் இத்தகைய கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளுதல் இயலாத விடயமாகும்.



புலம்பெயரந்தவர் சேவைக் காலம் நிறைவடைவதற்கு முன்னர் ஏதேனும் பின்வரும் காரணங்களினால் பாதிக்கப்பட்ட ஒருவராக நாடு திரும்பினால்

- நோய்வாய்ப்படுதல்
- இயலாமைக்கு உள்ளாகுதல்
- உடல் ரீதியிலான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகுதல்
- துபிரயோகத்திற்கு உள்ளாகுதல்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் நடாத்தப்படும் பிரிவிலுள்ள உத்தியோகத்தர்களை சந்தித்து தேவையான உதவிகளையும் ஆலோசனைகளையும் அல்லது வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் நடாத்தப்படும் “சஹன பியச” தற்காலிக தங்குமிடத்தில் உணவு மற்றும் தங்குமிட வசதிகளையும் பெற்றுக்கொள்ளமுடியும்.

மேற்கூறப்பட்டவாறு பாதிப்புக்குள்ளாகி நாடு திரும்புகின்ற ஊழியர்களுக்கு அல்லது அவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு புலம்பெயர் ஊழியர் எதிர்பாராத வகையில் எவரேனும் ஒருவரின் அழுத்தத்துக்கு உள்ளாகி அல்லது திடீர் சுகாதாரச் சீர்கேடு காரணமாக அல்லது எதிர்பாராத வகையில் மரணம் சம்பவித்தால் சம்பவம் நிகழ்ந்து 06 மாதங்களுக்குள் காப்புறுதி நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திற்கு ஒரு விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்க முடியும். மேற்படி நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு சில நிபந்தனைகள் உள்ளதுடன் அது தொடர்பாக http://www.slbfe.lk/page.php?LID=2&MID=&PID=110?&NID=& இணையப்பக்கத்திலிருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளமுடியும்.

புலம்பெயர் ஊழியர் புலம்பெயர் கால அட்டவணையை சரியான முறையில் பூர்த்தி செய்த பின்னர் வருகை தருவாராயின் அவர் சமூகத்தில் மீளிணைதல் வேண்டும்.

இவ்வாறுமீளிணைவதற்கு நிலைபேறான வருமான வழிமுறையொன்று கட்டாயமாக காணப்படுதல் வேண்டும். புலம்பெயர்ந்தவர்களுக்கு நிலைபேறான வருமான மூலங்களை தேடிக் கொள்வதற்கும் பேணி வருவதற்கும் ஏதுவான ஆலோசனைகளை தங்களது பிரதேசத்தில் பணியாற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு உத்தியோகத்தர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

### முறையற்ற புலம்பெயர்வு என்றால் என்ன?



புலம்பெயர்வு செயன்முறையுடன் தொடர்புடைய ஒழுங்கு விதிகளை உரிய முறையில் பின்பற்றாமல் முறையற்ற வழிமுறைகளில் பிற நாடுகளுக்குள் நுழைவதற்கு முயற்சி செய்தல் முறையற்ற புலம்பெயர்வாகும். இது போலியான ஆவணங்களை தயாரித்தல் முதல் ஆட்களை சட்டவிரோதமான முறையில் தேச எல்லைகளை கடக்கச் செய்தல் வரை விரிவடைந்துள்ளது

இவ்வாறான முறையற்ற புலம்பெயர்பவர்கள் ஆட்கடத்தல், மனித விற்பனை அல்லது சென்றடையும் நாட்டின் சட்டங்கள் ஆகியவற்றில் சிக்கிக் கொள்வதால் தண்டப் பணத்திற்கு அல்லது சிறைத்தண்டனைக்கு உட்படக்கூடும்.

உரிய தகைமைகள் இல்லாத அல்லது சரியான தகவல்களை அடைந்துகொள்ள இயலாத ஆட்களும் முறையற்ற விதத்தில் நாட்டின் எல்லைகளை கடந்த பிற முறையற்ற புலம்பெயர்ந்தவர்களும் தங்களது தற்போதைய சிறந்த பொருளாதார நிலைமையை உதாரணமாகக் காட்டிய சிலரினால் ஏமாற்றப்பட்ட ஆட்களும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்பில் அத்தகைய ஆட்கடத்தல்காரர்களுக்கு இரையாகக் கூடும். வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்து மனித விற்பனையாளர்கள் ஆட்களை இலகுவாக தமது இரையாக மாற்றிக் கொள்வதற்கு மேற்படி போலியான முகவர்களுக்கு முடியுமாக இருப்பதற்கான காரணம் மக்களிடையில் விழிப்புணர்வு குறைவாக இருப்பதனால் ஆகும்.

ஆட்கடத்தல் (Human Smuggling) மற்றும் மனித விற்பனை (Human Trafficking) உலகில் பல்வேறு நாடுகளில் அவற்றின் சட்ட முறைமையின் ஊடாக தண்டனைக்குரிய ஒரு குற்றமாக இனங்காணப்பட்டுள்ளது. முறையற்ற புலம்பெயர்வு இலங்கையின் குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழும் தண்டனைக்குரிய ஒரு குற்றமாகும்.

### புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு



புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (International Organization for Migration) என்பது ஐக்கிய நாடுகளின் புலம்பெயர்வுக்கான முதன்மையான சர்வதேச அமைப்பாகும்.

அதன் முக்கிய குறிக்கோள் யாதெனில் பாதுகாப்பானதும் முறையானதுமான புலம்பெயர்வினை ஊக்குவிப்பதாகவும். இதற்கு நாடளாவிய ரீதியில் பல்வேறு செயலமர்வுகளை நடாத்தி சமுதாயத்தை விழிப்புணர்வூட்டுவதற்கு அவ்வமைப்பின் உதவிக்கான பிரிவு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. மேற்படி செயலமர்வுகளில் புலம்பெயர்வினை பாதுகாப்பான முறையிலும் ஒழுங்கு முறையாகவும் எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பதைப்பற்றி புலம்பெயர்பவர்களுக்கு சரியானதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான தகவல்கள் வழங்கப்படுகின்றன.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு அப் பிரிவினால் பேணி வரப்படும் 0774410086 தொலைபேசி இலக்கத்தின் வாயிலாக தொடர்பு கொள்ள முடியும்.

பாதுகாப்பானதும் ஒழுங்கு முறையானதுமான புலம்பெயர்வின் மூலம் தனி நபர்களுக்கும் ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனும் கோட்பாட்டை புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு ஏற்றுக்கொள்கின்றது.

இன்றைய கட்டுரை கட்டாயமாக உங்களுக்கு பயனுடையதாக இருந்திருக்கும் என நம்புகின்றோம். கீழேயுள்ள பெட்டியில் கேட்கப்பட்டிருக்கும் வினாவுக்கான விடையை SMS முறையில் தரப்பட்டுள்ள தொலைபேசி எண்ணுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் சீட்டிழுப்பு முறையில் தெரிவு செய்யப்படுகின்ற வெற்றியாளர்களுக்கு தொலைபேசி முற்கட்டண (ரீலோட்) அட்டைகளை வெற்றி பெற முடியும். தெரிவு செய்யப்படுகின்ற வெற்றியாளர்களுக்கு தொலைபேசி மூலம் அது தொடர்பாக அறிவிக்கப்படும்.

வெளிநாட்டிற்கு செல்லுதல் தொடர்பாக அல்லது ஒழுங்கற்ற பயணத்தின் ஊடாக இன்னலுக்கு உள்ளாகியுள்ள நபர்கள் தொடர்பான நிவாரண நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருப்பின் 0774410086 தொலைபேசி இலக்கம் வாயிலாக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**“இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் சேவைகளுக்கு நுழைவினை பெற்றுக்கொள்ளக்கூடிய இணையத்தள முகவரி / பெயர் யாது?”**

இவ் வினாவுக்கான விடையை பின்வரும் முறையில் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் (IOM) நேரடி தொலைபேசி இலக்கம் 0774410086 இற்கு SMS (குறுஞ்செய்தி) வாயிலாக மார்ச் மாதம் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைப்பதன் மூலம் தொலைபேசி முற்கட்டண அட்டைகளை (ரீலோட்) சீட்டிழுப்பு முறையில் வெற்றி பெறலாம்.

SMS / குறுஞ்செய்தி அனுப்பி வைக்கப்பட வேண்டிய முறை

செய்தி / பால் / வயது / மாவட்டம் / விடை .................................... 0774410086

உதாரணம்
News/ M/ 14/ Colombo/ Answer
News / ஆண் / 14 / கொழும்பு / சரியான விடை


IOM
UN MIGRATION

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

## குறள் தரும் சிந்தனை



பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு

பகைவர்களையும் நண்பர்களாகக் கருதிப் பழகுகின்ற பெருந்தன்மையான பண்பை இந்த உலகமே போற்றிப் புகழும்.

# பொருளாதார மீட்சியின் பலன்கள் மக்களுக்கு கிடைக்க வேண்டும்

நாடு கடந்த வருடம் ஆரம்பப்பகுதி முதல் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெற்று வருகின்றது. குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமைப் பதவியை ஏற்றது முதல் முன்னெடுத்துவரும் பொருளாதார மீட்சிக்கான வேலைத்திட்டங்களின் பிரதிபலன்களே இவை. அதிலும் குறிப்பாக கடந்த சில தினங்களாகப் பாரிய திருப்புமுனைகள் ஏற்பட்டுள்ளன. அவற்றில் ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதியில் ஏற்பட்டுவரும் வீழ்ச்சி, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ள நீடிக்கப்பட்ட கடன் வசதி என்பன பாரிய முன்னேற்றங்களாகும்.

இவை ஜனாதிபதியின் தலைமைத்துவத்துக்கும் அவர் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வரும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் கிடைக்கப் பெற்றுள்ள பிரதிபலனே அன்றி வேறில்லை. பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீட்சி பெற்று வந்து கொண்டிருக்கும் சூழலில் மக்கள் மத்தியில் ஏற்கனவே ஏற்பட்டுள்ள நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் மேலும் வலுவடைந்த வண்ணமுள்ளன.

இந்நிலை நீடிக்கும் போது பொருளாதார நெருக்கடி தீரும் காலம் வெகுதூரத்தில் இல்லை என்பது பலரது கருத்தாகும். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை அபிவிருத்தி செய்யவென முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்களின் ஊடாக நாடு அடைந்து கொள்ளும் பிரதிபலன்கள் மக்களையும் சென்றடைய வேண்டும். குறிப்பாக பொருளாதார நெருக்கடி தீவிர நிலையில் இருந்த காலத்தில் டொலரின் பெறுமதி பெரிதும் அதிகரித்தது. அத்தோடு எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் பெரிதும் அதிகரித்தன. ஆனால் அந்நெருக்கடியில் இருந்து நாடு கட்டம் கட்டமாக மீட்சி பெற்று வந்து கொண்டிருக்கும் சூழலில், அதன் பிரதிபலன்கள் மக்களுக்கும் கிடைக்கப்பெற வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இந்நாட்டு பிரஜைகள் மத்தியில் காணப்படுகிறது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்காக முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களுக்கு கிடைக்கப்பெறும் பிரதிபலன்களுக்கு அமைய அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட பொருட்களின் விலைகள் அவ்வப்போது குறைக்கப்படவே செய்கின்றன. அந்த வகையில் தற்போது10 அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மீண்டும் குறைக்கப்பட்டுள்ளன. அத்தோடு பால்மாவுக்கு இவ்வாரம் விலை குறைக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இவை இவ்வாறிருக்க, இறக்குமதி செய்யத் தடை விதிக்கப்பட்டுள்ள 100_ 150 வரையான பொருட்களுக்கான தடையை நீக்கவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழலில் ஏப்ரல் மாதம் இலங்கை மக்களை அண்மித்துக் கொண்டிருக்கின்றது. கடந்த கால ஏப்ரல் மாதங்களைப் போலல்லாமல் இம்முறை ஏப்ரல் மிக முக்கியமான மாதமாக விளங்குகின்றது. அதாவது பல்லின மக்கள் வாழும் இந்நாட்டில் தமிழ்_ சிங்கள புத்தாண்டு, ஈஸ்டர் பண்டிகை, ரமழான் நோன்பு பண்டிகை என்பன இம்மாதமே வருகின்றன. இந்நாட்டின் அனைத்து பிரஜைகளும் பண்டிகைகளை சந்திக்கும் மாதமாக ஏப்ரல் காணப்படுகிறது.

இந்நிலையில் பொருளாதார மீட்சிக்காக முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் நாட்டுக்கு நன்மை அளித்து வருகின்ற போதிலும், மக்கள் முகம் கொடுக்கும் பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கள் இன்னும் முழுமையாக நீங்கியதாக இல்லை. அதனால்தான் அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களது விலைகளும் மேலும் குறைக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு பரவலாக காணப்படுகின்றது.

அதேநேரம் புறக்கோட்டை மொத்த விற்பனை வர்த்தகர்கள் மனம் வைத்தால் மேலும் பல பொருட்களின் விலைகளை குறைக்க முடியும் என்ற கருத்துக்களும் மக்கள் மத்தியில் நிலவவே செய்கின்றன.

2019 ஆம் ஆண்டின் பின்னர் இம்முறைதான் சுமுகமான நிலையில் பண்டிகையைக் கொண்டாடக்கூடிய சூழலை இந்நாட்டு பிரஜைகளுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. கடந்த 2020 ஆம், 2021 ஆம் ஆண்டுகளில் கொவிட் 19 தொற்று பரவுதல் அச்சுறுத்தல் காரணமாக பண்டிகைகளை நிம்மதியாகக் கொண்டாடக்கூடிய சூழல் இந்நாட்டு பிரஜைகளுக்குக் கிடைக்கப் பெறவில்லை. கடந்த வருடம் (2022) நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியும் மக்கள் பண்டிகைகளை கொண்டாடுவதற்குரிய வாய்ப்பை அளிக்கவில்லை.

ஆனால் தற்போது கொவிட் 19 தொற்று அச்சுறுத்தல் பெருவீழ்ச்சி நிலையில் காணப்படுவதோடு, பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு நம்பிக்கை அளிக்கும் வகையில் மீட்சி பெற்று வருகிறது.

ஆகவே கடந்த நான்கு வருடங்களுக்கு பிறகு தத்தம் பண்டிகைகளை சுமுகமான சூழலில் கொண்டாடக்கூடிய வாய்ப்பை இந்நாட்டு பிரஜைகள் பெற்றுள்ளனர். அதனால் அவர்கள் பண்டிகைகளை சிறப்பாகக் கொண்டாடுவதற்கு ஏற்ப பொருட்களின் விலைகளை குறைத்து வசதி அளிப்பது அவசியம். அது மக்களுக்கு நிவாரணமாகவும் சலுகையாகவும் அமையும்.

editor.tkn@lakehouse.lk

# விழிப்புலனற்றோர் தொழில்புரியும் ஆடைத்தொழிற்சாலை ஆரம்பம்

சிந்திக்கும் ஆற்றல் கொண்ட விழிப்புலனற்றவர்கள் பணி புரிவதற்காக நவீனமுறையில் அமைக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலையொன்று அனுராதபுரம் கஹட்டகஸ்திகிலிய பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விழிப்புலனற்றவர்களின் ஆடைத் தொழிற்சாலையின் உரிமையாளர் சீதுவை பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய பெண் ஒருவராவர். இவரது கணவர் கஹட்டகஸ்திகிலிய பகுதியைச் சேர்ந்தவர். அப்பெண் ஒரு வருடத்திற்கு முன்னர் குறித்த இடமொன்றுக்குச் சென்றிருந்த வேளையில் கண்பார்வையற்றவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளார். கண்பார்வையற்றவர்களுக்கு எதிர்கால நம்பிக்கையை ஊட்டும் வகையிலேயே இத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.





இங்கு விழிப்புலனற்றோர் மாத்திரம் பணிபுரிகின்றனர். அது சிறிய ஆடைத் தொழிற்சாலையாகும். 'நேத்ரஞ்சலா' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது 07 பேர் இந்நிலையத்தில் பணிபுரிகின்றனர். கண்பார்வையுள்ள ஒருவரும் பணிபுரிகின்றார். அவரது காலில் ஏற்பட்ட குறைபாடு காரணமாக அவர் சக்கர நாற்காலியின் துணையுடன் நிறுவனத்தின் பயிற்சி ஆலோசகராக பணிபுரிந்து வருகிறார். ஏனையோர் விழிப்புலனற்ற இளைஞர், யுவதிகளாவர். மிகவும் சுறுசுறுப்பாக கண்பார்வையுடையோர் போன்று அவர்கள் பணிபுரிந்து வருவதை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

தற்போது அங்கு பலவிதமான ஆடைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவர்கள் நாளொன்றுக்கு 12 இற்கும் மேற்பட்ட ஆடைகளை உற்பத்தி செய்து வருவதுடன் இவைகள் அனைத்தும் உள்ளூர் உற்பத்திகளை கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்றமை விசேட அம்சமாகும்.

மேலும் அவர்கள் சுற்றுச்சூழலுக்கு அமைய பைகளையும் உற்பத்தி செய்து வருகின்றனர். அதற்குள் மரங்களின்





விதைகள் உள்வாங்கப்பட்டுள்ளன. பைகளின் பாவனை முடிந்து அது வீசப்பட்டதன் பின்னர் அதன் மூலம் ஒரு தாவரம் முளைத்து, வளர்ந்து நிழல் தரக்கூடியதாகவும் பயன்தரக் கூடியதாகவும் இருக்கும் என்பதற்காக விதைகள் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

—மதார் தம்பி ஆரிப்
(அனுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# மல்வானை அல் மஹ்மூத் பாடசாலைக்காக தன்னை அர்ப்பணித்த அதிபர் உஸ்மான்

அதிபராக பணியாற்றிய எம். ரி.எம். உஸ்மான் அவர்கள் மொஹமட் தாலிப்_ ஜமீலா உம்மா தம்பதிகளுக்கு இரண்டாவது மகனாக 1970.06.04 அன்று இறக்குவானையில் பிறந்தார். இறக்குவானை அஸ்ஸலாம் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வி கற்ற இவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை வெளிவாரியாக பூர்த்தி செய்துள்ளார். பின்னர் தான் கற்ற பாடசாலையிலேயே இளம் வயதில் ஆசிரியராக சேவையாற்றிய சிறிது காலத்தில் உப அதிபராக நியமிக்கப்பட்டார்.



இவர் இறக்குவானை சென்ஜோன்ஸ் தேசிய பாடசாலை மற்றும் ரத்னாலாலோக்க தேசிய பாடசாலை ஆகியவற்றில் ஆசிரியராக சேவையாற்றியதுடன், அட்டுலுகம அல் கஸ்ஸாலி தேசிய பாடசாலையில் பிரதி அதிபராக நியமிக்கப்பட்டிருந்தார். பின்னர் 2008ஆம் ஆண்டு அதிபர் பதவி கிடைக்கப்பெற்று நாப்பாவல முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 3வருடங்கள் சேவையாற்றிய நிலையில் 2011 ஜூன் மாதம் மாதம் மல்வானை, உலஹிட்டிவல அல் மஹ்மூத் மகா வித்தியாலயத்திற்கு அதிபராக நியமிக்கப்பட்டார்.

மல்வானை உலஹிட்டிவல பிரதேசத்தில் அமைந்துள்ள அல் மஹ்மூத் பாடசாலையின் இரண்டாவது அதிபராக எம்.ரீ.எம். உஸ்மான் அதிபர் 2011 ஜூன் மாதம் தனது பாரியார் ஹலீமா ஆசிரியையுடன் இப்பாடசாலையில் இணைந்துகொண்டார்.

அதிபர் உஸ்மான் மேற்கொண்ட முயற்சியின் பயனாக இதுவரைக்கும் 105 மாணவர்கள் இப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். கனிஷ்ட பாடசாலையாக இருந்து வந்த இப்பாடசாலை வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டது. 2015ஆம் ஆண்டு க,பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு முதல் தடவையாக தோற்றி 90வீதமான மாணவர்கள் சித்தியடைந்திருந்தனர். அவரது முயற்சியின் பயனாக க.பொ.த. உயர்தரம் கற்கைக்கு 2020ஆம் ஆண்டு அனுமதி கிடைக்கப்பெற்றதன் மூலம் அல் மஹ்மூத் வித்தியாலயம் மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டது. சுமார் 12வருட காலம் இந்த பாடசாலைக்காக தன்னை அர்ப்பணித்த அதிபர் உஸ்மான், தனது இடமாற்றத்துக்காக காத்துக் கொண்டிந்த வேளையில் திடீர் சுகவீனமுற்று காலமானார். அவரது சேவைகள் என்றும் மக்கள் மனத்தில் நிலைத்திருக்கும்.

—எம்.ஆர்.எம்.வசீம்
உலஹிட்டிவல, மல்வானை

# அந்தமான், நிக்கோபார் தீவுகளின் பாரம்பரியம் பேணுவதில் இந்திய அரசாங்கம் அதிக அக்கறை

இந்தியாவுக்குச் சொந்தமான தீவுகளில் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இந்தியாவின் நீண்டகால வரலாற்றின் பாரம்பரிய அடையாளங்களாக இத்தீவுகள் கருதப்படுகின்றன. எனவே அவ்விரண்டு தீவுகள் தொடர்பாகவும் இந்தியாவுக்கு விசேட அக்கறையும் அபிமானமும் உள்ளன. அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் உண்மையில் இந்தியப் பெருங்கடலின் ஆழமான நீலநீரில் பிரகாசிக்கும் மரகத நகைகள் என்று வர்ணிக்கப்படுகின்றன. அழகான கடற்கரைகள், தெளிவான வானம் மற்றும் வெப்பமண்டல காடுகள் போன்ற இயற்கை அதிசயங்களை கொண்டதாக இத்தீவுகள் உள்ளன.

அந்தமான் தீவுகளைப் பொறுத்தவரை அங்குள்ள ஹேவ்லாக், போர்ட் பிளேர் மற்றும் நீல் தீவுகளை சுற்றுலாப் பயணிகள் கண்டிப்பாக பார்க்க வேண்டும். அந்தமான் தீவுகள் என்பது பல தீவுகளின் தொகுப்பாகும். அந்தமான், நிக்கோபார் தீவுகளுக்கு இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். அழகான கடற்கரைகள் அங்கு உள்ளன. தெளிவான நீரில் நீந்துவதும் சுழியோடுவதும் அற்புதமான அனுபவங்கள். அழகிய பவளப்பாறைகள் மற்றும் கடல் வாழ் உயிரினங்களைப் பார்த்து இரசிக்க முடியும். அந்தமான், நிக்கோபார் தீவுகள் சதுப்புநிலக் காடுகளின் தாயகமாகவும் உள்ளன. சுண்ணாம்புக் கற்கள் அடங்கிய தீவுகளும் அங்குள்ளன. அங்குள்ள சில தீவுகளில் பாரம்பரிய பழங்குடியினர் வாழ்கின்றனர். அவர்கள் வெளியுலகத்துடன் தொடர்பு



வைத்துக் கொள்ள விருப்பமில்லாதவர்களாக வாழ்கின்றனர்.

அந்தமானின் போர்ட் பிளேர், மரைன் பார்க் அருங்காட்சியகம் மற்றும் அதன் மையத்தில் அமைந்துள்ள காலனித்துவ காலத்தின் சிறைச்சாலைகள் போன்றவற்றை சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்துடன் பார்வையிடுகின்றனர். உலகப் புகழ்பெற்ற மற்றும் ஆசியாவின் சிறப்பான கடற்கரைகளைக் கொண்ட தீவுகள் அந்தமான் தீவுகளில் மட்டுமே அமைந்துள்ளன. பவளப் பாறைகளைப் பார்வையிடுவதாயின் கண்ணாடிப் படகுகளில் சவாரி செய்யலாம். அந்தமான் தீவுக்கூட்டத்தில் உள்ள தீவுகளில் ஒன்றான வடக்கு சென்டினல் தீவில் வாழ்கின்ற பழங்குடியினர் வித்தியாசமானவர்கள். அத்தீவானது பழங்குடியினரான சென்டினலீஸ் மக்களின் தாயகமாகும். அவர்கள் தீவின் வெளியில் இருந்து எந்த மனித தொடர்பையும் அனுபவித்ததில்லை.

வடக்கு மற்றும் தெற்கு சென்டினல் தீவு ஆகிய இரண்டிலும் வசிக்கும் சென்டினலீஸ் பழங்குடியினர், மனிதத் தொடர்புகளிலிருந்தும் தங்களைத் துண்டித்துக் கொண்டுள்ளனர். இந்திய அரசாங்கத்தால் பெரிதும் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் ஒன்றாக அது உள்ளது. சென்டினலீஸ் பழங்குடியினர் பூமியின் கடைசி தொடர்பு மக்களாகக் கருதப்படுகிறார்கள். அதேசமயம் வங்காள விரிகுடாவின் தெற்கே அமைந்துள்ள நிக்கோபார் தீவுகள் தாய்லாந்தின் மேற்கில் அந்தமான் கடலால் பிரிக்கப்பட்ட தீவுகளின் தொகுப்பாகும். நிக்கோபார் தீவுகளில் மக்கள் வசிக்காத இடங்கள் அதிகம் உள்ளன. இப்பகுதியில் பழங்குடியினர் வாழ்கின்றனர். நிக்கோபார் தீவுகளின் தலைநகராக கார் நிக்கோபார் உள்ளது. அங்கு வாழ்கின்ற நிக்கோபாரீஸ் மக்கள் இந்தியாவின் பழைமையான பழங்குடியினங்களில் ஒன்றாகும். இவ்விரு தீவுகளின் வரலாற்றுப் பாரம்பரியத்தைப் பேணுவதில் பாரதீய ஜனதா தலைமையிலான அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி வருகின்றது. இந்த அக்கறையை வெளிப்படுத்தும் விதத்தில் அந்தமான், நிக்கோபார் தீவுகளின் பெயரில்லாத 21 பெரிய தீவுகளுக்கு 'பரம்வீர் சக்ரா' விருது பெற்ற 21 வீரர்களின் பெயர்களைச் சூட்டும் நிகழ்ச்சி அண்மையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றார். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தீவில் கட்டப்படவுள்ள நேதாஜிக்கு அர்ப்பணிக்கப்பட்ட தேசிய நினைவுச் சின்னத்தின் மாதிரியை பிரதமர் மோடி அன்றைய தினம் திறந்து வைத்தார். "வரலாறு உருவாக்கப்படும் போது, வருங்கால சந்ததியினர் அதை நினைவில் வைத்துக் கொள்வதும், மதிப்பிடுவதும் மட்டுமல்லாமல், அதிலிருந்து தொடர்ந்து உத்வேகத்தையும் பெறுகிறார்கள்" என்று நரேந்திர மோடி அங்கே குறிப்பிட்டிருந்தார். "இந்த நாள் வருங்கால சந்ததியினரால் விடுதலையின் குறிப்பிடத்தக்க அத்தியாயமாக நினைவுகூரப்படும். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்திய விடுதலை வீரர்கள் சிறைவைக்கப்பட்டிருந்த செல்லுலார் சிறைச்சாலையின் அறைகளில் இருந்து, மிகுந்த வேதனையும், வலியும் நிறைந்த குரல்கள் இன்றும் கேட்கின்றன"என்று பிரதமர் குறிப்பிட்டிருந்தார். இந்திய தேசத்தின் ஒவ்வொரு பகுதியும் நேதாஜியின் பாரம்பரியத்தை போற்றி வணங்குகின்றது. கடல் பல்வேறு தீவுகளை இணைப்பது போல, 'ஒரே பாரதம், உன்னத பாரதம்' என்ற

## இரு தீவுகளும் பாரத பெருந்தேசத்தின் பழைமைமிகு அடையாளங்கள்!

உணர்வு, அன்னை இந்தியாவின் ஒவ்வொரு குழந்தையையும் ஒன்றிணைக்கிறது"என்று பாரத தேசத்தின் மீதான தனது பாசத்தை உணர்த்தியிருந்தார் பிரதமர் மோடி. பிரதமர் நரேந்திர மோடி காணொலி மூலம், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் 21 பெரிய தீவுகளுக்குப் பரம் வீர் சக்ரா விருது பெற்ற 21 வீரர்களின் பெயர்களைச் சூட்டி அவர்களை கௌரவப்படுத்தியிருந்தார். பங்கேற்றார். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தீவில் கட்டப்படவுள்ள நேதாஜிக்கு அர்ப்பணிக்கப்பட்ட தேசிய நினைவிடத்தின் மாதிரியையும் பிரதமர் திறந்து வைத்தார். நேதாஜி சுபாஷ் சந்திரபோசின் வாழ்க்கையைப் போற்றும் வகையில், அவர் தங்கியிருந்த தீவில் புதிய நினைவிடம் அமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



பா. ஜ.க அரசானது அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் மீது மாத்திரமன்றி, இந்தியாவின் விடுதலைக்காக தியாகம் செய்துள்ள தியாகிகள் மீதும் பெரும் கௌரவம் வைத்துள்ளதென்பதற்கு பிரதமர் நரேந்திர மோடியின் இந்நடவடிக்கையானது ஒரு உதாரணமாகும். அதன் காரணமாகவே அந்தமான் நிக்கோபார் தீவுகளில் பெயரிடப்படாத தீவுகளுக்கு இந்திய இராணுவ



வீரர்கள் மற்றும் ஆயுதப்படை வீரர்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அந்தமான் நிக்கோபார் தீவுகள் நீர், இயற்கைச் சூழல், சுற்றுச்சூழல், வீரம், பாரம்பரியம், சுற்றுலா, ஆக்கம் மற்றும் ஊக்கம் போன்றவற்றின் தொகுப்பாகும். இத்தகைய பெருமைமிக்க ஆற்றலைக் கண்டறிந்து பெருமைகளைப் பறைச்சாற்ற வேண்டும் என்பதில் இன்றைய இந்திய மத்திய அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

பாரதீய ஜனதாவின் ஆட்சிக்காலத்தில் அந்தமான், நிக்கோபார் தீவுகளில் பல்வேறு அபிவிருத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த 2014 ஆம் ஆண்டை விட 2022 இல் அந்தமானுக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இரண்டு மடங்கு அதிகமாகும். இதன் விளைவாக வேலைவாய்ப்பு அதிகரித்து சுற்றுலா தொடர்பான வருவாய் அதிகரித்துள்ளது. அந்தமானுக்கும் விடுதலைப் போராட்ட வரலாற்றுக்கும் இடையே உள்ள தொடர்பு குறித்து அறிந்துகொள்ளும் ஆர்வம் சுற்றுலாப் பயணிகளிடம் மிகுதியாக ஏற்பட்டுள்ளது. இன்றைய காலகட்டத்தில் பலர் அங்கு வந்து வரலாற்று அனுபவங்களைக் கண்டு உணர்கின்றனர். எந்தவொரு சுற்றுலாத் தலத்துக்கும் சிறந்த இணையதள இணைப்பு என்பது முதலாவது முன்னுரிமையாக இன்று மாறிவிட்டது. முன்னதாக, போதிய மொபைல் மற்றும் இணையதள இணைப்பு வசதி இல்லாததால், உலக நாடுகளைச் சேர்ந்த மற்றும் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள், ஏராளமான பிரச்சினைகளை எதிர்கொண்டனர். அவர்கள் தனது குடும்பம் மற்றும் தொழிலிலிருந்து விலகி இருந்தனர். தற்போது இந்தப் பிரச்சினையும்கூட முடிவுக்கு வர உள்ளது. தற்போது இணையதள வசதி மிகவும் சிறப்பாக அமைய உள்ளது. எனவே, சுற்றுலாப் பயணிகள் நீண்டகாலத்துக்கு இங்கு பயணம் மேற்கொள்வார்கள்.

இந்தியாவின் பொருளாதார பாதுகாப்பு ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பின் முக்கிய மையமாக அந்தமான் நிக்கோபார் திகழ்கிறது. இந்தியாவின் வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு வலிமையின் மையமாக ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்தியப் பெருங்கடல் திகழ்கிறது. இந்தோபசிபிக் ஒத்துழைப்பு மற்றும் வர்த்தகத்தில் புதிய கொள்கை மற்றும் நடைமுறைகளை தற்போது இந்தியா பின்பற்றி வருகிறது. அந்தமான் நிக்கோபார் உள்ளிட்ட தீவுகளின் முக்கியத்துவம் மேலும் அதிகரித்துள்ளது. கிழக்கு நோக்கிய கொள்கையின்கீழ், கிழக்கு ஆசிய நாடுகள் மற்றும் பிற கடலோரப் பகுதி நாடுகளுடன் இந்தியாவின் வலுவான நல்லுறவை ஏற்படுத்துவதற்கு அந்தமான் நிக்கோபாரின் பங்களிப்பு மிகவும் அதிகமாக உள்ளது.

இது மேலும் அதிகரிக்க உள்ளது. தீவுகளுக்கும், மற்ற நாடுகளுக்கும் இடையேயான நீர்வழி இணைப்பு வசதிகளை அதிகரிப்பதற்காக கொச்சி கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்டு வரும் 4 கப்பல்களும் எதிர்வரும் மாதங்களில் விநியோகிக்கப்படும். தன்னிறைவு தீர்மானத்துடன் இந்தியா இன்று முன்னோக்கி நடைபோடுகிறது. உலகளாவிய விநியோக மற்றும் மதிப்பு சங்கிலியில் முக்கிய செயல்பாட்டாளராக உருவாக்கிக் கொள்வதில் தீவிரமாகப் பணியாற்றி வருகிறது.

# நகர்வலம்



## அநுராதபுரம் மாவட்ட செயலகத்தில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு

திறப்பனை தினகரன் அ.புரம் மேற்கு தினகரன் நிருபர்கள்



அநுராதபுரம் மாவட்ட செயலகத்தின் பௌத்த நலன் புரிச் சங்கம் வருடாந்தம் நடாத்தி வரும் இரத்ததான நிகழ்வு மூன்றாவது தடவையாகவும், இம்முறை ஏற்பாடு செய்யப்பட்டு மாவட்ட செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன் போது நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு தமது இரத்தத்தை தானமாக வழங்கினர்.

அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தரவின் பங்குபற்றலுடன் இரத்ததானம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. அநுராதபுரம் மாவட்ட செயலாளர் அலுவலகம், அரச நிறுவனங்கள், பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொது மக்களும் இந்த இரத்த தானம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் மாவட்ட செயலாளர் உட்பட அநுராதபுரம் மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் யு.எஸ். அருண ரவி, நிருவாக உத்தியோகத்தர் தம்மிக்க பல்லேவத்த உட்பட அதிகாரிகள் பலரும் இதன் போது கலந்து கொண்டிருந்தனர்.

## எதிர்க்கட்சிகளின் வேலை விமர்சிப்பதே நாட்டை கட்டியெழுப்பும் திட்டமில்லை

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், எதிர்க்கட்சிகளுக்கு விமர்சிக்க மட்டுமே தெரியும்.நாட்டை மீட்பதற்கான எந்த திட்டமும் அவர்களிடம் இல்லை என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா, கரசனாகல, பஸ்னாகொட நீர் விநியோகத் திட்டத்தின் முதற்கட்ட நிகழ்வில் நேற்று (25) கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பஸ்யால எல்லலமுல்ல, முஹந்திரம்வத்த மற்றும் கலல்பிட்டிய தாதுகந்த பிரதேசங்களில் பயனாளி குடும்பங்களுக்கு புதிய நீர் இணைப்புகள் அமைச்சர் தலைமையில் வழங்கப்பட்டன.

இந்த நீர் வழங்கல் திட்டத்தின் மூலம் கம்பஹா மாவட்டத்தின் 440 கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள சுமார் நான்கு இலட்சம் மக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ய முடியும். இதற்காக செலவிடப்பட்ட மொத்தத் தொகை 33,060 மில்லியன் ரூபாவாகும்.

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உழைக்கும் மக்களைக் கொண்ட அரசியல் கட்சியாகும். உங்கள் கிராமத்தைப் பாருங்கள். கிராமத்தில் சாலை அமைத்தால், குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு கிடைத்தால், கிராமத்தில் ஏதாவது பணிகள் நடந்தால், அது மொட்டுவின் வேலை தான். எங்கள் கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கிராம மக்களுக்காக உழைத்தவர்கள்.

கடந்த காலத்தில் நாட்டில் போராட்டத்திற்கு சென்றவர்கள் ஏராளம். பொருளாதாரச் சிக்கல் காரணமாக சென்றனர். நாங்கள் அதற்கு குற்றம் சொல்லவில்லை. எங்களுக்கும் பிரச்சினை இருந்தது. அந்த மக்கள் அமைதியாகப் போராடி ஆட்சியைக் கவிழ்க்க வரவில்லை. தங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண அரசாங்கத்திடம் கூற வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க, நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட வேண்டும்.இன்று நாட்டில் அமைதியும் சட்டமும் நிலைநாட்டப்பட்டுள்ளது. அதன் பிறகே பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண வேண்டும். அதற்காக உழைத்து வருகிறோம். அதற்கு அரசு என்ற வகையில் உறுதியான முடிவுகளை எடுக்க வேண்டும் என்றார்.



இலங்கை விமானப்படையின் 72 வது ஆண்டு நிறைவினை முன்னிட்டு விமானப்படை தளபதி எயா மார்ஷல் சுதர்சன பத்திரன அவர்களின் தலைமையில் விமானப்படையின் சகல கொடிகளையும் வைத்து அநுராதபுரம் புனித ஜய ஸ்ரீ மஹா போதியில் சம்பிரதாய பூர்வமான ஆசிர்வாதம் இடம்பெறுவதையும் மத அனுஷ்டானத்தில் ஈடுபட்டிருப்பதையும் படத்தில் காணலாம். படம்: அநுராதபுரம் தினகரன் நிருபர்

## களுத்துறை மாவட்ட இ.போ.ச டிப்போக்களுக்கு பஸ் வண்டிகள்

பாணந்துறை மத்திய குறூப் நிருபர்

போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவின், நாட்டின் கிராமிய பிரதேச பொது மக்களின் போக்குவரத்துச் சேவைகளை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் களுத்துறை மாவட்ட இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்களுக்கு ஆறு புதிய பஸ் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

பஸ் வண்டிகள் கையளிப்பு நிகழ்வு களுத்துறை 'போதி' அருகாமையில் சமய நிகழ்வுகளுடன் இடம்பெற்றது. இதில் போக்குவரத்து அமைச்சர் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பஸ் வண்டிகளை கையளித்து வைத்தார்.





களுத்துறை, மதுகம, அலுத்கம மற்றும் பாணந்துறை இ.போ.ச.டிப்போக்களுக்கு ஆறு புதிய பஸ் வண்டிகள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த, பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹித அபேகுணவர்த்தன, சஞ்சீவ எதிரிமான்ன, லலித் வர்ணகுமார மற்றும் டிப்போ முகாமையாளர்களும் நிகழ்வில் கலந்தை கொண்டனர்.



மன்னார், கொண்டச்சி மு. வித்தியாலய மாணவர்களுக்கான இரண்டு நாள் விளையாட்டு பயிற்சி பாசறை, மாவட்ட விளையாட்டு பயிற்றுவிப்பாளர் P. யூலியஸ் கிளிற்றஸ் ,சித்திவிநாயகர் தேசிய பாடசாலை விளையாட்டு பயிற்றுவிப்பாளர் R. றினோசன் லெம்பட் மேலும் கிரியோன் குரூஸ், டிலான் ஆசிரியர், அதிபர் தலைமையில் கொண்டச்சி மு. வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றபோது... (தகவல்; நிஹ்ரி யாசின்)




கொழும்பு ஹமீத் அல் ஹுஸைனி கல்லூரியில் அதிபராக கடமையாற்றி ஓய்வு பெறும் ஏ.கே.ரி அதஹான் மற்றும் பாடசாலை ஆசிரியர்களை சேவை நலன் பாராட்டும் நிகழ்வு அண்மையில் செரன்டிப் கிராண்ட் மண்டபத்தில் நடைபெற்றது. ஜெய்னுலாப்தீன் (ஜைன் ஹாஜி) அவர்களை தலைவராகக்கொண்டு இயங்கும் Light for life செயற்குழு,பாடசாலை அபிவிருத்திக்குழு,பழைய மாணவர் சங்கம் போன்றன இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக முன்னாள் எம்.பி முஜிபுர் ரஹ்மான் கலந்து சிறப்பித்தார். (படம் தெஹிவளை கல்கிசை விசேட நிருபர்)



தமிழ்நாட்டில் வெளிவரும் இனிய நந்தவனம் சஞ்சிகையின் ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரன் தலைமையில் இலங்கைக்கு விஜயம் செய்த குழுவினர் நாட்டின் பல நகரங்களுக்கு விஜயம் செய்து பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட போது பிடிக்கப்பட்ட படங்கள்.



கனடா விழித்தெழு பெண் சர்வதேச அமைப்பு அண்மையில் கொழும்பில் நடத்திய சாதனைப் பெண்கள் கௌரவிப்பு நிகழ்வில் செல்வி சகியா மவுஸும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ராதாகிருஷ்ணன் இவருக்கு விருது வழங்கிய போது எடுக்கப்பட்ட படம். (ஏ.எம் நவாஸ்)

## புலமைப்பரிசில்...

பரிசில் புள்ளி மற்றும் வெட்டுப் புள்ளி ஆகியவற்றை தீர்மானிப்பது யார்? மற்றும் எந்த அடிப்படையில் அவை மேற்கொள்ளப்படுகின்றன என்ற எந்தவித தெளிவும் மாணவர்களுக்கோ அல்லது மாணவர்களின் பெற்றோர்களுக்கோ கிடையாது.

இத்தகைய நிலையில் கல்வியமைச்சின் அதிகாரிகளினால் தர்க்க ரீதியிலோ அல்லது எந்த ஒரு சாதாரண அடிப்படையிலோ அல்லாமல் தன்னிச்சையாக தத்துமது தனி விருப்பத்திற்கு ஏற்ப மேற்படி புள்ளிகள் தீர்மானிக்கப் படுவதாக என்னால் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கு பல தடவைகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

அது தொடர்பில் குற்றத் தடுப்பு விசாரணை திணைக்களத்திற்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனினும் எந்த வகையிலும் அதில் நிவர்த்தி செய்யப்படவில்லை என்றும் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் தொடர்பில் ஆழமாக விடயங்களை ஆராய்ந்து சாட்சியங்களை அழைத்து விசாரணை நடத்துவதற்கு முடியுமான வகையில் பாராளுமன்ற தெரிவுக் குழு ஒன்றை அமைக்க வேண்டும் என தான் யோசனையை முன் வைப்பதாகவும் அடுத்து வரும் பாராளுமன்ற அமர்வின் போது அதற்கான யோசனையை தாம் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## நாட்டுக்காக...

தெரிவித்துள்ள ஜனாதிபதி, அவையனைத்தும் பொருளாதார மறுசீரமைப்புக்கான அர்ப்பணிப்பிலேயே தங்கியுள்ளதெனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அதற்காக நமது மூலோபாய அமைவிடத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். நாம் பலமான ஜனநாயக கட்டமைப்பினையும் திறந்த பொருளாதாரத்தையும் கொண்டுள்ள சிறியதொரு நாடு என்ற வகையில் அரசியல் ஸ்திரத்தன்மையை பேணி வருகின்ற அதேவேளை, எமது அயல்நாடும் நீண்ட கால உறவை பேணிவரும் நாடுமான இந்தியாவை வலயத்தின் பாதுகாவலனாக கருதுகிறோம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பழமையான பொருளாதார கொள்கைகளுடன் புத்துயிர் பெற்றுவருகின்ற ஆசிய வலயம் மற்றும் இந்தியாவின் அபிவிருத்திச் செயற்பாடுகளோடு கைகோர்த்துக் கொண்டு பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பணிகளில் இலங்கை தற்போது முன்னின்று செயற்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.. இந்தியாவுடன் காணப்படுகின்ற சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் தொழில்நுட்ப ஒப்பந்தமாக மாற்றியமைத்துக்கொள்வது சிறந்தது என்றும் ஆசியாவின மீக நீண்ட பொருளாதார கூட்டிணைவுடன் பொருளாதார ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவதால் உலகின் மிகப்பெரிய பொருளாதார குழுவுடன் முன்னோக்கிச் செல்வதற்கான வாய்ப்பு எமக்குக் கிட்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த வகையில் அடுத்த 25 வருடங்களுக்குள் செழிப்பான மற்றும் வலுவான நாடாக இலங்கையை கட்டியெழுப்புவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள சமூக பொருளாதார மற்றும் அரசியல் மறுசீரமைப்புக்கள் தொடர்பில் விரிவான கருத்துக்களை முன்வைத்த ஜனாதிபதி, , இலங்கையின் இன வேறுபாட்டு பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக அனைத்து இன மக்களுக்கும் சம அந்தஸ்து மற்றும் வளங்களை பெற்றுக்கொடுக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

உள்ளக பேச்சுவார்த்தைகள், நெருக்கமான புரிந்துணர்வு மற்றும் இனக் குழுக்கள் இடையிலான பல்வகைத் தன்மையை புரிந்துகொள்வதன் மூலமே தேசிய ஒற்றுமையை மேம்படுத்த முடியும் என்றும் இதன்போது அவர் வலியுறுத்தியுள்ளார். அத்தோடு, செல்வந்த நாடுகளின் மோதல் இலங்கைக்கு திறக்கப்படவுள்ள இந்திய மற்றும் ஆபிரிக்க வலயத்தின் பொருளாதார சந்தை வாய்ப்புக்களுக்கு தடையாக அமையாது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரபா கணேசன்...

தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி உதயமாகியுள்ளது.

ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தபால் பெட்டி சின்னத்தில 9 சிவில் அமைப்புகள் இணைந்து தேசிய ஜனநாயக கூட்டணியை உருவாக்கியுள்ளன. இந்தக் கூட்டணியில் சிவில் செயற்பாட்டாளரும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவருமான அசேல சம்பத், தமிழ்த் தேசிய பணிக்குழு தலைவர் நல்லையா குமரகுருபரன், கொழும்பு மாவட்ட மகா சபைத் தலைவர் எஸ். ராஜேந்திரன், அகில இலங்கை சிறுகைத்தொழில் சங்கத்தின் ஸ்தாபகர் நிலூஷ குமார, தாழ்நிலை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் ருவன் கால்லகே, தேசிய நுகர்வோர் சங்கத்தின் தலைவர் என். பீ.கே. வணிகசிங்க, முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் தலைவர் ஏ.ஜீ.எச். இஸ்மாயில், தோட்டத் தொழிலாளர் உரிமை மையத்தின் தலைவர் எஸ்.ஜே.சீ. விஜேதுங்க, இலங்கை சமத்துவக் கூட்டணியின் பொதுச் செயலாளர் குவால்டீன் ஆகியோர் தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைந்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். 9 சிவில் அமைப்புக்களுடன் ஒன்றிணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று முன்தினம் (25) காலை பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

எதிர்காலத்தில் மக்களின் தேவைகளையும் உரிமைகளையும் வென்றெடுத்து, தமக்கே உரிய தனித்துவமான பாதையில் பயணிப்பதே எமது பிரதான நோக்கமாகும் என ஜனநாயக தேசியக் கூட்டணித் தலைவர் பிரபா கணேசன் தனது உரையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்தக் கூட்டணியானது வித்தியாசமான ஓர் கூட்டணியாகும். இந்த சிவில் அமைப்புக்கள் மக்களோடு மக்களாக நின்று செயற்படுகின்றன. மக்களின் தேவைகள் மற்றும் அபிலாஷைகளை சரியான வகையில் புரிந்துகொண்டு எமது அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லக்கூடிய காரணத்தினால்தான் இவ்வகையான கூட்டணியை நாம் அமைத்தோம். எமது கூட்டணியானது ஏனைய அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து உரவாக்கிய கூட்டணியாக அல்லாமல், சிவில் அமைப்புகளுடன் ஒன்றிணைந்த கூட்டணியாகும் இந்த கூட்டணியுடன் இரண்டு அரசியல் கட்சிகள் இணைவதற்கு தங்களது ஆர்வத்தை தெரிவித்திருந்தபோதிலும் அவற்றை நான் தள்ளி வைத்துவிட்டே இந்தக் கூட்டியை ஆரம்பித்தேன் என்றார். இந்நிகழ்வில் ஜனநாயக மக்கள் காங்கிரஸின் பொதுச் செயலாளர் சுரேஷ் கங்காதரன், ஜனநாயக மக்கள் காங்கிரஸின் சிரேஷ்ட உப தலைவர் எஸ். ஜேக்கப் ஆகியோர் உரை நிகழ்த்தியதுடன் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் ஜோசப் பெர்னாண்டோ உள்ளிட்ட கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## பால் தேநீரின்...

பால்மாவின் விலை குறைக்கப்பட்டுள்ளமையை அடுத்து இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார். இதற்கமைய பால் தேநீர் கோப்பை ஒன்றின் விலை 90 ரூபாவாக குறைக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இதேவேளை, பால்மாவின் விலையும் இன்று முதல் குறைப்பதற்கு பால்மா நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன. இதன்படி, ஒரு கிலோகிராம் பால்மாவின் விலையை 200 ரூபாவாலும், 400 கிராம் பால்மாவின் விலையை 80 ரூபாவாலும் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## போராட்டங்களுடன்...

பண்டாரகம தேர்தல் தொகுதியில் இடம்பெற்ற பொதுஜன பெரமுன காரியாலயத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

களுத்துறை மாவட்ட பொதுஜன பெரமுனவின் குழு தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரோஹிதஅபேகுணவர்தன உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.இதில் தொடர்ந்தும் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, தற்போது பெரும்பாலானோர் பொதுஜன பெரமுன ஆதரவாளர்களைப் பயமுறுத்தி அவர்களின் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு முயற்சிக்கின்றனர்.

மே மாதம் அல்ல,ஏப்ரல் மாதம்முதலே வீடுகளைத் தாக்குவதற்கு ஆரம்பித்து விட்டனர்.ஏப்ரல் 09ஆம் திகதி எமது அப்பாவி ஆதரவாளர்கள் காலிமுகத்திடலில் தாக்குதல் நடத்தினார்கள் என்று கூறப்படுவதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்.

அவர்கள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜக்ஷவைச் சந்திப்பதற்கே வருகை தந்திருந்தனர்.எ வ்வாறெனினும், ஏப்ரல் மாதத்திலேயே செஹான் சேமசிங்க, ரொஷான்ரணசிங்க,கஞ்சன விஜேசேகர ஆகியோரின் வீடுகளைத் தாக்க ஆரம்பித்துவிட்டனர்.

எனினும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கே இறுதி இலக்கு என்னவென்று தெரியாதிருந்தது.அவ்வாறு, போராட்டக்காரர்களுக்கே அதன் இலக்குத் தெரியாமலிருந்தால்,இதன் பின்னணியிலிருந்தோர் யார்?சில அரசியல் கட்சிகளே இதற்குப் பின்னணியில் இருந்தன என்பதை இப்போதும் நான் பயமின்றிக் கூறுவேன். போராட்டம் என்ற போர்வையில் தமது அரசியல் அணியை கட்டியெழுப்ப முயற்சி செய்வார்களானால் அது போராட்டக்காரர்களுக்கு புரியாதிருந்தால், அது தொடர்பில் எமக்குப் பிரச்சினையுள்ளது.நாம் இப்போது அவர்களையும் அழைக்கின்றோம்.நாட்டைப்பற்றிச் சிந்தித்து புதிய அரசியல் பயணத்தை முன்னெடுத்துச் செல்வதற்கே இந்த அழைப்பை அவர்களுக்கு நாம் விடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பஸ் கட்டணங்கள் ...

நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார். வெளிநாட்டு அந்நிய செலாவணி ஸ்திரப்படும் நிலையில் டொலருக்காக வழங்க வேண்டிய ரூபாவின் தொகை குறைவடியும் போது எமக்கான எரிபொருள் செலவும் குறைவடையும். அதேபோன்று ஏனைய உதிரிப் பாகங்கள் மற்றும் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கான செலவுகள் குறைவடையும் நிலையில் அதன் பயனை மக்களுக்கு வழங்க முடியும். அதற்கி ணங்க விலைச் சூத்திரத்தின் அடிப்படையில் பஸ் கட்டணங்களை குறைக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். விலைச் சூத்திரத்திற்கு இணங்க எரிபொருள் விலைகள் குறையுமானால் பஸ் கட்டணத்தை குறைக்கக்கூடிய நிலை ஏற்படும் என மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். என்பதைச் சுட்டிக் காட்டியுள்ள அமைச்சர் பந்துல குணவர்தன, அந்த பிரதிபலனை மக்களுக்கு பெற்றுக் கொடுக்க முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார். அதேபோன்று உலகச் சந்தையில் எரிபொருளின் விலை அதிகரிக்கும் போது இங்கு அதனை அதிகரிக்கவும் குறைவடையும் போது அதனை இங்கே குறைப்பதற்கும் சந்தர்ப்பம் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அரசின் தலையீடு...

ஜனாதிபதி செயலகத்தில் அண்மையில் இடம்பெற்ற அனைத்து உர வகைகளையும் விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுப்பது சம்பந்தமான விசேட பேச்சு வார்த்தையின் போதே ஜனாதிபதியின் ஆளணி பிரதானி சாகல ரத்நாயக்க இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

அரசாங்கம் விவசாயிகளுக்கு உரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கான நிதியை வழங்குவதுடன் அரசாங்கம் தலையிட்டு வெளிநாடுகளில் இருந்து பெற்றுக் கொள்ளும் நிதியை உர கொள்வனவுக்காக தனியார் துறை நிறுவனங்களுக்குப் பெற்றுக் கொடுத்து உர வகைகளின் விலைகளை குறைப்பதற்கு தலையீடு செய்யுமாறும் சாகல ரத்நாயக்க அதிகாரிகளுக்கு பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

அவ்வாறு தனியார் துறை நிறுவனங்கள் புற கொள்வனவை மேற்கொள்ளும் போது அதற்கு வெளியே அரசாங்கம் உர வகைகளை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் தலையீடு செய்யாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ரூபாவின் பெறுமதி ஸ்திரம டைந்துள்ள நிலையில் உலக வங்கி போன்ற நிறுவனங்கள் விவசாயத் துறைக்கு உதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கு முன் வரும் நிலையில் உரங்களின் விலை மேலும் குறைவடையக் கூடும் என்றும் அவர் அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கிணங்க அதிகாரிகளின் ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்ட பின்னரே உரம் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளில் அரசாங்கத்தின் தலையீடுகள் இல்லாதவாறு உரிய வேலைத் திட்டம் ஒன்றை தயாரிக்குமாறு குறிப்பிட்டுள்ளார்.

## வீதிகளின்...

பகிர்ந்தளிக்கும் நிகழ்வில் உரையாற்றிய போக்குவரத்து, ஊடகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் 75 வது சுதந்திர தினத்தையொட்டி இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் நாட்டிலுள்ள கிராமிய பாதைகளில் போக்குவரத்து சேவையை பலப்படுத்தும் வகையில் 500 புதிய பஸ் வண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அந்த பஸ் வண்டிகளை பகிர்ந்தளிக்கும் நிகழ்வின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றியுள்ள அமைச்சர்,

நாட்டில் நிலவிய கொரோனா வைரஸ் சூழ்நிலை காரணமாக கடந்த இரண்டு வருடங்களிலும் தமிழ், சிங்கள புது வருட பண்டிகையை வழமை போன்று சிறப்பாக கொண்டாடுவதற்கான சந்தர்ப்பம் நாட்டு மக்களுக்குக் கிடைக்கவில்லை.

அதனால் பெரும்பாலான உள்நாட்டு உற்பத்தியாளர்கள் தமது பொருட்களை விற்பனை செய்வதில் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேர்ந்தது.

அதனைக் கவனத்தில் கொண்டு சுய தொழிலில் ஈடுபடுவோர் மற்றும் சிறு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்களுக்கு எந்த கட்டண அறவீடுமின்றி வீதிகளின் இரு பக்கத்திலும் விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்த பண்டிகை காலத்தில் தற்காலிக அனுமதி வழங்கப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வீதிகளின் நெரிசலை கவனத்திற் கொண்டு சம்பந்தப்பட்ட பிரதேசத்தில் உள்ள பிரதேச செயலாளரின் அனுமதியுடன் மற்றும் கண்காணிப்புடன் நிரந்தர கட்டிடங்களை நிர்மாணிக்காமல் தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு இவ்வாறு தற்காலிக அனுமதி வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது மஹரகம நகரம் போன்ற சில நகரங்களில் பிடவைகள் விற்பனைக்காக இவ்வாறு இடமளிக்கப்பட்டுள்ளதுடன் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அதற்கான தற்காலிக அனுமதி வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## காரைக்கால் KKS...

படகுச் சேவையை எதிர்வரும் ஏப்ரல் 29ஆம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ளதாக துறைமுகங்கள்,கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்..

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான பயணிகள் படகுச் சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் அமைச்சில் இடம்பெற்றுள்ள பேச்சுவார்த்தையின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தப் படகுச் சேவையை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக காங்கேசன்துறை துறைமுகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும் புதிய பயணிகள் முனையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதற்காக துறைமுகஅதிகாரசபை 144 மில்லியன் ரூபா நிதியினைப் பெற்றுக் கொடுத்துள்ளதுடன் அதற்கான நிர்மாணிப் பணிகள் இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப் பட வுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடற்படையினரால் முனையத்தின் ஆரம்ப கட்ட நிர்மாண பணிகள் தொடங்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் இரண்டாம் வாரத்திற்குள் நிர்மாணப்பணிகள் பூர்த்திசெய்யப்பட்டு துறைமுக அதிகாரசபையிடம் அதனை ஒப்படைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்

மேற்படி கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்த படகுகளின் உரிமையாளர்கள் படகுச் சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் கருத்து தெரிவிக்கையில்:

ஒரு வழிப் பயணத்திற்கு பயணி ஒருவரிடமிருந்து 50 டொலர் களை அறவிட தீர்மானித்துள்ளதுடன் பயணி ஒருவருக்கு 100 கிலோகிராம் பொருட்களைக் கொண்டு செல்லவும் அனுமதி வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

மேற்படி படகுச் சேவை ஊடாக ஒருதடவையில் 150 பயணிகளை கொண்டு செல்ல முடியும் என்றும் காரைக்கால் துறைமுகத்திலிருந்து காங்கேசன்துறை துறைமுகம் வரை பயணிப்பதற்கு 04 மணித்தியாலங்கள் எடுக்கும் என்றும் தெரிவித்துள்ளனர்.

ஆரம்பத்தில் பகல் நேரங்களில் மட்டும் இந்த படகுச் சேவையை நடத்துவதற்கும்

உத்தேசித்துள்ளதாகவும் படகு உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மத்தியில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா: இந்தப் படகு சேவை ஆரம்பிக்கப்படுவதால் இந்தியா மற்றும் இலங்கையில் உள்ள எந்தவொரு வர்த்தகரும் இணைந்து கொண்டு தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

இந்த படகு சேவைக்கு சமகாலத்தில் காங்கேசன்துறை துறைமுகத்தை விரிவுபடுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் எனினும்,

அதற்காக தற்போது இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள கடன் தொகை போதுமானதாக இல்லை என்பதால் இன்னும் 16 மில்லியன் அமெரிக்கன் டொலர் நிதி அதற்காக தேவைப்படுவதாகவும் அந்த தொகையினை இந்திய எக்ஸிம் வங்கியிடமிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## உணவு என்ற போர்வையில்... (02 ஆம் பக்கத் தொடர்)

உறுப்பினர் குடு சலிந்துவின் பிரதான துப்பாக்கிச் சூடு நடத்துநராகவும், தற்போது துபாயில் இருப்பதாக கூறப்படும் பெலியத்த ரணாவின் நிதி விவகாரங்களையும் கையாண்டவர் எனவும் தெரியவந்துள்ளது.

## விமான நிலையத்திற்கு... (02 ஆம் பக்கத் தொடர்)

இந்த நிலையில், தான் செய்த செயலின் தீவிரம் தனக்கு தெரியவில்லை என சிறுவன் பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்ததையடுத்து, கடுமையாக எச்சரிக்கப்பட்டு அவர் விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## 150 பொருட்களின்... (02 ஆம் பக்கத் தொடர்)

ஆடை உற்பத்திக்கான மூலப்பொருட்கள் மற்றும் ஆடைகள், தோல் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள்,மற்றும் மருத்துவ உபகரணங்கள், உதிரி பாகங்கள், தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள், விவசாய உபகரணங்கள், குளியலறை பொருத்துதல்கள் மற்றும் பீங்கான் உள்ளிட்ட மின்னணு உபகரணங்கள், டைல்ஸ் என 100 முதல் 150 பொருட்கள் இறக்குமதி கட்டுப்பாடுகள் அடுத்த நான்கு மாதங்களுக்குள் நீக்கப்படும்.

எனினும் வாகனங்களின் இறக்குமதி உடனடியாக அனுமதிக்கப்படாது இது இன்னும் ஒன்றரை ஆண்டுகளுக்கு நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என திறைசேரி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சமூக ஊடகங்களை... (02 ஆம் பக்கத் தொடர்)

முழுவதும் அணுகும் வகையில் இருக்க வேண்டும். முன்பின் தெரியாதவர்களிடம் இருந்து வரும் செய்திகளை தடுக்க வழிவகை செய்ய வேண்டும் என பல்வேறு அம்சங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்த சட்டம் சமூக ஊடகங்களால் சிறுவர்களுக்கு ஏற்படும் தீமைகளை குறைக்க உதவும் என பல்வேறு தரப்பினர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

## உள்ளூராட்சி மன்றங்கள்... (02 ஆம் பக்கத் தொடர்)

தலைவர்களுடன் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாகவும் அவர் கூறினார். அத்துடன், மக்களுக்கான சேவைகள் குறித்து சுற்றுநிருபமொன்றும் தயாரிக்கப்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். இதேவேளை, தற்போது ஆளுநர்களின் கட்டுப்பாட்டில் உள்ள மாகாண சபைகளின் விவகாரங்களை ஆராய்வதற்காக பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். மாகாண சபைகளில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாத போதிலும் மக்களுக்கான சேவைகள் இடையூறின்றி முன்னெடுக்கப்படுவதையே ஜனாதிபதி எதிர்பார்ப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர மேலும் தெரிவித்தார்.

## மன்னார் இளைஞர்... (02 ஆம் பக்கத் தொடர்)

அவர் இலங்கைக்கு திரும்பினார்.

இருப்பினும், பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு, அவரது மனைவியும் மூன்று குழந்தைகளும் ஒகஸ்ட் 2022 இல் இந்தியக் கரையை அடைந்து, அதன் பின்னர் மண்டபத்தில் உள்ள மறுவாழ்வு மையத்தில் தங்கியுள்ளனர். இந்தநிலையில் தனது குடும்ப உறுப்பினர்களைப் பார்க்க இங்கு வந்ததாக அவர் கூறியுள்ளார். இலங்கையிலுள்ள தனது நண்பர்களிடம் கடன் வாங்கி, படகுக்கான கட்டணத்தை செலுத்தியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பாடசாலைகளின்...

ஆண்டுக்கான இறுதித்தவணை முடிவடைந்திருந்தது. இந்த நிலையில், இன்றுடன் ஆரம்பமாகும் 2023 ஆம் ஆண்டிற்கான முதல் பாடசாலை தவணை, எதிர்வரும் ஏப்ரல் 04 ஆம் திகதியுடன் முடிவடையும். அதற்கமைய, முதலாம் தவணை மற்றும் சித்திரை புத்தாண்டு விடுமுறை ஏப்ரல் 5 முதல் ஏப்ரல் 16 ஆம் திகதி வரை அமுலாகும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதி நேரடியாக ....

அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளார். மாகந்த தொழிற்சாலையில் தஞ்சமடைந்துள்ள பொதுமக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நோக்கில் அங்குச் சென்றிருந்த போது செய்தியாளர்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

## இலவச அரிசி...

அரிசி வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## திருடன் ஒருவனின்...

இந்நிலையில் பேர்ஸை இழந்த நபருக்கு கொள்ளையரிடமிருந்து கடிதம் ஒன்று கிடைத்துள்ளது. அந்தக் கடிதத்தில் தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் இருந்துள்ளன. அதில் குறிப்பு ஒன்றும் எழுதி வைத்துள்ளார். அந்த பதிவில், "உங்களை கடவுள் ஆசி வழங்கியுள்ளார். எனக்கு ஒரு பணத்தேவை இருந்தது. இதனால் தான் பணத்தை எடுத்தேன். இல்லை என்றால் பணத்தையும் திருப்பி அனுப்பியிருப்பேன். இந்த நேரத்தில் அது பெரிய உதவியாக இருந்தது. அத்துடன் உங்கள் பேர்ஸ் மிகவும் பழையதாக இருந்தது. புதிதாக ஒன்று வாங்குங்கள். இல்லை என்றால் இந்த கடிதத்துடன் அதனையும் அனுப்பி வைத்திருப்பேன். நீங்கள் ஒரு தானம் செய்ததாக நினைத்துக் கொள்ளுங்கள். மிக்க நன்றி" என கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருடனிடமிருந்து கிடைத்த கடிதம் மற்றும் தனது ஆவணங்களை பேரிஸின் உரிமையாளர் சமூக வலைத்தளங்களில் பதிவு செய்துள்ளார்.

## ஊடக கற்கைகள்...

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ஊடகக் கற்கைகள் துறையின் துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் கலாநிதி சி.ரகுராம், கலைப்பீட பீடாதிபதியாக பொறுப்பேற்ற நிலையில் ஊடகக் கற்கைகள் துறையின் துறைத் தலைவர் பதவிக்கு வெற்றிடம் ஏற்பட்டது. இந்தநிலையில், ஊடகக் கற்கைகள் துறையின் பதில் துறைத் தலைவராக விரிவுரையாளர் பூங்குழலி சிறிசங்கீர்த்தன் நியமிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது துறைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## UK யிலிருந்து....

செய்யப்பட்டுள்ளதாக இந்திய கடலோர காவல்படையினர் தெரிவித்துள்ளனர். இந்த நபர் இலங்கையிலிருந்து அகதியாக வெளியேறி, நிரந்தர விசா பெற்று, லண்டனில் தங்கியிருந்துள்ளார். இந்நிலையில், அவர் நேரடியாக இலங்கைக்குச் செல்ல முடியாத காரணத்தால் தமிழ்நாட்டுக்கு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது. மேலும், அவர் இந்தியாவுக்குச் சென்று, படகு மூலம் சட்டவிரோதமாக இலங்கைக்கு வர திட்டமிட்டிருந்தமையும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இதனையடுத்து மேலதிக விசாரணைக்காக அவர் இலங்கை கடலோர காவல்படையிடம் ஒப்படைக்கப்படவுள்ளார்.




# அரசாங்கத்தை விமர்சிக்க எதுவுமில்லாத நிலை ஏற்படுமென்ற அச்சத்தில் எதிரணி

## தேர்தலை அவசரமாகக் கோருவதும் இதற்காகவே

(அக்குறணை குறூப் நிருபர்)

நாட்டில் பொருளாதார முன்னேற்றங்கள் ஏற்பட்டதும் எதிர்க் கட்சியினருக்கு பேசுவதற்கு எதுவுமில்லாத நிலையே ஏற்படுமென, இளைஞர் விவகார விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோகன திசாநாயக்கா தெரிவித்தார்.மாத்தளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,மாத்தளை மாவட்டத்தில் விளையாட்டுத்துறை அபிவிருத்தி செய்யப்படும்.இதற்கான வேலைத் திட்டங்களை இப்போதிருந்தே முன்னெடுத்து வருகிறோம்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெறப்பட்ட உதவியானது எதிர்காலப் பொருளாதார திட்டமிடலுக்கு மிகவும் அவசியமானது. இந்த அடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கரமசிங்க மேற்கொண்ட முயற்சிகள் பாராட்டத்தக்கவை. இந்த நாடு நல்ல நிலைக்கு வருவதை எதிரணியின் சில உறுப்பினர்கள் விரும்புவதில்லை.இதனால்தான், அரசின் நல்ல திட்டங்களையும் இவர்கள் குறைகூறி விமர்சித்துத் திரிகின்றனர். பலருக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு பல்வேறு நிபந்தனைகள் விதித்து இவர்கள் காலங் கழித்தனர்.

இச்சூழ்நிலையில்தான், எவ்வித நிபந்தனையுமின்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றார்.

மிகக்குறுகிய காலத்தில் அவரது தூரநோக்கினால், நாடு படிப்படியாக முன்னேறி வருகிறது. இன்று பொதுமக்கள் அத்தியாவசிய தேவைகளுக்காக வரிசையில் காத்து நிற்கவேண்டிய நிலை இல்லை. அத்தியாவசியப் பெருட்களுக்கான தட்டுப்பாடு நீங்கி உள்ளது.மின் தடை நீக்கப்பட்டுள்ளது. பசளைத் தட்டுப்பாடும் நீங்கியுள்ளது. இன்னும் சில மாதங்களில் எரி பொருளுக்கான விலையும் குறைவடைந்து விடும். தற்போது சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து நாடு சுபிட்சத்தை நோக்கிச் செல்கிறது. இந்நிலை நீடிக்கும் போது எதிரணிக்கு பேசுவதற்கு ஒன்றும் இல்லாத நிலை ஏற்படும். இதற்காகவே,அவசரமாக தேர்தல் ஒன்றுக்கு செல்ல இவர்கள் முயற்சிக்கின்றனர்.



# மூத்த கல்விமான் சிகரம் பிலீப் இராமையாவுக்கு கௌரவம்



(ஹற்றன் சுழற்சி நிருபர்)

வாழும் காலத்தில் வாழ்த்துவோம்" எனும் தொனிப்பொருளில் தனது 90ஆவது அகவையில் கால்பதிக்கும் மூத்த கல்விமான் சிகரம் பிலீப் இராமையா கௌரவிக்கப்பட்டார்.இவரை கௌரவிக்கும் விழா (25) இராகலை உயர்நிலை பாடசாலையில் நடைபெற்றது.

ஏற்பாட்டாளர் சட்டத்தரணி எஸ். தாயுமானவன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில், ஆசிரிய சிகரம் பிலீப் இராமையா குறித்த சாரல் துளிகள் நினைவு எனும் பதிவுகள், ஆக்கங்கள், அடங்கிய 333 பக்கங்களை கொண்ட மலர் வெளியீடும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பேராசிரியர் தை.தனராஜ்,எஸ்.சந்திரபோஸ், நிகழ்வுக்காக கனடாவிலிருந்து வருகை தந்திருந்த முன்னாள் ஆசிரியர் எஸ்.சந்திரசேகரன் உள்ளிட்டோருடன் சட்டத்தரணிகளான ஏ.பி. கணபதிப்பிள்ளை, சட்டத்தரணியும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பி.இராஜதுரை, மற்றும் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# சாதனை மாணவர்களுக்கு சான்றிதழ்கள் பரிசுகள் வழங்கள்



(தலவாக்கலை குறூப் நிருபர்)

கொத்மலை கல்வி வலயத்திற்குட்பட்ட கெட்டபுலா தமிழ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டி,

அண்மையில்,பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன் இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.கோட்டக்கல்வி பணிப்பாளர் , பாடசாலை அதிபர், அயல் பாடசாலை அதிபர்கள்,ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலரும் இதில், பங்கேற்றிருந்தனர்.வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பதக்கங்கள்,சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# கஜமுத்துக்களை விற்பனை செய்ய முயற்சித்த மூவர் கைது

(அக்குறணை குறூப் நிருபர்)

கஜமுத்துக்களை சட்டவிரோதமாக விற்க முயன்ற மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். ஐந்து கஜமுத்துக்களை சீனாவைச் சேர்ந்த வர்த்தகருக்கு 120 இலட்ச ரூபாவிற்கு இவர்கள் விற்பனை செய்ய முயன்றனர்.இச்சம்பவம் மாத்தளையில் (26) இடம்பெற்றது. கைதானவர்களில் மாத்தளை நீதிமன்றில் கடமையாற்றும் இருவரும் உள்ளடங்குகின்றனர். வழக்கு ஒன்றுடன் தொடர்புற்றிருந்த இந்த கஜ முத்துக்கள் நீதிமன்ற களஞ்சிய அறையில் வைக்கப்பட்டிருந்த நிலையில்,காணாமல் போயிருந்தன.

இச்சம்பவத்தில், சந்தேக நபர்கள் பயணித்த முச்சக்கர வண்டியும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டன. மாத்தளைப் பொலீசார் மேலதிக விசாரணைளை மேற்கொண்டுள்ளனர்.

# பேராதனை பல்கலைக்கழக ஆய்வுத் துறையை விரிவுபடுத்த நிதியுதவி

(அக்குறணை குறூப் நிருபர்)

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஆய்வுத் துறையை மேம்படுத்த, ஐரோப்பிய சங்கம் உதவி வழங்குவுள்ளதாக உபவேந்தர். எம்.டி. லமாவன் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்

தற்போது பேராதனையில் நடக்கும் கல்வி மற்றும் ஆய்வு நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக இவ்வுதவிகள் வழங்கப்பட உள்ளன.

கல்வி சார ஊழியர்களுக்கு பயிற்சிகள் வழங்குதல், சிறுவர்களின் வாய் மற்றும் பற்தாடை தொடர்பான சத்திர சிகிச்சைகளுக்கான ஆய்வு வசதிகளும் இந்நிதியுதவியில்

முன்னெடுக்கப்படவுள்ளன.இதற்கான நிதி உதவியையே ஐரோப்பிய சங்கம் வழங்கி உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# புதையல் தோண்ட முயற்சித்த ஏழு பேர் வலப்பனையில் கைது

(ரமேஷ் ஆறுமுகம்)

வலப்பனை கீர்த்திபண்டாரபுர பொலிஸ் பிரதேசத்தில் புதையல் தோண்டும் நோக்கில், வருகை தந்த பௌத்த பிக்கு ஒருவர் உள்ளிட்ட ஏழு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து மூன்று புத்தர் சிலைகள்,புதையல், தோண்டப் பயன்படும் ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றினர்.வலப்பனை கீர்த்தி பண்டாரபுர பகுதியிலுள்ள பொலிஸ் சோதனை சாவடிக்கருகில் சந்தேகத்திற்கிடமாக திரிந்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மீது பொலிஸார் விசாரணை நடத்தியதில்,புதையல் தோண்டுவதற்காக வந்ததை ஏற்றுக் கொண்டனர்.

கேகாலையிலிருந்து வருகை தந்த பௌத்த பிக்கு ஒருவர் உட்பட,காலி,மீரிகமை,தம்புளை மற்றும் பக்கமுன பிரதேசத்திலிருந்து வருகை தந்தவர்களே பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.சந்தேக நபர்களையும், கைப்பற்றிய பொருட்களையும் வலப்பனை நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச பெண்கள் தினத்தையிட்டு இராகலையில் விஷேட நிகழ்வு






சர்வதேச பெண்கள் தினத்தையொட்டிய பெண்கள் தின நிகழ்வு இராகலையில் (26) ஞாயிற்றுக்கிழமை வெகு விமர்சையாக இடம்பெற்றது.

பெண் விடுதலை சிந்தனை அமைப்பின் ஏற்பாட்டில் இராகலை புறநெகும மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெற்றது. இதில் வலப்பனை பிரதேசத்திற்குட்பட்ட 12 தோட்டப்பகுதிகளை சேர்ந்த பெண்கள் மற்றும் ஆடவர்கள் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

பெண் விடுதலை சிந்தனை அமைப்பின் செயற்பாட்டாளர்களான ச.சுபாஷினி ச.சிவந்தினி, ச.மோகன்ராஜ்,சட்டத்தரணிகளான செல்லத்துரை லலிதாம்பிகை,மற்றும் யாழினி சந்திரசேகரன்,ஆகியோருடன் பலரும் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினர்.

மேலும், இந்நிகழ்வின் முக்கிய அம்சமாக பேராசிரியர் க.சிவசேகரத்தின் "கல்லாகவே ஆனாள்" எனும் பெண் விடுதலை கவிதைகளின் தொகுப்பு நூல் அறிமுகம் செய்யப்பட்டது. "பெண்களை அமுழ்த்தித்திற்கு உள்ளாக்கும் சமூக பொருளாதாரத்திற்கு எதிராக எழுவோம்" எனும் தொனியில் மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொளுத்துவோம் என்ற பாரதியின் வசனத்தை முன்நிறுத்தி இந்நிகழ்வு இடம்பெற்றது.

(ஆ.ரமேஸ்.)

# திருவிழாவில் 17 பவுண் தங்க நகைகள் திருட்டு, 9 பேர் மடக்கிப் பிடிப்பு

பூண்டுலோயா அருள்மிகு ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற கும்பாபிஷேக திருவிழாவில், அடியவர்களிடம் நகைகளைத் கொள்ளையிட்ட ஒன்பது பேர் கைது செய்யப்பட்டனர்.கைதானவர்களில், ஏழு பெண்களும் இரு ஆண்களும் உள்ளடங்குகின்றனர். இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

இவர்கள், பல்லேகலை , வவுனியா, புத்தளம், யாழ்ப்பாணம் , கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்தவர்களென பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கும்பாபிஷேக திருவிழாவில் பங்கேற்ற ஒன்பதிற்கும் மேற்பட்ட அடியவர்களின் தங்க நகைகளை இவர்கள் திருடியிருந்தனர்.

பூண்டுலோயா பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடு களின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணை களில், இவர்கள் கைது செய்யப்பட்டனர். சிறுமி ஒருவரிடம் தங்கச் சங்கிலியை அச்சுறுத்தி அபகரிக்க முற்பட்ட போது ஒருவர் கைதானார். இதையடுத்தே ஏனையவர்கள் கைது செய்யப்பட்டனர்.

(டி,சந்ரு)


ஜாதிக லொத்தர் சபை / National Lotteries Board — www.nlb.lk — NLB

| | சனிக்கிழமை 2023.03.25 | வெள்ளிக்கிழமை 2023.03.24 |
|---|---|---|
| மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் | 5070 | 5069 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 24,712,550.00 | ரூ. 23,574,146.00 |
| ஆங்கில எழுத்து | W | P |
| வெற்றி இலக்கங்கள் | 1 8 4 5 0 2 | 4 5 7 4 1 6 |
| கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் | 3312 | 3311 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 90,123,590.80 | ரூ. 89,953,664.80 |
| ஆங்கில எழுத்து | L | M |
| வெற்றி இலக்கங்கள் | 22 44 56 57 | 07 21 37 70 |
| தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் | 1100 | 1099 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 83,166,224.40 | ரூ. 82,959,041.20 |
| ஆங்கில எழுத்து | H | V |
| வெற்றி இலக்கங்கள் | 10 59 64 81 | 37 43 60 66 |
| மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் | 1418 | 1417 |
| அடுத்த மெகா சுப்பர் பரிசு | ரூ. 310,489,142.00 | ரூ. 310,185,014.00 |
| ஆங்கில எழுத்து / சுப்பர் இலக்கம் | Y 17 | H 04 |
| வெற்றி இலக்கங்கள் | 08 36 45 64 | 31 48 65 70 |
| | ரூ. 10,000,000.00 / ரூ. 10,000,000.00 | ரூ. 10,000,000.00 / ரூ. 10,000,000.00 |
| ராசி சப பலன் — சீட்டிழுப்பு இலக்கம் | 379 | 378 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 2,542,156.60 | ரூ. 2,526,830.80 |
| வெற்றி இலக்கம் | மிதுனம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 13 14 27 | 11 16 34 52 |
| விசேட இலக்கம் | மிதுனம் | மிதுனம் |
| ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் | 1525 | 1524 |
| அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ரூ. 11,245,662.00 | ரூ. 11,194,199.20 |
| வெற்றி இலக்கங்கள் | 8 5 9 1 2 8 | 3 1 8 6 3 7 |

# மானுடவியல்

(தொடர்)



## சண்டேசுவர நாயனார் புராணம்

110

உள்ளம் அன்பினால் பொங்கித் ததும்பி நின்றது. விசாரசருமர், ஆவாகனம் முதலிய வழிபாட்டு முறையை வகையோடு செய்யத் தொடங்கினார். பசுவின் பாலை எடுத்துக் திருமஞ்சனம் ஆட்டத் துவங்கினார் மகனின் வழிபாட்டு முறையைப் பார்த்துக் கொண் டிருந்த எச்சதத்தனுக்குக் கோபம் எல்லை மீறியது. உலக மாயையிலே மூடிக்கொண்டி ருந்த அவருக்கு அகக்கண் களும் மூடிக்கிடந்தன. பிள்ளையின் பக்திப் பண்பினை அறிய முடியாத எச்ச தத்தன் ஆத்திரத்தால் அறிவிழந்து சினத்தால் பொங்கி எழுந்தார் . மரத்திலிருந்து குச்சியை ஒடித்து எடுத்துக் கொண்டு தலைக்கேறிய மமதையால் மரத்தினின்றும் வேகமாக இறங்கி , கோலால் மகனின் முதுகில் ஓங்கி ஓங்கிப் பல தடவைகள் அடித்தார் எச்சதத்தன் விசாரசருமரோ அடிபட்டும் உணர்வு பெற வில்லை. பூசையி லேயே தம்மை மறந்து இருந்தார். எச்சதத்தன் அடித்ததோடு மட்டும் நின்றுவிடாமல் வாயினின்றும் வசைச் சொற்கள் பல வரம்பு மீறி வெளிவந்தன. இவையெல்லாம் விசாரசருமர் காதுகளில் விழுந் தால்தானே! விசாரசருமர் தந் தையின் இடையூறுளைச் சற்றும் உணராத நிலையில், பூசையைத் தொடர்ந்து செய்து தள்ளினார் . எச்சதத்தனுக்கு மகனின் செயல் மேலும் கோபத்தை உண்டாக்கி யது. பால் நிரம்பிய பாற்குடங்க ளைக் காலால் உதைத்துத் தள்ள அதுவரை பூஜையில் மெய் மறந்



திருந்த பக்தர், திருமஞ்சனக் குடப்பாலை கொட்டிக் கவிழ்த்தது கண்டு கோபம் கொண்டார். வழிபாட்டிற்குக் குந்தகமாக நெறி தவறிய செயலைக் செய்தது தந்தை என்பதை உணர்ந்தும் சிவ அபவாதம் செய்த அவரைத் தண்டிக்க அருகே கிடந்த கோலை எடுத்து குடங்களை உதைத்துத் தள்ளிய தந்தையின் கால்களை நோக்கி வீசினார். அக்கணமே கோலும் மழுவாக மாறியது. எச்சதத்தன் கால்கள் துண் டுபட்டு நிலத்தில் விழுந்தன. எச்சதத்தன் உயிரை இழந்தார் . இதுவரை நடந்த ஒன்றுமே தம் புலன்களுக்குப் புரியாத நிலையில் இருந்த விசாரசருமர் மீண்டும் சிவ வழிபாட்டில் ஈடுபடலானார். அச்சமயம் வானவெளியில் பேரொளி பிறந்தது. ஒளி நடுவே, ஒளிப்பிழம்பாக இறைவன் உமா தேவியுடன் விடையின் மேல் எழுந் தரு ளினார் . பக்தியால் உலகை மறந்திருந்த விசாரசருமர் பேரொளிப் பிழம்பாக காட்சி யளித்த பரமனைப் பார்த்ததும் பேருவகை கொண்டார். கரம் கூப்பி நிலந்த னில் விழுந்து வணங்கி எழுந்தார். **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

## மட்டக்களப்பு – களுவாஞ்சிகுடி

# அருள்மிகு திருமுருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம்

மட்டக்களப்பின் தெற்கே 16 ஆம் மைக்கல் தொலைவில் படுவான் கரை எழுவான் கரையை ஒன் றிணைக்கும் மத்திய இடமாக விளங்கும் களுவாஞ் சியூரின் சூரைக்காடுள்; சூழ்ந்து வர இயற்கை அம் சங்களும் ஒருங்கே அமையப்பெற்ற அழகிய இடமே சூரையடியாகும். இத்தகைய சிறப்புமிக்க எழில்மிகுந்த இடத்தில் முருகப்பெருமான் பதிகொண்டு பன்நெடுங் காலமாக பக்தர்களுக்கெல்லாம் அருள்கொடுத்து வரும் ஆலயமே ஸ்ரீ முருகன் ஆலயமாகும். எனவே இவ் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் எதிர் வரும் 26.03.2023 ஆம் திகதி வாஸ்த்து சாந்தியும் மறுநாள் 27.03.2023 ஆம் திகதி கொடியேற்ற அலங்காரத் திருவிழா 9 நாட்கள் நடைபெற்று பங்கு னித்திங்கள் புதன்கிழமை 05.04.2023 ஆம் திகதி அன்று பங்குனி உத்தர திருநாளில் சமுத்திர தீர்த்த உற்சவம் இடம்பெற்று அன்னதான நிகழ்வோடு நிறைவு பெறவிருக்கின்றது. இதனைத் தொடர்ந்து 06.04.2023 ஆம் திகதி திருக்கல்யாணப்பூசை யும் திருப்பொன்னூஞ்சல் நிகழ்வும் மறுநாள் 07.06.2023 அன்று வைரவர் பூசையுடன் நிகழ்வு கள் யாவும் இனிது நிறைவு பெறவிருக்கின்றன.

### ஆலயவரலாறு

அடர்ந்த பற்றைக்காடுகள் நிறைந்த வனச் சோலையும் கடல்வளமும் மருதமரங்கள் சாப்பை புற்கள் தாமரைக்கேணியும் தென்னந்தோப்புகளும் ஒருங்கே அமையப்பெற்ற அழகு நிறைந்த வனத்தி



னுள்ளே களுவாஞ்சிகுடியை சேர்ந்த விசுவலிங்கம் மகேந்திரன் அவர்கள் 1975 ஆம் ஆண்டு காலப்ப குதியில் ஒரு வேலை வைத்து முத்துமாரியம்மனாக மனதில் நிறுத்தி குறிப்பிட்ட காலம் வழிபட்டு வந்ததன் பின்னர் அமரர்.க.கந்தசாமி அவர்கள் அவ் வேலை முருகப் பெருமானை நினைந்;து சிறிய பந்தலிட்டு வழிபட்டு வந்தபோது அதனைத்தொடர்ந்து தனக்கு உதவி நாடி . கணபதிப்பிள்ளை தெய்வநாயகம் அவர் களை அழைத்து தன்னுடன் இணைந்;து செயற்படு மாறு கேட்டதற்கிணங்க அவரும் இணைந்து பழைய கற்களை எடுத்து வந்து பந்தலை கட்டி வழிபட்டனர். இதனைத் தொடர்ந்து பெருமாள் மற்றும் ஆலயத்திற்கு தலைவராக இருந்து அமரத்துவமடைந்த கி. மகா தேவன் அவர்களும் வழிபட்ட வேளை ஒரு நிருவாக சபையை நிறுவி அதற்கு தலைவர் கந்தசாமி அவர்க ளும் செயலாளர் கி. மகாதேவன் அவர்களும் பொரு ளாளராக க. தெய்வநாயகமும் மற்றும் பல அன்பர் கள் நிருவாக சபை உறுப்பினர்களாகவும் இணைந்து செயற்பட்டு வந்தனர். பின்னர் ஓலைக்கிடுகினால் கொட்டகை அமைத்து வேலுக்குப் பதிலாக முருகப்பெ ருமானின் சிலையை வைத்து வழிபட்டனர். இதனைத் தொடர்ந்து ஆகம விதிக்கமைய ஒரு ஆலயம் அமைக் கப்பட வேண்டும் என்ற நோக்கில் கிராம மக்களிடம் நிதி அறவீடு செய்து ஆலயம் அமைத்து 2011ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் செய்து ஆலயம் புதுப் பொலிவு கண்டது.

வேல் வைத்து வழிபட்ட ஆரம்பகாலத்தில் சிவஸ்ரீ சுப் பிரமணியம், ஜெகதீஸ்வரக்குருக்கள் குறுகியகாலம் பூசை செய்து வந்ததுடன் அதனைத்தொடந்து ஆல யத்திற்கு நிரந்தர குருவாக கிரியாதிலகம், கிரியா வித் தகர், கிரியா ஜோதி அமரர். முருகுப்பிள்ளை முத்துக் குமாரன் குருக்கள் அவர்கள் பூசை திருவிழாக்களை நடாத்தி வந்தனர். பின்னர் அவரைத் தொடர்ந்து மகன் சிவஸ்ரீ மு. அங்குச சர்மா அவர்கள் அக்கடமையை செய்து வருகின்றார் ஆலய திருவிழா நிகழ்வுகளை சோதிட விற்பன்னர் சாமஸ்ரீ சிவஸ்ரீ ச.மயூரவதன சர்மா அவர்கள் மேற்கொண்டு வருகின்றார்

விசேட பூசைகள்:

வருடாந்த அலங்கார உற்சவம்
கந்தசஷ்டி
சித்திரை வருடப்பிறப்பு
குமாராலய தீபம்
தைப்பொங்கல்
தைப்பூசம்
தீபாவளித் திருநாள்
பௌர்ணமி திருநாள் விசேட பூசைகள்
ஆலயம் பற்றிய நூல்கள்

இவ்வாலயத்தின் அலங்கார உற்சவம் நிறைவு பெற்று திருப்பொன்னூஞ்சல் நிகழ்வுக்கான பாடலை இயற்றி நூலுருவாக்கம் செய்து வெளியீடு செய்தி ருந்தார் அவுஸ்திரேலியாவில் வசிக்கும் ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி பாக்கியரெத்தினம் ஆறுமுகம் அவர் கள் மற்றும் கந்தபுராணம் கற்பித்த பாடங்கள் எனும் நூலையும் ஆலயத்தில் அடியார்களுக்கு வழங்கியுள் ளார்.

இவ்வாறு சிறப்பு மிக்க ஸ்ரீ முருகன் ஆலயத்தில் அலங்கார உற்சவம் நடைபெறவுள்ளது. இக்காலப் பகுதியில் அடியார்கள் பூசைத் திரவியங்கள், பூமாலை கள், பூக்கள், நேர்த்திக்கடன் பொருட்களை வழங்கி முருகப்பெருமானின் அருளைப் பெறுக.

கலைச்சுடர், இலக்கிய வித்தகர்
**நாராயணப்பிள்ளை நாகேந்திரன்**
ஓய்வு நிலை அதிபர்











கொழும்பு 14, கிராண்ட்பாஸ் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் பதினோராவது வருட அலங்கார உற்சவத்தின் ரத பவனி நேற்று இடம்பெற்றதைப் படங்களில் காணலாம். வட கொழும்பு தினகரன் நிருபர்

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

### முருகன்

**19561) முருகு என்றால் என்ன?**

*அழகு என்பார்கள்.*

**19562) இந்த சொல்லுக்கு உரிய பொருள் என்ன?**

*இளமை, அழகு, மணம், கடவுள் தன்மை, தேன் என்று பல பொருள்களும் இருக்கிறது.*

**19563) ஆதலால் முருகன் எப்படிப் பட்டவராக இருக் கிறார்?**

*மாறாத இளமையும், அழியாத அழகும், குறையாத நறுமணமும் நிறைந்த தெய்வத்தன்மையும், தெவிட் டாத இனிமையும் உடையவன் என்று பொருள் கொள் ளப்படுகிறது.*

**19564) சரவணபவ என்கிற சொல் எத்தனை அட்ச ரத்தையுடையது?**

*ஆறு*

**19565) சரவணபவன் என்றால் என்ன?**

*நாணல் சூழ்ந்த பொய்கையில் தோன்றியவன் என்று பொருள்படும்.*

**19566) ஆறுமுகம் என்ன?**

*சிவ பெருமானுக்குள்ள ஐந்து முகங்களுடன் அதோ முகம் சேர்ந்து ஆறுமுகங்களானதால் ஆறுமுகம் எனும் பெயர் வந்தது.*

**19567) சிவத்திற்குரிய ஐந்து முகங்களும் எவை?**

*தற்புருடம், அகோரம், வாமதேவம், சக்தியோஜ தம், ஈசானம் என்ற ஐந்து முகங்கள்.*

**19568) இத்துடன் யாருடைய அதோமுகமும் சேர்ந் தது?**

*சக்தியின்*

**19569) சிவ ஸ்வரூபமாகவும், சக்தி ஸ்வரூபமாகவும் சேர்ந்து விளங்குகிறான் யார்?**

*முருகன்*

**19570) ஆறுமுகங்களும் எதை உணர்த்துவதாக கூறுவார்கள்?**

*திரு, புகழ், ஞானம், வைராக்கியம், வீரியம், ஐஸ் வர்யம் என்பவைதான் ஆறுமுகங்கள் என்று சொல்ப வர்களும் உண்டு.*

# சோழர் காலத்து தொன்மை மிகுந்த திருமலை பத்திரகாளியம்மன் ஆலயம்

## வருடாந்த உற்சவம் ஆரம்பம்

திருகோணமலை, திருக்கோணேஸ்வரர் பெருமானின் நேரடிப் பார் வையில் அமையப் பெற்றிருக்கும் பத்திரகாளியம்மாள் ஆலயம் வரலாற் றுச் சிறப்புமிக்கதாகும். இக்கோயிலின் தூணில் காணப்படும் கல்வெட்டும் இக் கோயிலின் தொன்மையை எடுத்துயம்பு கிறது. தூணின் மூன்று பக்கங்களிலும் கிடைத்த கல்வெட்டு முதலாம் இராஜஇரா ஜனின் மகனாகிய முதலாம் இராஜேந்தி ரனின் கி.பி 1012_ 1044 காலப்பகுதி யைக் குறிப்பதாகும்.

மெய்கீர்த்தி பகுதி என்பது அரசர் தமது காலங்களில் மேற்கொள்ளும் வெற்றிகர மான படையெடுப்புகளையும் தம் கால பிற சிறப்பான வீரமிக்க நிகழ்சிகளையும் குறிக்கின்ற பகுதியாகும். இக்கோயிலுக் குச் சொந்தமான தூண் கல்வெட்டு ஏறத் தாழ ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் பொறிக்கப்படதாகும் என்பது வரலாற்று நூல்களின் அடிப்படையில் தெரியவரு கின்றது.

பிறசான்றுகள் மாத்திரமன்றி, திரு கோணமலை மாவட்டத்தில் இதுவரை கிடைத்துள்ள சோழர்காலத்து கல்வெட் டுக்களினால் இக்கருத்து உறுதிபடுத்தப் படுகின்றது. இவ்விதத்தில் பத்திரகாளி அம்மன் கோயிலிலுள்ள சோழர்காலத்து கல்வெட்டு திருகோணமலை மாவட்டத் திற்குரிய சோழர்கால கல்வெட்டுக்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இவ்வாலயத்தின் வரலாற்றினை திட் டவட்டமாக வரையறுத்துக் கூறமுடிய வில்லை. ஆனாலும் இவ்வாலயத்தில் கிடைத்துள்ள கல்வெட்டுக்கள், பழைய சாசனங்கள், கர்ண பரம்பரையாக வழங்கி வரும் கதைகள் மற்றும் அக்க தைகளோடு தொடர்புடையதாக தற்பொ ழுது ஆலயத்திலிருக்கும் விக்கிரகங்கள், தகளி, வாகனம் என்பவற்றை ஆதா ரமாக்க் கொண்டு முதலாம் இராஜேந் திர சோழன் காலத்தின் பதினோராம் நூற்றாண்டில் இவ்வாலயம் சிறப்புற்று விளங்கியதாக சரித்திரப் பேராசிரியர் குணசிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆலயத்தில் மிகவும் விமரி சையாக நடைபெறும் விழாக்களில் ஒன்றான அருளாட்சி புரியும் அருள் மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பிரமோற்சவம் நேற்று 26. 03. 2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. ஆலயத் திருவிழா தொடர்ந்து நடைபெற்று வருகின் றது.

04.04.2023 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு இர தோற்சவம் இடம்பெற்று 05. 04. 2023 புதன்கிழமை உதயத்தில் அம்பாள் சிம்ம வாகனத்தில் எழுந் தருளி திருகோணமலை சமுத்திரக் கரையில் தீர்த்தோற்சவம் நடைபெ றும்.



இன்று முதல் 03.04.2023 வரை தினமும் அம்பாளுக்கு காலை 5.30 மணிக்கு அபி ஷேகம், காலை 7.00 மணிக்கு மூலஸ்தான பூஜை, 7.45 இற்கு தம்பபூஜை, 8.30 மணிக்கு வசந்த மண்டபபூஜை, 10.00 மணிக்கு திருவிழா நடைபெறும்.

பிற்பகல் 2.30 மணிக்கு அபி ஷேகம், 3.30 மணிக்கு மூலஸ் தான பூஜை, மாலை 4.15 மணிக்கு தம்பபூஜை, மாலை 5.00 மணிக்கு வசந்த மண்டப பூஜை, 6.00 மணிக்கு திருவிழா 7.30 மணிக்கு நடைபெற்று விழா நிறைவு பெறும்.

03.04.2023 திங்கட்கிழமை 09 ஆம் திருவிழா அன்று அம்பாள் மாலை 6.00 மணிக்கு சப்பறத்தில் பவனிவருதல் இடம்பெறும். அத்துடன் திருவிழாக்கா லங்களில் பகல் திருவிழா முடிந்தவுடன் மகேஸ்வர பூஜை என்று சொல்லப்படும் அன்னதானம் வழங்கப்படும்.

உற்சவ காலங்களில் ஆலய வீதியில் பக்தர்கள் சைவசமய கோட்பாடுகளை பின்பற்றி நடந்து கொள்ளுமாறு பத்தி ரகாளி அம்பாள் தேவஸ்தான பிரதம குருவும் ஆதீனகர்த்தாவுமான பிரம்ம ஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேபோன்று கேதார கௌரி விரத மும் இவ்வாலயத்தில் கடந்த 150 வரு டங்களாக மிகச்சிறப்பாக அனுட்டிக்கப் பட்டு வருகின்றது.

கேதார கௌரி விரதம் புரட்டாதி மாதம் விஜயதசமி முதல் ஐப்பசி மாதம் அமவாசை திதிவரை நிகழும் இருபத்தொரு நாட்களுக்கான அனுட் டானங்களில் பல்லாயிரக்கணக்கான பக்த்தர்கள் கலந்து கொள்வது வழமை. இவ்விரத்தினை அனுட்டிப்பவர்கள் தரிப் பதற்குரிய விரதநூலும், பூசைப் பொருட் களும் வைக்கப்பட்டு அலங்காரப் பூசை நடைபெறும், பூசையின் நிறைவில் இவிரதத்திற்காக முன்னரே பதிவு செய்து கொண்டவர்களை அழைத்து பூசைபெட்டி களை வழங்குவார்கள்.

தனியாக (பூ காப்பு) விரத நூலை மாத்திரம் பெற்று இவ்விரதத்தினை அனுட்டிப்பவர்களும் உள்ளனர். விஷே சமாக வெளிநாடுகளில் இருந்து இவ் விரதத்தினை அனுட்டிப்பவர்களுக்கு ஆலயத்தின் நிர்வாகத்தினால் உரிய காலத்துக்குள் விரதநூல் அனுப்பி வைப் பதற்குரிய ஏற்பாடுகள் முன்கூட்டியே செய்யப்படுவது வழமை.

இவ்வாலயத்தின் கட்டடக்கலையானது திராவிடக் கலையை பிரதிபலிப்பது சிறப் பான அம்சமாகும். இவ்வாலயத்தின் வளர்ச்சியில் ஆலயத்தின் ஆதின கர்த்தா வேதாகமாமனி பிரம்மஸ்ரீ சோ. ரவிச் சந்திரக் குருக் கள் அவர்களின் நிர்வாக நடவடிக் கைகள் இவ்வா லயத்தின் வளர்ச் சிக்கு மேலும் மகுடம் சூட்டுவ தாக உள்ளன.



**பாலேந்திரலிங்கம் விபூஷிதன்**
திருகோணமலை

# "யுகரிஷியின் ஆன்மீக சிந்தனைகள் - 31



பிறிதொருவரின் குணம், செயல், இயல்பு ஆகிவை களை அறிந்து கொண்டு, அதன் மூலம் அவன் பெறுகின்ற பலன் கள். விளைவுகளை அறிந்து கொண்டால், அதுவே நமக்கு அனுபவ பாடத்தைக் கற்றுக் கொடுக்கும். நற் செயல்களால் மேலோங்கி வளர்பவர்களை, சமுதாயத் தில் நற்பெயர் பெற்ற சான்றோர் களின் வாழ்வை வழிக்காட்டும் பாடமாக நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இதே போல் மனிதன் ஒருவன் தனது நடை, உடை, பாவனை, நடத்தை. குணம் செயல் ஆகியவைகளால் உருவாகும் நற்ப லன்களின் மூலமும் அனுபவ பாடம் கற்றுக் கொள்ள முடியும். தன்னை சீர்த்திருத்திக் கொண்டு பிறப்பின் நோக்கத்தை அடை வதற்கான வழியில் நடந்து ஒருவன் நற்கதி பெற வேண்டும். அதாவது நற்சேர்க்கை, சுய ஆய்வு, சிந்தனை, அனுபவம் ஆகி யவைகளை ஆதாரமாகக் கொண்டு நல்லறிவு பெற வேண்டும். வேண்டும். இம் முயற்சியை தொடர்ந்து செய்திட வேண்டும்.


ஞானமில்லாத வாழ்வு பொருளற்றது. அறியாமையா னது இம்மை (உலக வாழ்க்கை) மற்றும் மறுமை (ஆன்மீக வாழ்க்கை) ஆகியவற்றை நாசமாக்கி விடும். எனவே அறியாமை இருளிலிருந்து விலகி, ஞான தீபத்தின் ஒளியை நோக்கி நாம் முன்னேறிக் கொண்டிருக்க வேண்டும். தனது சோம்பலையும் கவனமின்மையையும் நீக்கி விட்டால் தன்னு டைய பலவீனம் அகன்று விடும் என்பதை மனிதன் உணர வேண்டும். பின்னர் அவன் வாழ்வு சிறப்புற்று விளங்கும் என் பதில் எவ்வித ஐயமுமில்லை.

மனிதன் தனக்குத் தானே ஒரு முழுமையான மூலக்கூறு ஆவான். அவனுக்குள்ளேயே அனைத்து சக்திகளும், பிறந்த திலிருந்தே உள்ளன. அந்த சக்தியை ஆதாரமாகக் கொண்டு, எந்த நிலையிலும் நாம் முழுமையான வெற்றியின் சிகரத்தை தொட்டுவிட முடியும்.

மனிதனுடைய உள்ளத்தின் விழிப்புணர்வே, அனைத்து தெய்வங்களின் பிரதிநிதியாகும். உந்தன் சக்தி உன் உள்ளத் தில் உறங்கி கிடக்கும் வரை, அதற்கு எவ்வித மதிப்பும் இருக் காது. அந்த சக்தி விழித்துக் கொள்ளும் போது, நம்மை சுற்றி நாலாபுறமும் அதிசய ஞான ஒளி பிரகாசிக்கும்.

நம் நற்குணங்களோ அல்லது தீயகுணங்களோ தான், நாம் பெற்றிருக்கும் உன்னத நிலை அல்லது அவலநிலைக்கு காரணம் ஆகும். வெளிப்புற லாபநட்டங்கள், உதவி இடைஞ் சல்கள் இவை யாவும் நம்மை உயர்த்துவதில்லை அல்லது தாழ்த்துவதில்லை. நம் உயர்வுக்கும் தாழ்வுக்கும் நாமே பொறுப்பு. எவன் தன்னை உணர்ந்து, தன் குறைகளை களைந்து நேர்மறை சிந்தனையுடன் செயல்படுகிறானோ அவன் வெற்றிக் கோட்டைக்கு மிக அருகில் இருக்கிறான். எவன் ஒருவன் தனது உள்ளாற்றலை புரிந்து கொண்டு அதனை தட்டி எழுப்புகிறானோ அவனிடம் அபரிதமான தெய்வ சக்தி மிகுந்து காணப்படும்.

# கிழக்கின் குரல்



# டிஜிட்டல் பொருளாதாரத்தின் பெரும் பங்குதாரர்களாக பெண்கள் மாறவேண்டும்

## கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்

தம்பலகாமம் குறூப் நிருபர்

டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு வலு சேர்க்கக் கூடியவர்களாக பெண்கள் மாற வேண்டிய காலத்தின் தேவை காணப்படுவதாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகம், திருகோணமலை மாவட்ட செயலகம், ஜேர்மன் ஒத்துழைப்பு நிறுவனம் மற்றும் நியுக்ளியஸ் மன்றம் இணைந்து (23) திருகோணமலை மாவட்ட செயலக வளாகத்தில் ஏற்பாடு செய்த DigitAll எனும் தொனிப்பொருளிலான சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட வர்த்தக கண்காட்சி மற்றும் புத்தாக்கம் தொடர்பான நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டபோதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தாய்மை என்பது புனிதமானது. மகளிரின் அபிவிருத்திக்கு அரசாங்கம் அவசியமான உதவிகளை வழங்கும். தம் முன்னே உள்ள சவால்களை முறியடித்து சாதனைப் பெண்களாக மாற வேண்டும் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான கபில அத்துகோரல தெரிவித்தார்.

டிஜிட்டல் வலயம், தொழில் வழிகாட்டல், தகவல் தொழிநுட்ப விடயங்கள், தொழில் முயற்சியாளர்களின் உற்பத்தி பொருட்கள் உட்பட பல விடயங்கள் இதன்போது ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

அத்துடன் 30 பெண் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் தகவல் தொழிநுட்ப பாடநெறியை மேற்கொண்ட 24 இளைஞர் யுவதிகளுக்கு இதன்போது சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர். எம். பி.எஸ். ரத்னாயக்க, மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம, ஜேர்மன் ஒத்துழைப்பு நிறுவனத்தின் பிரதிநிதிகள், நியுக்ளியஸ் நிறுவனத்தின் பணிப்பாளர், திணைக்கள தலைவர்கள், தொழில் முயற்சியாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# IMF நம்பிக்கையை வென்றெடுத்த ஜனாதிபதிக்கு வாழ்த்தும் நன்றியும்

## நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர்



அரசாங்கத்தின் பல் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கவும் கடன் நிலைத்தன்மையை அடையவும் அரசாங்கம் முயற்சித்து வரும் இச்சந்தர்ப்பத்தில் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடன் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கியமை ஒரு வரலாற்று மைக்கல்லாக அமைகிறது.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க அனைத்து வழிகளிலும் அர்ப்பணிப்புடன் முயற்சி செய்யும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு, நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் உறுப்பினரும் இலங்கை நகை தொழிலாளர் சங்க தலைவருமான தி. யோகநாதன் வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இக்கடன் உதவியைப் பெறுவதற்கு இலங்கைக்கு கடன் வழங்கிய பாரிஸ் கழகம், சீனா, இந்தியா உள்ளிட்ட அதன் உத்தியோகபூர்வ கடன் வழங்குனர்களின் நிதி உத்தரவாதம் கிடைத்துள்ளமை நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க கிடைத்த மிகப்பெரிய வாய்ப்பாகும். இதற்கு அனைத்து வழிகளிலும் முயற்சி செய்து முதற்கட்டமாக கடன் உதவித் திட்டம் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

முன்னொருபோதும் இல்லாத சவால்களிலிருந்து பொருளாதாரத்தை மீட்பதற்கும், அனைத்து பங்குதாரர்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு தேவையான கொள்கை ரீதியான ஏற்பாடுகள் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்தின் ஊடாக கிடைக்கப்பெறும் என நம்புகின்றேன் என மேலும் தெரிவித்துள்ளார்.

# அம்பாறை மாவட்டத்தில் நிலவும் கடும் உஷ்ணம்

அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் தற்போது கடும் உஷ்ணத்துடன் கூடிய வரட்சிக் காலநிலை நிலவி வருகின்றது.

மக்கள் வீடுகளில் தங்கியிருக்க முடியாமலும், வெளியில் நடமாட முடியாமலும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். நோன்பு நோற்கும் முஸ்லிம்களும் சிரமங்களை எதிர்கொள்ளிக்னறனர்.

தற்போதைய உஷ்ணக் காலநிலையில் மக்கள் மிகுந்த அவதானத்துடன் தொழிற்பட வேண்டும் என ஆலோசனை தெரிவிக்கப்படுகின்றது. மக்கள் தங்களது அன்றாட வெளித் தேவைகளை காலை வேளையிலயே நிறைவு செய்து கொண்டு வீட்டில் முடங்கி விடும் நிலை காணப்படுகின்றது.

தற்போதைய வரட்சிக் காலநிலை காரணமாக நீர்நிலைகள், ஆறுகள், குளங்கள், கிணறுகளின் நீர்மட்டம் வெகுவாகக் குறைவடைவது அவதானிக்கப்பட்டுள்ளது.

வரட்சி தொடருமானால், எதிர்காலத்தில் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில், பொது மக்களுக்கு பௌஸர் மூலம் குடிநீர் விநியோகிக்க வேண்டிய தேவையேற்படும் என எதிர்வு கூறப்படுகின்றது. ஆகையால், சம்பந்தப்பட்டவர்கள் இதற்கான முன்னேற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் குறிப்பிடப்படுகின்றது.

# ரயில் கடவை ஊடான பயணத் தடைக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டம்

## மட்டு. திராய்மடு சுவிஸ் கிராமத்தில் பதற்றம்

மட்டக்களப்பு குறூப் நிருபர்

மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள திராய்மடு சுவிஸ்கிராமம் பகுதியில் ரயில் கடவையில் போக்குவரத்துக்கு தடை விதித்ததை கண்டித்து கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி சென்ற ரயிலை மறித்து நேற்று முன்தினம் மாலை பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் இதன் காரணமாக சுமார் 3 மணி நேர தாமதத்தின் பின்னரே ரயிலை செல்ல அனுமதித்துள்ளனர்.

கடந்த 2004 சுனாமியால் மட்டக்களப்பு நாவலடி பிரதேசத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களை திராய்மடு என்றழைக்கப்படும் சுவிஸ்கிராமத்தில் குடியேற்றினர். இந்த கிராமத்தில் இருந்து மட்டக்களப்பு ஊறணி சந்திக்குச் செல்லும் வீதியில் குறுக்கே உள்ள ரயில் தண்டவாள கடவையை மக்கள் பயணிப்பதற்கு பாவித்து வந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் சுவிஸ் கிராமத்திற்கு செல்லும் பிரதான





வீதியை ரயில் கடவையினை கடக்கும் வீதி பகுதியினை ரயில் நிலைய ஊழியர்கள் அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வீதியை தடை செய்தனர் இதனையடுத்து இந்த வீதிதடைக்கு எதிர்ப்பு தெரிவித்து அந்தபிரதேச மக்கள் ஒன்றிணைந்து ரயில் கடவையை மறித்து கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்த ரயிலை அந்த பகுதியில் மறித்து தண்டவாளத்தில் படுத்துக் கிடந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ரயில் தண்டவாளத்திற்கு எதிராக அமைந்துள்ள பாடசாலை வைத்தியசாலை மற்றும் நகருக்கு செல்வதாயின் சுமார் 4 கிலோமீற்றர் தூரம் சுற்றி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே வீதியை மீண்டும் பயன்பாட்டுக்கு ஏற்றமுறையில் தராவிட்டால் தாங்கள் இப்பகுதியிலிருந்து செல்வதில்லை எனவும் ரயிலையும் செல்லவிடமாட்டோம் எனவும் பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அந்த பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டதையடுத்து அங்கு கொக்குவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, ரயில் நிலைய அதிகாரிகளிடமும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு பொதுமக்களுக்கு வீதியை மீண்டும் புனரமைத்து தடை அகற்றப்படும் என உத்தரவாதம் வழங்கப்பட்டு வீதியை ரயில்வே ஊழியர்கள் புனரமைத்ததையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர்.



பட்டிருப்பு கல்வி வலயத்திலுள்ள மட்/பட்/துறைநீலாவணை மெதடிஸ்த மிஸன் தமிழ் கலவன் பாடசாலையில் இறுதியாகப் பணியாற்றி ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெற்ற ஆசிரியைகளான திருமதி தங்கமலர் மயில்வாகனம், திருமதி சுகிர்தராணி கனகசூரியம் ஆகியோர் இப் பாடசாலை அதிபர் சா.கிருபைராசா தலைமையில் வரவேற்கப்பட்டு கவி வாழ்த்துமடல் வழங்கி கௌரவிக்கப்பட்ட போது... படம்: துறைநீலாவணை நிருபர்

# தென்கிழக்குப் பல்கலை, ரஷ்ய பல்கலையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து

ஒலுவில் விசேட நிருபர்

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கும், ரஷ்யா யாகோவ்லேவ் சுவாஷ் மாநில கல்வியியல் பல்கலைக்கழகத்திற்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தென்கிழக்குப் பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகம் சர்வதேச ரீதியாக செயற்படுகின்ற பல்கலைக்கழகங்கள், கல்வி மற்றும் ஆய்வு சார்ந்த அமைப்புக்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டு, அவற்றினை பயனுள்ள வகையில் நடைமுறைப் படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் எம். எஸ்.ஏ.றியாட் ரூளியின் தலைமையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் ரஷ்யா யாகோவ்லேவ் சுவாஷ் மாநில கல்வியியல் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் விளாடிமிர் நிகோலாவிச் லவனோவ்,



உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர். புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் கற்றல், கற்பித்தல், ஆய்வு மற்றும் புத்தாக்கத் துறைகளில் தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்களும் பயனடைவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக, உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு ரஷ்ய மொழி கற்கை நெறியும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், அத்துடன் ரஷ்ய பல்கலைக்கத்தினால் தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் மற்றும் பாடவிதான செயற்பாடுகளையும் முன்னெடுப்பதற்கு பேராசிரியர் விளாடிமிர் நிகோலாவிச் லவனோவ் உறுதியளித்துள்ளதாக தெரிவித்தார்.

விரிவுரையாளர்கள் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்கள், ஆய்வு மாநாடுகள், ஆய்வு வெளியீடுகள், விரிவுரையாளர்களுக்கு பயிற்சிகள் உள்ளிட்ட பல ஒன்றிணைந்த வேலைத் திட்டங்களை துரிதகதியில் நடைமுறைப்படுத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

# மட்டக்களப்பு காந்தி பூங்கா வாவியில் பெண் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு குறூப் நிருபர்

மட்டக்களப்பு காந்திபூங்காவுக்கு அருகிலுள்ள வாவியில் பெண் ஒருவர் சடலமாக நேற்று ஞாயிற்றுக்கிழமை ( 2 6) மீட்டுள்ளதாக ம ட்டு தலைமையக பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த வாவியில் பெண் ஒருவர் சடலமாக நீரில் மிதப்பதை கண்டு பொதுமக்கள் பொலிசாருக்கு தகவல் வழங்கியதையடுத்து பொலிசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டதுடன்,

சடலமாக மீட்கப்பட்டவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைப்பதற்கு நீதிமன்ற உத்தரவை பெறுவதற்கான நடவடிக்கையினை மேற் கொண்டுவருவதாக பொலிசார் தெரிவித்தனர்

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு தலைமையக பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வீதி ஓரங்களில் பாதுகாப்பற்ற உணவுப் பொருட்கள் விற்பனை

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

ஒலுவில் விசேட நிருபர்

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் நோன்பு காலத்தில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் வீதி ஓரங்களில் உணவுப் பொருட்கள் விற்பனை செய்வதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது நோன்பு காலம் ஆகையால் வீதி ஓரங்களில் உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றது.

அங்கு சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்படாமல் உணவுப் பண்டங்கள் விற்பனை செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் கையுறை மற்றும் உணவு கையாளும் உபகரணங்கள் போன்றவை பாவிக்கப்படுவதில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதி ஓரங்களில் வடிகானுக்கு போடப்பட்டுள்ள பாதுகாப்பு மூடியின் மேல் உணவுப் பண்டங்கள் வைக்கப்பட்டுள்ளதால் ஈக்கள் மொய்ப்பதோடு அப் பிரதேசத்தில் துர்நாற்றம் வீசுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டு வீதி ஓரங்களில் விற்கப்படும் உணவுப் பொருட்களை தடை செய்ய வேண்டுமென பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சாய்ந்தமருதில் அரசின் நலத்திட்ட உதவிகள் பெறுபவர்களுக்கு இலவச அரிசி விநியோகம்

சவளக்கடை குறூப் நிருபர்

அரசின் நலத்திட்ட உதவிகள் பெறுபவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்மொழியப்பட்ட இலவச அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கு இலவச அரிசி வழங்கும் நிகழ்வு நேற்று (26) ஞாயிற்றுக்கிழமை சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் களஞ்சியசாலையில் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக் தலைமையில நடைபெற்ற இந்நிகழ்வில் தலைமைப் பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.எல்.யூ. ஜூனைதா, சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் றியாத் ஏ.மஜீத், சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஜெமீல் உள்ளிட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



ஏறாவூர் நகர் பிரதேச செயலகப் பிரிவில் எட்டாயிரத்து தொளாயிரத்து 43 குடும்பங்களுக்கு அரிசிப்பொதி வழங்கும் சம்பிரதாய நிகழ்வு பிரதேச செயலாளர் நிஹாறா மௌஜூத் தலைமையில் நடைபெற்ற போது.... படம் ஏறாவூர் நிருபர்

# தென்னை மரத்திலிருந்து விழுந்த இளைஞன் படுகாயம்

றொட்டவெவ குறூப் நிருபர்

தென்னை மரத்திலிருந்து தேங்காய் பறிப்பதற்காக ஏறிய இளைஞன் தவறி விழுந்து இடுப்பு உடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ்வனர்த்தம் (25) மாலை இடம் பெற்றுள்ளது.

இந்த அனர்த்தத்தில் திருகோணமலை மொரவெவ நாமல்வத்தை பகுதியைச் சேர்ந்த நிஷாம்தீன் ரினோஸ் (20 வயது) என்பவரே காயமடைந்துள்ளார். வறுமை காரணமாக தமது குடும்பங்களின் கஷ்டத்தை போக்க கூலிக்காக தென்னை மரத்தில் ஏறிய இளைஞன் காய்ந்த மட்டையை பிடித்த சந்தர்ப்பத்தில் தவறுதலாக விழுந்த சம்பவமொன்று திருகோணமலை நாமல்வத்தை பகுதியில் பதிவாகியுள்ளது. குறித்த இளைஞன் தென்னை மரத்திலிருந்து விழுந்து மயக்கமுற்ற நிலையில் 1990 அம்பியூலன்ஸ் வண்டி மூலமாக அழைத்துச் சென்று மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# யாழ். நாவலர் கலாசார மண்டப சர்ச்சை

## யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து யாழ். மாநகர சபை வெளியேறுமாறு ஆளுநர் உத்தரவு



யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாநகர சபையை வெளியேறுமாறு வடக்கு மாகாண ஆளுநர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் அமைந்திருக்கும் நாவலர் மண்டபம் யாழ். மாநகர சபையால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் மத்திய அரசாங்கத்தின் கீழுள்ள இந்து கலாசார அமைச்சு குறித்த மண்டபத்தினை தங்களிடம் ஒப்படைக்குமாறு பல தடவைகள் கோரிக்கைகள் விடுத்த போது அது பல தடவைகள் யாழ்.மாநகர சபை அமர்வுகளில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது 45 மாநகரசபை உறுப்பினர்களின் ஏகமனதான தீர்மானத்தின் பிரகாரம் குறித்த விடயம் நிராகரிக்கப்பட்டதுடன் எக்காரணம் கொண்டும் மத்திய அரசாங்கத்திடம் அதனைக் கையளிக்க மாட்டோம் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

அதன் பிற்பாடு இந்து கலாசார அமைச்சும் யாழ்.மாநகர சபையும் இணைந்து குறித்த மண்டபத்தினை நிர்வகிப்பது தொடர்பில் இந்து கலாசார அமைச்சினால் வழங்கப்பட்ட வரைபு தொடர்பாக சபையில் விவாதிக்கப்பட்டு உறுப்பினர்களினால் முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் தொடர்பில் இந்து கலாசார அமைச்சுக்கு அறிவித்து அதனை நிர்வகிப்பது என்று முடிவெடுக்கப்பட்டது.

யாழ். மாநகர சபையின் முதல்வராக வி. மணிவண்ணன் பணிபுரிந்த காலத்தில் மண்டபம் தனியார் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டது. அத்துடன் சைவமகா சபையின் அனுசரணையுடன் யாழ்.மாநகர சபை ஆறுமுகநாவலரின் சிலையினையும் நிறுவியிருந்தது. அத்துடன் குறித்த மண்டபத்தினை புனரமைப்பதற்கு இந்து கலாசார அமைச்சினால் ஒதுக்கப்பட்ட நிதி யாழ்.மாநகர சபையின் வங்கி கணக்கில் வைப்பிலிடப்பட்டு யாழ்.மாநகர சபையினால் கோள்விகோரப்பட்டு குறித்த பணிகள் யாழ்.மாநகர சபையினாலேயே மேற்கொள்ளப்பட்டது.

தற்போது உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் ஏப்ரல் 6ஆம் திகதிக்கு முன்னர் நாவலர் கலாசார மண்டபத்திலிருந்து யாழ் மாநகர சபையை வெளியேறுமாறும் அதன் பிற்பாடு இந்து கலாசார அமைச்சுடன் கலந்துரையாடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் ஆளுநரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ் மாநகர சபை ஆணையாளரின் உத்தரவுக்கு பாபு சர்மா கண்டனம் தெரிவிப்பு



நாவலர் கலாசார மண்டபத்திலே, நாவலர் பணிகளைத் தொடர்ந்து இடையூறுகள் இன்றி இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் சுதந்திரமான முறையில் முன்னெடுக்கவும், யாழ்.மாநகர சபை ஆணையாளரின் தான் தோன்றித்தனமான செயற்பாடுகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்கும்படியும், வலியுறுத்தி பாபு சர்மா ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் ஆகியவற்றுக்கு தெரியப்படுத்தியுள்ளதாக அறிய முடிகிறது.

இலங்கை மாதா பெற்றெடுத்த தேசிய வீரர்களில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களும் ஒருவர்.

நாவலர் பெருமான் பிறந்த இடத்திலே, நாவலர் பெருமானை நினைவு கூரும் வகையிலே மத்திய அரசாங்கத்தால் நிறுவப்பட்டதே நாவலர் கலாசார மண்டபம். நாவலர் ஆண்டினை முன்னிட்ட செயற்றிட்டப் பணிகளுக்கு அமைவாக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதி அனுசரணையில் நாவலர் கலாசார மண்டபத்தின் புனரமைப்பு வேலைகள் நிறைவு நிலையை எட்டியுள்ளன. அங்கு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் தேசிய வீரரான நாவலர் பெருமானின் பணிகளைச் சிறப்புற மேற்கொண்ட வண்ணம் உள்ளது. சில நல்லெண்ண அடிப்படையில் அக்கலாசார மண்டபத்திலே இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் யாழ். மாநகர சபை நிர்வாகமும் இணைந்து பணியாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு, யாழ். மாநகர சபை ஆணையாளரின் தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்திலே நடைபெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வுக்காக ஆணையாளர் அவர்களால், ஒரு தேசிய வீரரை அவமதிக்கும் விதத்தில் நாவலர் பெருமானது திருவுருவப் படம் கழற்றப்பட்டு ஒரு மூலையில் போடப்பட்டுள்ளது. இந்த விடயத்தை முன்னிறுத்தி நாவலர் கலாசார மண்டபத்திலே கடமையாற்றும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பெண் உத்தியோகத்தர் ஒருவரையும் தகாத வார்த்தைப் பிரயோகத்தைப் பயன்படுத்தி யாழ். மாநகர சபை ஆணையாளர் ஏசியுமுள்ளார்.

இந்தப் பின்னணியிலே தான் ஆணையாளரின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளைக் கண்டித்து பாபு சர்மா அவர்களால் முறைப்பாடுகள் அனுப்பப்பட்டுள்ளன.

# வடக்கின் உதயம்

## நாவலர் பெருமானினை யாழ். மாநகர சபை ஆணையாளர் மதித்து நடக்க வேண்டும்



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்குரிய நாவலர் கலாசார மண்டபத்திலே நாவலர் பணியை நாவலர் பெருமான் பிறந்த இருநூறாவது அகவை ஆண்டு நிறைவுடன் முன்னெடுத்த வண்ணம் உள்ளது. பல இழுபறிகளுக்குப் பின்னர் இரு தரப்பு ஒப்புதல்களோடு நாவலர் கலாசார மண்டபத்திலே இணைந்த பணியை முன்னெடுப்பது என்ற முடிவின் அடிப்படையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் யாழ் மாநகர சபை நிர்வாகமும் இணைந்து செயற்படுவது என்ற முடிவு எட்டப்பட்டிருந்தது. யாழ் மாநகர சபையின் முன்னாள் முதல்வர்களான ஆனோல்ட், வி. மணிவண்ணன் முதலானோர் இச் செயற்பாடுகளுக்குத் துணை நின்ற போதும் , யாழ் மாநகர ஆணையாளரின் நடவடிக்கை தான்தோன்றித் தனமாகவும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நாவலர் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் விதமாகவும் அமைந்துவருவது வருத்தத்திற்குரியது.

கடந்த ஒரு சில நாட்களுக்கு முன்பு நாவலர் கலாசார மண்டபத்திலே நடைபெற்ற நிகழ்வொன்றிற்காக, யாழ் மாநகர சபை ஆணையாளரின் உத்தரவின் பேரில் , சைவத்தையும் தமிழையும் வளர்த்த ஒரு தேசிய வீரரை அவருக்கென்று அமைக்கப்பட்ட கலாசார மண்டபத்திலேயே அவமதிக்கும் விதத்தில் நாவலர் பெருமானின் திருவுருவப் படம் கழற்றப்பட்டு ஒரு மூலையில் போடப்பட்டுள்ளது. இந்த அநாகரிகச் செயற்பாட்டுக்கு உரிய தரப்பினரால் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் ஏற்கனவே இணங்கிய வகையில் நாவலர் கலாசார மண்டபத்திலே இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் சுதந்திரமான முறையில் நாவலர் பணியை முன்னெடுப்பதற்கும் யாழ் மாநகர சபை பொதுநூலகத்தை நாவலரது ஞாபகார்த்த நூலகமாக யாழ் மாநகர சபை செயற்படுத்துவதற்கும் உரியதரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் வவுனியாவிற்கு திடீர் விஜயம்

வவுனியா விசேட நிருபர்



பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் வன்னிப் படைத் தலைமையகத்திற்கு திடீர் விஜயம் ஒன்றினை மேற்கொண்டுள்ளார். வவுனியாவில் அமைந்துள்ள வன்னிப் படைத் தலைமையகத்திற்கு நேற்று முன்தினம் (25) திடீர் விஜயம் மேற்கொண்ட அவர் வன்னிப் படைக் கட்டளைத் தளபதி உள்ளிட்ட இராணுவ உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றையும் மேற்கொண்டுள்ளதுடன், படைத் தலைமையகத்தையும் பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து, வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாக கு.திலீபனின் அலுவலகத்திற்கு சென்று அவருடனும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHOUSA) மற்றும் இரட்ணம் பவுண்டேசன்(Ratnam FoundationUK) என்பவற்றின் நிதிப்பங்களிப்பில் இளவாலை றோமன் கத்தோலிக்க தமிழ் ஆண்கள் பாடசாலையில் திறன் வகுப்பறையொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. வைபவத்தில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தின் திட்டமிடல் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி லாவண்யா சுகந்தன் மற்றும் சிறப்பு விருந்தினராக அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் இலங்கைக்கான வதிவிட பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## யாழ்ப்பாணத் தொழில்நுட்ப கல்லூரியின் வைரவிழாவும் மலர் வெளியீடும் இன்று

யாழ்ப்பாணத் தொழில்நுட்பக் கல்லூரியின் வைர விழா வைபவமும் மலர் வெளியீடும் இன்று 27 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கல்லூரி வளாகத்தில் நடைபெறுகிறது.

யாழ். தொழில்நுட்ப கல்லூரியின் பணிப்பாளர் எஸ். பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் எஸ். சற்குணராஜா பிரதம அதிதியாகவும், யாழ். மாவட்ட செயலாளர் ஏ. சிவபாலசுந்தரன் விஷேட அதிதியாகவும் கலந்து கொள்கின்றனர்.

தொழில் நுட்பக்கல்வி பயிற்சித் திணைக்களத்தின் கீழ் 1959இல் ஆரம்பிக்கப்பட்டு வருடந்தோறும் 1500ற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு தொழில்சார் பயிற்சிகளை வழங்கும் வடமாகாணத்தின் ஒரு முன்னணி தொழில்துறை சார்ந்த ஓர் நிறுவனமாக யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரி விளங்குகிறது. இங்கு கல்வியினைக் கற்ற மாணவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்துறைசார்ந்த தொழில்நுட்ப ரீதியான உயர்தொழில் வாய்ப்புக்களைப் பெற்று உயர் அந்தஸ்தினை பெற்றவர்களாக உள்ளனர். இக்கல்லூரி, தனது அறுபதாவது(60) ஆண்டினை 2019 இல் பூர்த்தி செய்தது. என்றாலும் அசாதாரண சூழ்நிலைகளின் விளைவாகவே இவ்விழா இன்று நடாத்தப்படுவதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## சிறைச்சாலை காவலரிடமிருந்து தப்பி ஓடிய சிறைக்கைதி துரத்தி பிடிப்பு



ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியிடம் முன்னிலைப்படுத்துவதற்காக அழைத்து வரப்பட்ட சிறைச்சாலை கைதி ஒருவர் சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து தப்பிச் சென்ற விதம் அடங்கிய காணொளி ஒன்று நேற்று முன்தினம் (25) வெளியாகியுள்ளது.

சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் கொண்டுவரப்பட்ட கைதி ஒருவர் சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து தப்பித்து வவுனியா வைத்தியசாலையை அண்மித்துள்ள வயல் வெளியில் ஓடிச் சென்றுள்ளார்.

அப்போது குறித்த கைதியை சிறை அதிகாரிகள் பின்தொடர்ந்து சென்று கைது செய்வதை கைத்தொலைபேசியில் நபர் ஒருவர் வீடியோவாக பதிவு செய்துள்ளார்.

சிறை அதிகாரிகள் கைதியை துரத்திச் சென்று கைது செய்யும் காட்சிகளும் பதிவாகியுள்ளன.

## கசிப்பு போத்தல்கள் 54 உடன் பெண் ஒருவர் கைது



தருமபுர பொலிஸ் பிரிவுக்குற்பட்ட விசுவமடு புண்ணை நீராவி பகுதியில் நேற்று அதிகாலை பெண் ஒருவர் கசிப்பு போத்தல்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீதிச் சோதனையில் பொதி செய்யப்பட்ட கசிப்பினை மோட்டார் சைக்கிளின் மூலம் 54 போத்தல்களை வேறொரு பகுதிக்கு கொண்டு சென்ற பொதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட பெண்ணிடமிருந்து 54 போத்தல் கசிப்பு,மோட்டார் சைக்கிள் என்பன தருமபுர பொலிஸாரால் பறிமுதல் செய்துள்ளதுடன் சந்தேக நபர் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பொழுது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

## வவுனியா வெடுக்குநாறி ஆதிலிங்கம் உடைப்பு; யாழ்ப்பாணத்தில் இந்து அமைப்பினர் ஆர்ப்பாட்டம்

யாழ். விசேட நிருபர்



வவுனியா வெடுக்குநாறி மலையில் பிரதிஸ்டை செய்யப்பட்ட ஆதிலிங்கம் உடைக்கப்பட்டமையை கண்டித்து யாழ்ப்பாணத்தில் சைவ அமைப்பினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்துக்கு அருகில் நேற்றைய தினம் ஞாயிற்றுக் கிழமை ஒன்று கூடிய சைவ அமைப்பின் பிரதிநிதிகள் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டன.

இதன் போது 'வெடுக்குநாரி எங்கள் சொத்து', 'வெடுக்குநாரியில் உடைத்த ஆதிலிங்கத்தை மீள பிரதிஸ்டை செய்', 'வெடுக்குநாரியில் ஆதிலிங்கம் உடைக்கப்பட்டமையை கண்டிக்கிறோம்' போன்ற கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.


## கிளிநொச்சியில் குளங்களை பராமரிக்கும் ஊழியர்களுக்கு பற்றாக்குறை

பரந்தன் குறூப் நிருபர்

கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவின் கீழ் உள்ள இரணை மடுக்குளம் உள்ளிட்ட நான்கு குளங்களையும் பராமரிப்பதற்கு 48 வரையான பராமரிப்பு ஊழியர்கள் தேவையான நிலையில் தற்போது ஏழு பராமரிப்பு ஊழியர்கள் மாத்திரமே கடமையாற்றி வருகின்றனர். இதனால் குளங்களில் பராமரிப்பு வேலைகளை செய்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குவதாக கிளிநொச்சி கிழக்கு பிராந்திய நீர்ப்பாசன பொறியிலளர் அலுவலகத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசன பொறியலாளர் பிரிவுக்குட்பட்ட இரணைமடுக்குளம், கல்மடுக்குளம், கனகாம்பிகை குளம், பிரமந்தனாறு குளம் உள்ளிட்ட நான்கு குளங்களையும் பராமரிப்பதற்கு 48 வரையான பராமரிப்பு ஊழியர்கள் தேவையான நிலையில் தற்போது ஏழு பராமரிப்பு ஊழியர்கள் மாத்திரமே கடமையாற்றி வருகின்றனர்

## வெடுக்குநாறி மலையில் கழற்றி வீசப்பட்ட ஆதிலிங்கேஸ்வரர்



வவுனியா விசேட நிருபர்

வவுனியா நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்த ஆதிலிங்கம் கழற்றி வீசப்பட்டுள்ளதுடன், ஏனைய விக்கிரகங்களும் மாயமாகியுள்ளமை பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தொல்பொருட் திணைக்களமும், நெடுங்கேணி பொலிசாரும் பல்வேறு தடைகளை ஏற்படுத்தி வந்ததுடன் தொல்பொருள்கள் சார்ந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கடந்த 2021 ஆம் ஆண்டு வவுனியா நீதவான் நீதிமன்றில் வழக்கினையும் தாக்கல் செய்திருந்தனர்

இது தொடர்பான வழக்கு விசாரணைகள் வவுனியா நீதிமன்றில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த நிலையில் தொல்பொருட்களை சேதப்படுத்திய குற்றச்சாட்டில் ஆலயத்தின் நிர்வாகத்தினர் விளக்கமறியலிலும் வைக்கப்பட்டனர்.

எனினும் கடந்த வருடம் குறித்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட ஆலயத்தின் நிர்வாகத்தினர் வழக்கிலிருந்து தற்காலிகமாக விடுதலை செய்யப்பட்டதுடன், குறித்த சம்பத்துடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகள் யார் என்பதை ஆதாரங்களுடன் கண்டறிந்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு பொலிஸாருக்கு நீதவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்றுக் காலை ஆலயத்திற்கு சென்ற கிராம மக்கள் ஆலய விக்கிரகங்கள் திருடப்பட்டு அழித்தெறியப்பட்டமையை கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர்.

குறிப்பாக ஆலயத்தின் பிரதான விக்கிரகமான ஆதிலிங்கம் அகழ்ந்து எடுக்கப்பட்டு அருகில் இருந்த புதருக்குள் வீசப்பட்டிருந்தது. அத்துடன் பிள்ளையார், அம்மன், வைரவர் விக்கிரங்களும் பெயர்த்தெடுக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# பெருகமலை ஸாக்கிரீன் மத்ரஸாவில் ரமழானை வரவேற்கும் நிகழ்வு



பேருவளை விசேட நிருபர்

பேருவளை சீனன்கோட்டை பெருகமலை ஸாக்கிரீன் குர்ஆன் மத்ரஸாவில் ரமழான் மாத விடுமுறையையொட்டி மாணவர் மன்ற நிகழ்ச்சியும் பரிசளிப்பு வைபவமும் அதிபர் மௌலவி எஸ்.எச்.எம்.இம்ரான் (ஹுமைதி) தலைமையில் மத்ரஸா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

ஸாக்கிரீன் பள்ளிவாசல் பரிபாலன கமிட்டி செயலாளர் அஷ்ஷெய்க் மக்கி மன்ஸூர் (நளீமி) பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். கிராஅத், கிராஅத் மனனம், கஸீதா, இஸ்லாமிய கீதம், பேச்சு, கேள்விபதில் (அறிவுக் களஞ்சியம்) உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றதோடு 100 மேற்பட்ட சிறுவர்கள் இதில் பங்குபற்றினர்.

சிறுவர்கள் புனித ரமழான் மாதத்தை வீண் விளையாட்டு, பொழுது போக்குகளில் கழிக்காமல் குர்ஆன் ஓதல், திக்ர், தராவீஹ் தொழுகை, ஹிஸ்புல் குர்ஆன் மஜ்லிஸுகளில் பங்கு பற்றி கண்ணியப்படுத்த வேண்டும். புனித ரமழான் அல்குர்ஆன் அருளப்பட்ட மாதமாகும். எனவே ரமழானில் பல குர்ஆன்களை ஓதி தமாம் செய்ய வேண்டும் என்றார்.

## மின்னல் தாக்கியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

கெலேதிவுல்வெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இஹல சிங்ஹாரகம குளத்து வெளியில் மின்னல் தாக்கியதில் 45 வயதுடைய கணவர் உயிரிழந்துள்ளதுடன் மனைவி படுகாயமடைந்து எரிகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றார். கெலேதிவுல்வெவ ரலபனாவ மக்கள் குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய நபரே இறந்துள்ளார்.

உயிரிழந்துள்ளவர் அவரது 39 வயதுடைய மனைவியுடன் கறவை பசுக்களுக்கு புற்களை வெட்டிக்கொண்டு மேய்ச்சலுக்காக இஹல சிங்ஹாரகம குளத்து வெளியில் கட்டப்பட்டிருந்த கால்நடைகளை வீட்டுக்கு கொண்டு செல்வதற்காக சென்றிருந்த போது கடந்த (24) பெய்த அதிக மழையுடன்கூடிய மின்னல் தாக்குதலினால் இருவரும் கடும் எரிகாயங்களுக்குள்ளாகி நொச்சியாகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் கணவன் உயிரிழந்துள்ளதுடன் மனைவி எரிகாயங்களுடன் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

## ஜப்பான் சுற்றுலாப் பயணி மீது பாலியல் தொந்தரவு சுற்றுலா வழிகாட்டி கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

ஜப்பான் நாட்டு சுற்றுலாப் பெண்ணை பாலியல் ரீதியில் தொந்தரவு செய்ததாக கூறப்படும் சுற்றுலா வழிகாட்டி ஒருவரை அநுராதபுரம் சுற்றுலா பிரிவு பொலிசார் கைது செய்துள்ளனர். சுற்றுலாப்பயணி செய்த முறைப்பாட்டிற்கமைய அவர் கைது செய்யப்பட்டுள்ளார். அநுராதபுரம் புனித நகர பகுதிக்கு தான் சென்றிருந்தவேளை குறித்த நபர் தன்னை பாலியல் ரீதியில் துன்புறுத்தினார் என ஜப்பானிய சுற்றுலாப் பெண் அநுராதபுரம் சுற்றுலா பொலிஸ் பிரிவில் முறைப்பாடு செய்திந்தமை குறிப்பிடத்தக்கது.

### காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. RBK/LAN/AQURE/A3/74/373

கீழே காட்டப்படும் அட்டவணையில் குறிப்பிடப்படும் காணியின் வாழ்நாள் உரிமையாளருக்கு நஷ்ட ஈட்டுத் தொகையான ரூபாய் இருநூற்று ஐம்பத்து மூவாயிரத்து நாநூற்று ஐம்பத்தொன்பது சதம் இருபத்து நான்கு (ரூ. 253,459.24) கேகாலை மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இல. LA/165/2022 ன் கீழ் கையளிக்கப்பட்டுள்ளதை இத்தால் அறியத் தருகின்றேன். மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து 17.11.2022ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட பத்திரிகை இல. 2306/55 இணைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : சப்ரகமுவ |
| மாவட்டம் | : கேகாலை |
| பிரதேச செயலாளர் பிரிவு | : ரம்புக்கனை |
| கிராமம் | : குடாகம |
| காணியின் பெயர் | : சில்லுகல |
| வரைபட இல. | : இ.கி. வரைபட இல. 135 பிற்சேர்க்கை இல. 10 |
| துண்டு இல. | : 372 |
| விஸ்தீரணம் | : ஹெக்டயார்ஸ் 0.0727 |
| அமைவு | : வடக்கு - துண்டு இல 368 மற்றும் 372 |
| | கிழக்கு - துண்டு இல 372 மற்றும் 379 |
| | தெற்கு - துண்டு இல 379 மற்றும் 378 |
| | மேற்கு - துண்டு இல 374 மற்றும் 367 |

**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலாளர் அலுவலகம்,**
**ரம்புக்கனை.**

**2023.03.02ம் திகதி**

நீதிமன்ற உத்தரவினை அவமதித்த சம்பவம்;

# சட்டத்தரணிகள் இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நீதவான் உத்தரவு

அநுராதபுரம் தினகரன், அநுராதபுரம் மாவட்ட குறூப் நிருபர்கள்

நீதிமன்ற உத்தரவினை அவமதித்த சம்பவத்துடன் தொடர்புடைய சட்டத்தரணிகள் இருவரையும் உடன் கைது செய்து மதவாச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு மதவாச்சி நீதவான் பிரியந்த ஹால்யாலவினால் அநுராதபுரம் வலயத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மூலமாக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் பகுதியை வசிப்பிடமாக கொண்ட ஆண் சட்டத்தரணி ஒருவருக்கும் பெண் சட்டத்தரணி ஒருவருக்குமே இவ்வாறு நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. அநுராதபுரம் ரம்பாவ பிரதேச செயலாளர் பிரிவின் இக்கிரிகொள்ளாவ பகுதியிலுள்ள ஹோட்டல் கட்டிடம் அமைந்துள்ள காணியொன்றின் உரிமையினை மனுதாரர்களுக்கு வழங்குவதற்காக வேண்டி மதவாச்சி நீதிமன்ற பதிவாளர் மற்றும் நீதிமன்ற பிஸ்கால் உத்தியோகத்தர்கள் பொலிஸாரது பாதுகாப்புடன் குறித்த இடத்திற்கு சென்றவேளை இரு சட்டத்தரணிகளும் நீதிமன்ற உத்தியோகத்தர்களது கடமைக்கு கடுமையான முறையில் இடையூறு விளைவித்து நீதிமன்ற உத்தரவினை அவமதித்தல் மற்றும் கடந்த மாதம் 24 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகாத காரணங்கள் தொடர்பில் மதவாச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஆர்.எம்.ஐ.ஜீ. ரத்னாயக்கவினால் பீ அறிக்கை ஊடாக நீதிமன்றத்தில் முன்வைத்த விடயங்களை பரிசீலணைக்கு எடுத்துக் கொண்டதன் பின்னரே மதவாச்சி நீதிமன்ற நீதவானினால் மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### சக்தி மற்றும் வலு அமைச்சு

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

### விலைமனு அறிவித்தல்

**BIDS FOR THE TRANSPORTATION OF BITUMEN AND OTHER FCL CONTAINERS OF CPC FOR THE YEAR - 2023/2024**

**B/08/2023**

பின்வரும் தகைமையையுடைய புகழ் பெற்ற போக்குவரத்து ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மேலேயுள்ள விடயத்திற்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் விலைமனுக்களை அழைக்கின்றார்.

(a) Owning a minimum fleet of 10 Nos. of 20 ft. FCL Container Lorries and are in a Position to supply 25 or more Container Lorries at a time for the transport of 20 ft. containers of weight not exceeding 24 Metric Tons containing drums of Bitumen and other items ordered by the CPC.

and

(b) Owning a minimum fleet of 2 Nos. of 40 ft. FCL Container Lorries and are in a Position to supply 05 or more Container Lorries at a time for the transport of 40 ft. containers of weight not exceeding 35 Metric Tons containing drums of Bitumen and other items ordered by the CPC.

மீளளிக்கப்படாத கட்டணமான **2000 ரூபாவை (அதாவது 1696.71 + 2.5% SSCL + 15% வெசேவ)** இபெகூ இற்கு செலுத்திய பின்னர் **2023.04.18 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரை** கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 1 ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கு பொறுப்பாகவுள்ள முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

விலைமனுக்கள் 2023.04.19 ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு மேலேயுள்ள முகவரியின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கு பொறுப்பாகவுள்ள முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்களின் மூடும் நேரம் முடிந்ததும் மூடப்பட்டு உடனடியாகவே திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

விலைமனுக்கள் தபாலில் பதிவு செய்யயப்பட்ட தபாலுறையில் அனுப்பப்படலாம் அல்லது மேலேயுள்ள முகவரியிலுள்ள பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கு பொறுப்பாகவுள்ள முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம்.

பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கு பொறுப்பாகவுள்ள முகாமையாளரிடமிருந்து தெளிவுறுத்தல்களை (ஏதுமிருப்பின்) கீழே வழங்கப்பட்டுள்ள தொலைபேசி மற்றும் தொலைநகல் இலக்கங்களினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள் பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல.: 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09.**
**தொலைபேசி: 011-5455335, தொலைநகல்: 011-5455424**

Repeat Your ad For Better Offers

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### மருத்துவ ஆராய்ச்சி ஸ்தாபனம், கொழும்பு 08

### மருத்துவ ஆராய்ச்சி ஸ்தாபனத்தில் புதிய Air circuit breaker இன் நிறுவல் மற்றும் மின் துணைநிலை பராமரிப்புக்கு கேள்விமனுக்களுக்கான அழைப்பு

எதிர்பாராச் செலவுகள் மற்றும் வரிகள் தவிர்த்து 1.61 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்ட செலவுகளைக் கொண்ட கீழ் விபரிக்கப்பட்டவாறு கொழும்பு 08, மருத்துவ ஆராய்ச்சி ஸ்தாபனத்தில் "புதிய Air circuit breaker இன் நிறுவல் மற்றும் மின் துணைநிலை பராமரிப்புக்காக" பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கொழும்பு 08, மருத்துவ ஆராய்ச்சி ஸ்தாபன, பணிப்பாளரின் சார்பில் கொழும்பு 08, மருத்துவ ஆராய்ச்சி ஸ்தாபன, பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

மருத்துவ ஆராய்ச்சி ஸ்தாபன வளாகத்தில் இந்தத் தளம் அமைந்துள்ளது. இந்த ஒப்பந்தத்தின் கீழ் மின் வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளது. ஒப்பந்தக் காலம் 70 நாட்களாகும்.

2. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்காக தகைமைக்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் பின்வரும் தேவைகளை பூர்த்தி செய்தவராகவும் இருத்தல் வேண்டும்.
   - நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு தேவை.
     - நிபுணத்துவம்: மின் நிறுவல்கள் (தாழ் மின்னழுத்தம்) (EL-LV)
     - தரம் - EM 04 அல்லது அதற்கு மேல்
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தொ.இல. 011-2693532, கொழும்பு 08, மருத்துவ ஆராய்ச்சி ஸ்தாபன பணிப்பாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 09.00 மணி தொடக்கம் 15.00 வரை கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
5. மீளளிக்கப்படாத கட்டணமாக 1,500.00 ரூபாவை செலுத்தி 2023.03.27ஆம் திகதி தொடக்கம் 2023.05.08ஆம் திகதி வரை 9.00 மணி தொடக்கம் 15.00 வரை கொழும்பு 08, மருத்துவ ஆராய்ச்சி ஸ்தாபன பணிப்பாளருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை உங்களால் வாங்க முடியும்.
6. இரு பிரதிகளிலான விலைமனுக்களை 2023.05.08ஆம் திகதி மு.ப. 10.00க்கு முன்னர் குறித்த முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், "புதிய Air circuit breaker இன் நிறுவல் மற்றும் மின் துணைநிலை பராமரிப்புக்கான கூறுவிலை MRI/EI/ME.REP/2022/02" என்று குறிப்பிடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
7. விலைமனு 91 நாட்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் விலைமனுக்கள் மூடப்படும் திகதியில் இருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியானதாக 22,000.00 ரூபா விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மருத்துவ ஆராய்ச்சி ஸ்தாபனம்,**
**கொழும்பு 08**
**தொலைபேசி – 011 2693532**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### விவசாய அமைச்சு

### விவசாயத் திணைக்களம்

பேராதனை விவசாயத் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படும் பின்வரும் நிர்மாணங்களுக்காக அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் சிடா (CIDA) தரப் பதிவைப் பெற்றுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இத்தால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2023-03-28ஆம் திகதி முதல் 2023-04-17ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரையான அலுவலக நேரத்தினுள் இத்திணைக்களத்தின் பொறியியல் பிரிவில் கேள்வி ஆவணங்கள் மற்றும் ஏனைய விபரங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்த்து அறிவித்தலில் தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத வைப்புக் கட்டணத்தைச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2023-04-18ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன் இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் பதிவு செய்து அங்கு கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ விலைமனுக்களை ஒப்படைக்கலாம். அன்றைய தினமே மு.ப. 10.30 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும். இவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

குறித்த விடயம் தொடர்பான மேலதிக விபரங்கள் தேவையாயின் விவசாயத் திணைக்களத்தின் பொறியியலாளர் பிரிவிற்கு வருகை தந்து அல்லது பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக விசாரித்தறிந்துகொள்ளலாம்.

விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் திறக்கப்படும் திகதி, நேரம் என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

| வேலையின் தன்மை | ஆகக் குறைந்த பதிவு (இக்டாட்) (சீடா) (கட்டிட நிர்மாணம்) | விலைமனு வைப்பு | | |
|---|---|---|---|---|
| | | மீளளிக்கப்படும் (ரூபா) | மீளளிக்கப்படாதது | |
| | | | ரொக்கப் பணமாகச் செலுத்துவதனால் (ரூபா) | வங்கிப் பிணை முறியாகச் சமர்ப்பிப்பதானால் (ரூபா) |
| 1. குண்டசாலை பிரதேச பொறியியலாளர் சேவை முனையக் கூரையின் (35m நீளம்) திருத்தவேலைகள் (ரூபா 4,996,345.50) | சீ – 07<br>சீ – 08<br>சீ – 09 | 2,500.00 | 49,950.00 | 99,900.00 |
| 2. பீடைநாசினிகள் பதிவாளர் அலுவலகத்தில் கட்டிடத்தை நிர்மாணித்தல் - படிநிலை II (ரூபா 14,006,951.11) | சீ – 05<br>சீ – 06<br>சீ – 07 | 5,000.00 | 140,000.00 | 280,000.00 |
| 3. மாகந்துர நிலையான கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்குரித்தான சேதனப் பிரிவின் ஆய்வுகூடத்தின் மேல் மாடியை நிர்மாணித்தல் (ரூபா 19,547,047.60) | சீ – 05<br>சீ – 06<br>சீ – 07 | 7,000.00 | 195,450.00 | 390,900.00 |
| 4. பொலன்னறுவை பண்ணையில் இயந்திர புனரமைப்பு நிலையத்தை நிர்மாணித்தல் - படிநிலை II (ரூபா 13,869,608.50) | சீ – 05<br>சீ – 06<br>சீ – 07 | 5,000.00 | 138,650.00 | 277,300.00 |

**பிரதான பொறியியலாளர்,**
**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**பொறியியல் பிரிவு,**
**விவசாயத் திணைக்களம்,**
**பேராதனை.**

**தொலைபேசி இல. 081-2388006/081-2388126**

**தொலைநகல் இல. 081-2388155**

### இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## விலைமனுக்கோரல்

இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8 இல் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, திணைக்களத்தின் கொள்முதல் குழுவின் தலைவரினால் (மேஜர்) பின்வருவனவற்றுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இலக்கம் | பொருளின் பெயர் | மனுப் பாதுகாப்பு (ரூ.) | மீள் செலுத்தப்படாத மனுக்கட்டணம் (ரூ.) |
|---|---|---|---|---|
| 01 | TRC/ADM/01/25/03/44 | ஸ்பெக்ட்ரம் முகாமை பிரிவில் ஒரக்கல் தரவுத்தளத்தின் உரிமம் புதுப்பித்தல் | 60,000.00 | 3,000.00 |
| 02 | TRC/ADM/01/06/03/08/131 | TRCSL இன் ஸ்பெக்ட்ரம் முகாமத்துவ பிரிவில் ஃபயர்வோல் அமைப்பின் உரிமம் புதுப்பித்தல் | 200,000.00 | 5,000.00 |

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மனு ஆவணங்களை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவில் மீளச்செலுத்தப்படாத கட்டணத்தினை பணமாக செலுத்தி **2023.04.18** ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் காரியாலய நாட்களில் **மு.ப.09.00 மணி முதல் பி.ப.03.00 மணி** வரை பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படின் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவினை தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

முத்திரையிடப்பட்ட மனுக்கள் இடப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம் மற்றும் பெயர் என்பவற்றை குறிப்பிட்டு **2023.04.19 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு** முன்னதாக **தலைவர், சிரேஷ்ட கொள்முதல் பிரிவு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,** திணைக்களத்தின் கொள்முதல் குழுவின் தலைவரினால் (மேஜர்) **இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08.** எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது ஆணைக்குழுவின் நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவில் மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடுதல் வேண்டும். மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே ஒவ்வொரு மனுக்களாக திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிக்கு அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் கொள்முதல் குழு (மேஜர்)**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,**
**இல-276, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு 08.**

## காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. RBK/LAN/AQURE/A3/74/372

கீழே காட்டப்படும் அட்டவணையில் குறிப்பிடப்படும் காணியின் வாழ்நாள் உரிமையாளருக்கு நஷ்ட ஈட்டுத் தொகையான ரூபாய் இருநூற்று நாற்பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று தொண்ணூறு சதம் தொண்ணூறு (ரூ. 249,890.90) கேகாலை மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இல. LA/164/2022 ன் கீழ் கையளிக்கப்பட்டுள்ளதை இத்தால் அறியத்தருகின்றேன். மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து 17.11.2022ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட பத்திரிகை இல. 2306/55 இணைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : சப்ரகமுவ |
| மாவட்டம் | : கேகாலை |
| பிரதேச செயலாளர் | |
| பிரிவு | : ரம்புக்கனை |
| கிராமம் | : குடாகம |
| காணியின் பெயர் | : சில்லுகல |
| வரைபட இல. | : இ.கி. வரைபட இல. 135 பிற்சேர்க்கை இல. 10 |
| துண்டு இல. | : 372 |
| விஸ்தீரணம் | : ஹெக்டயார்ஸ் 0.0757 |
| அமைவு | : வடக்கு - துண்டு இல 368 |
| | கிழக்கு - துண்டு இல 371 |
| | தெற்கு - துண்டு இல 379 மற்றும் 373 |
| | மேற்கு - துண்டு இல 373 மற்றும் 387 |

**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலாளர் அலுவலகம்,**
**ரம்புக்கனை.**

**2023.03.02ம் திகதி**

## காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. RBK/LAN/AQURE/A3/65/268

கீழே காட்டப்படும் அட்டவணையில் குறிப்பிடப்படும் காணியின் வாழ்நாள் உரிமையாளருக்கு நஷ்ட ஈட்டுத் தொகையான ரூபாய் ஆயிரத்து நூற்று அறுபத்திரண்டு சதம் பதினான்கு (ரூ. 1,162.14) கேகாலை மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இல. LA/167/2022 ன் கீழ் கையளிக்கப்பட்டுள்ளதை இத்தால் அறியத் தருகின்றேன். மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து 17.11.2022ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட பத்திரிகை இல. 2306/55 இனைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : சப்ரகமுவ |
| மாவட்டம் | : கேகாலை |
| பிரதேச செயலாளர் | |
| பிரிவு | : ரம்புக்கனை |
| கிராமம் | : நத்தம்புர |
| காணியின் பெயர் | : திகனமுல்லவத்த |
| வரைபட இல. | : இ.கி. வரைபட இல. 129 பிற்சேர்க்கை இல. 03 |
| துண்டு இல. | : 268 |
| விஸ்தீரணம் | : ஹெக்டயார்ஸ் 0.0061 |
| அமைவு | : வடக்கு - மல்ஆர ஓய துண்டு இல 56 மற்றும் 209 |
| | கிழக்கு - துண்டு இல 270 |
| | தெற்கு - துண்டு இல 270 |
| | மேற்கு - துண்டு இல 270 மற்றும் 267 |

**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலாளர் அலுவலகம்,**
**ரம்புக்கனை.**

**2023.03.02ம் திகதி**

## காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. RBK/LAN/AQURE/A3/65/291

கீழே காட்டப்படும் அட்டவணையில் குறிப்பிடப்படும் காணியின் வாழ்நாள் உரிமையாளருக்கு நஷ்ட ஈட்டுத் தொகை யான ரூபாய் பதினையாயிரத்து அறுநூற்றுத் தொண்ணூறு சதம் ஐம்பத்தைந்து (ரூ. 15,690.55) கேகாலை மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இல. LA/198/2022 ன் கீழ் கையளிக்கப்பட்டுள்ளதை இத்தால் அறியத் தருகின்றேன். மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து 17.11.2022ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட பத்திரிகை இல. 2306/55 இணைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : சப்ரகமுவ |
| மாவட்டம் | : கேகாலை |
| பிரதேச செயலாளர் | |
| பிரிவு | : ஹிந்தபொன்தெனிள |
| கிராமம் | : நத்தம்புர |
| காணியின் பெயர் | : |
| வரைபட இல. | : இ.கி. வரைபட இல. 129 பிற்சேர்க்கை இல. 03 |
| துண்டு இல. | : 291 |
| விஸ்தீரணம் | : ஹெக்டயார்ஸ் 0.1157ன் 1/3 பங்கு |
| அமைவு | : வடக்கு - துண்டு இல 290 மற்றும் 292 |
| | கிழக்கு - துண்டு இல 292 |
| | தெற்கு - துண்டு இல 293 மற்றும் 289 |
| | வடக்கு - துண்டு இல 289 மற்றும் 287 |

**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலாளர் அலுவலகம்,**
**ரம்புக்கனை.**

**2023.03.02ம் திகதி**

## காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. RBK/LAN/AQURE/A3/74/379

கீழே காட்டப்படும் அட்டவணையில் குறிப்பிடப்படும் காணியின் வாழ்நாள் உரிமையாளருக்கு நஷ்ட ஈட்டுத் தொகையான ரூபாய் ஐந்நூற்று இரண்டாயிரத்து எண்ணூற்று நாற்பத்தெட்டு சதம் ஐம்பத்தொன்று (ரூ. 502,848.51) கேகாலை மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இல. LA/166/2022 ன் கீழ் கையளிக்கப் பட்டுள்ளதை இத்தால் அறியத் தருகின்றேன். மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து 17.11.2022ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட பத்திரிகை இல. 2306/55 இணைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : சப்ரகமுவ |
| மாவட்டம் | : கேகாலை |
| பிரதேச செயலாளர் | |
| பிரிவு | : ரம்புக்கனை |
| கிராமம் | : குடாகம |
| காணியின் பெயர் | : சில்லுகல |
| வரைபட இல. | : இ.கி. வரைபட இல. 135 பிற்சேர்க்கை இல. 10 |
| துண்டு இல. | : 379 |
| விஸ்தீரணம் | : ஹெக்டயார்ஸ் 0.2252 |
| அமைவு | : வடக்கு - துண்டு இல 373 மற்றும் 372 |
| | கிழக்கு - துண்டு இல 371, 380 மற்றும் 378 |
| | தெற்கு - துண்டு இல 380 மற்றும் 378 |
| | மேற்கு - துண்டு இல 378, 374 மற்றும் 373 |

**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலாளர் அலுவலகம்,**
**ரம்புக்கனை.**

**2023.03.02ம் திகதி**

சிறு விளம்பரம்

வேலைவாய்ப்பு

309

வெற்றிடங்கள்
கணக்கியல்/ நிதி

நாவல நுகேகொடையில் அமைந்துள்ள நிறுவனமொன்றிற்கு அனுபவமுள்ள பெண் உதவி கணக்காளர் தேவை. ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியம். சம்பளம் ரூபா 40,000 வழங்கப்படும். வேலை நேரம் காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை. தொடர்புகளுக்கு : 0714888754.
018724

www.adz.lk
it's what you want

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/LP/23/ PT/16/057 | Disaster Recovery (DR) Solution for Oracle E-Business Suite | 300,000.00 | 35,000.00 | 2023.04.11 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குநரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. 2023 மார்ச் 28 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**
**தொலைபேசி இலக்கங்கள்: 011-2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

**வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு**

## வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

# கேள்வி அழைப்பு

வன சீவராசிகள் திணைக்ககளத்தினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள மின் வேலிகள் பராமரிப்பிற்கு தேவையான மரத்தூண்களை கொள்வனவு செய்வதற்கு தகைமையும் தகுதியும் உள்ள கேள்விதாரர்களிடமிருந்து தேசிய போட்டி கேள்விகோரலின் கீழ் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | உருப்படி | அளவு | மீளளிக்கப் படாத கேள்வி விண்ணப்ப படிவ பெறுமதி ரூ. | கேள்வி பிணையின் பெறுமதி ரூ. | கேள்விப் பிணையின் செல்லுபடியாகும் காலம் (கேள்வி திறக்கப்படும் திகதி முதல்) |
|---|---|---|---|---|---|
| WL/02/09/T.P/ 2023 Supply& Delivery timber post | வேலித்தூண் (நீளம் 7'6", சுற்றளவு 16" 19") | 6004 | 7000.00 | 400,000.00 | 90 நாட்கள் |

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மேலதிக தகவல்களை வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் நிதி (011-2871537) ஐ அழைத்துப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களை 2023.03.28 முதல் 2023.04.17 வரை அரச வேலை அலுவலக நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.2.30 வரை பத்தரமுல்ல வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப்பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

02. கேள்விதாரர்களுக்கு ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களை 2023.03.28 முதல் 2023.04.17 பி.ப.2.30வரை கடிதத் தலைப்பில் விடுக்கப்படும் வேண்டுதலின் மூலம் மீளளிக்கப்படாத கட்டணத்தை திணைக்கள காசாளரிடம் காசாக செலுத்தி கொள்வனவு செய்யலாம்.

03. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு வேறுவேறாக கடித உறைகளில் இட்டு பொறியிட்டு மீண்டும் ஒரே உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகை இலக்கத்தை குறிப்பிட்டு 2023.04.18 பி.ப.2.30 இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்பதாலில் அல்லது நிதிப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட முடியும் அத்துடன், கேள்விகள் திறத்தல் அன்றே பி.ப.2.30 இற்கு இடம்பெறுவதுடன், அதற்காக உங்களுக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

04. கேள்விப்பத்திரங்களை தயாரித்தல் சம்பந்தமாக ஏப்ரல் எந்தச்செலவுகள் சார்பாகவும் தலைவர், திணைக்கள பெறுகை குழுவினால் பொறுப்புக்கூறப்பட மாட்டாது.

05. எந்தக் கேள்வியையும் ஏற்றுக்கொள்ளல், நிராகரித்தல், ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளல் அல்லது எந்த காரணமும் கூறாமலேயே நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரியது.

**தலைவர்**
**பெறுகைக்குழு**
**வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்**
**இல.811-ஏ, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்ல**

## நீர்ப்பாசன அமைச்சு

# வெற்றிடங்கள்

## மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம் (MWSIP)

## நிதி மூலம்: ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB)

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டமானது 2024 ஆம் ஆண்டு பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கின்ற, இலங்கை அரசாங்கம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) இடம் இருந்து பெறப்பட்ட சலுகைக் கடன் வசதியுடன் நீர்ப்பாசன அமைச்சு மூலம் முன்னெடுக்கப்படும் மகாவலி பல் நோக்கு அபிவிருத்தி திட்ட முதன்மை திட்டத்தின் ஓர் அங்கமாகும்.

**விண்ணப்பங்கள்:**

ஒப்பந்த அடிப்படையில் பின்வரும் பதவிக்காக பொருத்தமான தகுதியுடைய இலங்கை பிரசைகளிடம் இருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுவதோடு, பின்வரும் முகவரிக்கு கிடைப்பதற்கு 2023 ஏப்ரல் 10 அல்லது அதற்கு முன்னர் இரு உறவினர் அல்லாத நடுவர்கள் மற்றும் கல்வி, தொழில் தகைமை அனுபவத்தின் சான்றிதழ்களை உள்ளடக்கியதாக தமது சுயவிபரக் கோவையைக் கொண்டதாக தமது விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு விண்ணப்பதாரர்கள் கோரப்படுகின்றனர், திட்டப் பணிப்பாளர், மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம், இல. 493-1/1, டீ.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும். இது தவிர, முன் நகல் ஒன்றாக அதே விண்ணப்பத்தை மின்னஞ்சலின் தலைப்பில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு hr.mwsip@gmail.com என்ற முகவரிக்கு பிரதி வைப்பதுடன் pdadbproject@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பவும்.

| பதவி மற்றும் தொழில் விபரம் | தகைமை மற்றும் அனுபவம் |
|---|---|
| 01. நிதி முகாமையாளர் (PS 03)<br>**திட்ட முகாமைத்துவ பிரிவு – கொழும்பு**<br>**பதவி 01**<br><br>**தொழில் விபரம்**<br>நிதிகள், வங்கிக் கணக்குகளின் நிகழ்ச்சி, திட்டமிடல், பாதீடு, கையகப்படுத்தலின் நிதி மற்றும் கணக்கை தயாரித்தல் மற்றும் பராமரித்தல், பேரேடுகளின் பராமரிப்பு, நிதி அறிக்கைகள் மற்றும் மீள்நிரப்பல் ஆவணங்களைத் தயாரித்தல், களஞ்சியங்கள் முகாமைத்துவ நடைமுறைகள், சரிபார்த்தல் மற்றும் கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் திட்டப் பணிப்பாளர், ஒட்டுமொத்த முகாமைத்துவம் மற்றும் நிதிப் பிரிவு மூலம் தேவைப்படும் வேறு ஏனைய நிதி தொடர்பான அறிக்கைகள் | கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் தகைமைகள், அனுபவங்கள் மற்றும் சம்பள அளவுகள் 2019/01ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றுநிருபத்துக்கு அமைவானதாகும்.<br>1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்<br>அல்லது<br>தொடர்புடைய துறையில் பட்டத்திற்கு இணையான தகைமை ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை<br>அல்லது<br>தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட இணை அங்கத்துவம்/ அதனை ஒத்த தொழில்முறை தகைமை<br>அத்துடன்<br>முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 14 ஆண்டுகள் தகைமைக்குப் பின்னரான அனுபவம்<br>2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புடைய துறையில் இளமாணிப் பட்டத்தை வெற்றிகரமாக பூர்த்திசெய்திருத்தல்<br>அல்லது<br>தொடர்புடைய துறையில் பட்டத்திற்கு இணையான தகைமை ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தகைமை<br>அல்லது<br>தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட இணை அங்கத்துவம்/ அதனை ஒத்த தொழில்முறை தகைமை<br>மற்றும்<br>தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்டம் மற்றும் தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்ட கூட்டுறவு/ பட்டய அங்கத்துவம் அல்லது அதனையொத்த தொழில்முறை தகைமை<br>அத்துடன்<br>முகாமைத்துவ தரத்தில் குறைந்தது 10 ஆண்டுகள் தகைமைக்குப் பின்னரான அனுபவம்<br>3. இலங்கை பொறியியல் சேவையின் தரம் 1 உத்தியோகத்தர் அல்லது தொடர்புடைய துறையில் அதனையொத்த அந்தஸ்து<br>அத்துடன்<br>வகுப்பு 1 பதவியில் குறைந்தது 05 ஆண்டு அனுபவம்<br>**(சம்பள அளவு: PS-3 – ரூபா 180,000.00 - ரூபா 195,000.00)** |

*01/2019 ஆம் இலக்க MSD சுற்றுநிருபத்திற்கு அமைய மேல் கூறப்பட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு வழங்கப்படும்.

**பொது நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரர்கள் 64 வயதுக்குக் குறைவாக இருத்தல் வேண்டும்.
2. அனைத்து உத்தியோகத்தர்களும் தொடர்புடைய அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுடன் பிணைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு செயற்பாடுகளுடன் தமது பணிகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
3. இலங்கையில் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு நிதியிலான திட்டங்களில் உள்ள பணி அனுபவம் மேலதிக அனுகூலமாக அமையும்.
4. இந்த பதவிகளுக்கான முன் நிபந்தனைகளாக ஆங்கிலத்தில் தேர்ச்சி, அரசாங்க ஒழுங்குமுறைகளில் பரீட்சயம் மற்றும் கணினி அறிவு அவசியமாகும்.
5. செயற்றிட்டங்களின் தேவை மற்றும் செயல்திறன் அடிப்படையில் ஆண்டுதோறும் புதுப்பிக்கும் வகையில் ஓர் ஆண்டு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும்.
6. 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின்படி கொடுப்பனவுகளுடன் அரசாங்கம் அங்கீகரித்த சம்பளம் வழங்கப்படும் என்பதோடு அதன் பின் எந்த மாற்றங்களும் மேற்கொள்ளப்படும். (http://www.treasury.gov.lk)
7. நீண்ட மணி நேரங்கள் மற்றும் வார இறுதி நாட்களில் வேலை செய்வதற்கான திறன்.

உயர் தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள், நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு தகுதி அடிப்படையில் தேர்வு இடம்பெறும். எனவே, ஆட்சேர்ப்பு நடைமுறைக்காக பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துவது அல்லது எந்த ஒரு செல்வாக்கு செலுத்தலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு காரணமாகலாம். அரச சேவைகள்/ சட்டரீதியான சபைகள்/ கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின் அபேட்சகர்களது விண்ணப்பங்கள், முறையே தமது நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு அதில் அபேட்சகர் தேர்வு செய்யப்பட்டால் 2019/01 முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 2.3.3 (b) பந்திக்கு அமைவாக சம்பளம் இன்றி – முழு நேரம் விடுவிப்பது குறித்து குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். மேலுள்ள தேவைகளை பூர்த்தி செய்யாது முழுமை பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்**
**நீர்ப்பாசன அமைச்சு**

தினகரன்
THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## பெறுகை அறிவித்தல்

### சாரிபுத்த தேசிய கல்வியியல் கல்லூரி – தம்பதெனிய

சாரிபுத்த தேசிய கல்வியியல் கல்லூரியின் பெறுகைக் குழுவின் தலைவராகிய என்னால் பின்வரும் செயற்றிட்டத்திற்காக 2023-04-19ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை ICTAD/CIDA பதிவு, தகைமைக் கொண்ட கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | செயற்றிட்டம் | ICTAD/ CIDA பதிவு | நேரடி நிர்மாண கிட்டிய மொத்தச் செலவு (வெட் இன்றி) (ரூ. மில்) | மீளளிக்கப் படாத பெறுகை ஆவணக் கட்டணம் (ரூபா சதம்) | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை முறி |
|---|---|---|---|---|---|
| 01 | உள்ளக மின் முறைமையை நிர்மாணித்தல் | C6 அல்லது C5 | 15.1 | 6,000.00 | 152,000.00 |

01. செயற்றிட்டத்தை நிறைவு செய்வதற்காக ஒதுக்கப்பட்ட கால எல்லை 7.5 மாதங்கள் (30 வாரங்கள்) ஆகும்.
02. கேள்விப் படிவங்களை 2023-03-28ஆம் திகதி முதல் 2023-04-19ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை தம்பதெனிய சாரிபுத்த தேசிய கல்வியியல் கல்லூரியின் அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை பதிவாளரிடம் செலுத்தியதன் பின்னர் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
03. ICTAD/CIDA பதிவை உறுதி செய்து கொண்டதன் பின்னர் கேள்விப் படிவங்கள் வழங்கப்படும் என்பதுடன் அந்தப் புத்தகத்தில் கடந்த 05 வருடங்களினுள் 11.3 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட 3 செயற்றிட்டங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளமை பற்றிக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
04. பெறுகை ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் போது கேள்விதாரர் வெட் வரிக்காக பதிவுத் செய்திருந்தால் அந்த இலக்கத்தைக் கட்டாயமாகக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் குறித்த சான்றிதழின் பிரதியொன்றை கேள்விப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
05. மேற்கூறப்பட்ட மீளளிக்கப்படும் கேள்விப் பிணைக் கட்டணத்தை (Bid Security) சாரிபுத்த தேசிய கல்வியியல் கல்லூரியின் பதிவாளருக்கு ரொக்கப் பணமாக அல்லது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெறப்பட்ட 2023-07-05ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பிணை முறியொன்றின் மூலம் சமர்ப்பிக்கலாம்.
06. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் படிவங்களை மூலப் பிரதி மற்றும் மேலதிகப் பிரதியென இரு பிரதிகளில் 2023-04-19ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் தலைவர், பெறுகைக் குழு, சாரிபுத்த தேசிய கல்வியியல் கல்லூரி, தம்பதெனிய எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் (Tender Box) உள்ளிட்டுச் சமர்ப்பிக்கலாம். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறித்த வேலையின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும்.
07. கேள்விகள் மேற்கூறப்பட்ட முகவரியில் திறக்கப்படும் என்பதுடன் அவ்வேளையில் கலந்துகொள்ள விரும்பும் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் எழுத்து மூல அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் இறுதி நேரத்தின் பின் உடன் திறக்கப்படும்.
08. மேற்படி செயற்றிட்டங்கள் தொடர்பான மேலதிக விபரங்களை 0372288038 / 0372288075 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
09. கேள்விகள் தொடர்பான இறுதித் தீர்மானம் பெறுகைக் குழுவின் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**சாரிபுத்த தேசிய கல்வியியல் கல்லூரி,**
**தம்பதெனிய.**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2023 மார்ச் 29ஆம் திகதியன்று ஏல விற்பனையினூடாக 120,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123F305 | LKA18223I298 | LKA36424C293 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 60,000 | 30,000 | 30,000 | 120,000 |

ஏல விற்பனைத் திகதி : 2023 மார்ச் 29
தீர்ப்பனவுத் திகதி : 2023 மார்ச் 31
வழங்கப்படும் திகதி : 2023 மார்ச் 31
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2023 மார்ச் 29, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்கள்

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை, ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

## பெறுகை அறிவித்தல்

### மாத்தறை மாநகர சபை

**மாத்தறை மாநகர சபை பதூதா வீதி ஹுணுகொட்டுவ சந்தைக் கட்டிடத்தொகுதியின் கடை அறைகள், சிறிய வியாபார இடங்கள் மற்றும் மீன் கூடங்களைக் குத்தகைக்கு வழங்குதல்**

01. இங்கு அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மாத்தறை மாநகர சபைக்குரித்தான பதூதா வீதி ஹுணுகொட்டுவ சந்தைக் கட்டிடதொகுதியின் கடை அறைகள், சிறிய வியாபார இடங்கள், மீன் கூடங்களை பின்வரும் வகையில் குத்தகைக்கு வழங்குவதற்காக என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.

| மாத்தறை பதூதா வீதி ஹுணுகொட்டுவ சந்தைக் கட்டிடதொகுதி | திறந்த கேள்வி கோரல் |
|---|---|
| கடை அறைகள் | 29 |
| சிறிய வியாபார இடங்கள் | 04 |
| மீன் கூடங்கள் | 04 |

02. கேள்வி விண்ணப்பங்கள் வழங்கல்: 2023-03-27ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2023-04-20ஆம் திகதி பி.ப. 1.30 மணி வரை
கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல்: 2023-04-20ஆம் திகதி பி.ப. 1.30 வரை
கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படுதல்: 2023-04-20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு

| | மீளளிக்கப்படும் கேள்விப் பிணை வைப்பு ரூபா | மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| கடை அறைகள் | 40,000.00 | 2,500.00 |
| சிறிய வியாபார இடங்கள் | 25,000.00 | 1,500.00 |
| மீன் கூடங்கள் | 15,000.00 | 1,000.00 |

03. இதற்கான மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகைகளைச் செலுத்தியதன் பின் 2023-03-27ஆம் திகதி மு.ப. 9.00 மணியிலிருந்து 2023-04-20ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரை கேள்வி விண்ணப்பப் படிவங்கள் மற்றும் நிபந்தனைப் படிவம் என்பன வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''ஹுணுகொட்டுவ சந்தைக் கட்டிடத்தொகுதியின் கடை அறைகள் மற்றும் கடை அல்லிகளை குத்தகைக்கு வழங்குதல்'' எனக் குறிப்பிட்டு 2023-04-20ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் மாத்தறை மாநகர ஆணையாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மாத்தறை மாநகர சபையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். சகல கேள்விப் படிவங்களினதும் நிபந்தனைப் படிவத்தில் கையொப்பமிட்டு சமர்ப்பித்தல் வேண்டும். திறந்த கேள்வி கோரலின் கீழ் ஒரு விண்ணப்பப் படிவத்தின் மூலம் ஒரு கடை அறைக்கு மட்டுமே விண்ணப்பிக்கலாம்.
04. சகல கேள்வி விண்ணப்பங்களும் 2023-04-20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு மாத்தறை மாநகர சபையின் நிதித் திணைக்களத்தில் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்விதாரர்கள் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**அட்டவணை**

ஹுணுகொட்டுவ சந்தைக் கட்டிடத்தொகுதியின் கடை அறைகள், வியாபார இடங்கள் மற்றும் மீன் கூடங்களைக் குத்தகைக்கு வழங்குதல்

| ஹுணுகொட்டுவ சந்தைக் கட்டிடத்தொகுதியின் கடை அறை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வி (ஒட்டுமொத்த் தொகை) ரூபா | மாதாந்த குத்தகை வாடகை + அரச வரிகள் ரூபா |
|---|---|---|
| தரைத் தளம் கடை இல. 01 | 750,000.00 | 8,000.00 |
| தரைத் தளம் கடை இல. 05 | 1,270,000.00 | 13,500.00 |
| தரைத் தளம் கடை இல. 06 | 1,270,000.00 | 13,500.00 |
| தரைத் தளம் கடை இல. 07 | 1,090,000.00 | 11,500.00 |
| தரைத் தளம் கடை இல. 08 | 1,090,000.00 | 11,500.00 |
| தரைத் தளம் கடை இல. 09 | 1,140,000.00 | 12,000.00 |
| மேல் மாடி கடை இல. 01 | 750,000.00 | 8,000.00 |
| மேல் மாடி கடை இல. 02 | 610,000.00 | 6,500.00 |
| மேல் மாடி கடை இல. 03 | 630,000.00 | 8,800.00 |
| மேல் மாடி கடை இல. 04 | 610,000.00 | 6,500.00 |
| மேல் மாடி கடை இல. 05 | 420,000.00 | 4,500.00 |
| மேல் மாடி கடை இல. 06 | 420,000.00 | 4,500.00 |
| மேல் மாடி கடை இல. 07 | 420,000.00 | 4,500.00 |
| மேல் மாடி கடை இல. 08 | 420,000.00 | 4,500.00 |
| மேல் மாடி கடை இல. 09 | 420,000.00 | 4,500.00 |
| மேல் மாடி கடை இல. 10 | 420,000.00 | 4,500.00 |
| மேல் மாடி கடை இல. 11 | 420,000.00 | 4,500.00 |
| மேல் மாடி கடை இல. 12 | 420,000.00 | 4,500.00 |
| மேல் மாடி கடை இல. 13 | 420,000.00 | 4,500.00 |
| மேல் மாடி கடை இல. 14 | 420,000.00 | 4,500.00 |
| மேல் மாடி கடை இல. 17 | 285,000.00 | 3,000.00 |
| மேல் மாடி கடை இல. 18 | 420,000.00 | 4,500.00 |
| மேல் மாடி கடை இல. 19 | 420,000.00 | 4,500.00 |
| மேல் மாடி கடை இல. 20 | 420,000.00 | 4,500.00 |
| மேல் மாடி கடை இல. 21 | 420,000.00 | 4,500.00 |
| மேல் மாடி கடை இல. 22 | 420,000.00 | 4,500.00 |
| மேல் மாடி கடை இல. 24 | 420,000.00 | 4,500.00 |
| மேல் மாடி கடை இல. 25 | 420,000.00 | 4,500.00 |

**வியாபார இடங்கள்**

| ஹுணுகொட்டுவ சந்தைக் கட்டிடத்தொகுதியின் வியாபார இடங்கள் | ஆகக் குறைந்த கேள்வி (ஒட்டுமொத்த் தொகை) ரூபா | மாதாந்த குத்தகை வாடகை + அரச வரிகள் ரூபா |
|---|---|---|
| வியாபார இட இல. 06 | 320,000.00 | 3,500.00 |
| வியாபார இட இல. 07 | 320,000.00 | 3,500.00 |
| வியாபார இட இல. 09 | 320,000.00 | 3,500.00 |
| வியாபார இட இல. 10 | 320,000.00 | 3,500.00 |

**மீன் கூடங்கள்**

| ஹுணுகொட்டுவ சந்தைக் கட்டிடத்தொகுதியின் மீன் கூடங்கள் | ஆகக் குறைந்த கேள்வி (ஒட்டுமொத்த் தொகை) ரூபா | மாதாந்த குத்தகை வாடகை + அரச வரிகள் ரூபா |
|---|---|---|
| மீன் கூட இல. 01 | 240,000.00 | 2,500.00 |
| மீன் கூட இல. 02 | 240,000.00 | 2,500.00 |
| மீன் கூட இல. 03 | 240,000.00 | 2,500.00 |
| மீன் கூட இல. 04 | 250,000.00 | 2,700.00 |

மேற்கூறிய கேள்வி கோரப்படும் சகல கடை அறைகள், வியாபார இடங்கள் மற்றும் மீன் கூட இடங்களுக்கான குத்தகை உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடும்போது மேற்கூறப்பட்ட மாதாந்த கடை வாடகை தொகையின் மூன்று மடங்கான தொகையை பிணைத் தொகையாக சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்கள் விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும் நிபந்தனை படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன என்பதுடன் இதன் பொருட்டான தகவல்களை மாநகர சபையின் 041-2222275 எனும் தொலைபேசியில் விசாரித்தறிந்துகொள்ளலாம்.

**காஞ்சனா கே. தல்பாவில,**
**மாநகர ஆணையாளர்,**
**மாத்தறை மாநகர சபை.**

**2023-03-24ஆம் திகதி**
**மாத்தறை மாநகர சபை அலுவலகத்தில்**

## பெறுகை அறிவித்தல்

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசு**

**நீர்ப்பாசன அமைச்சு**

### நீர்ப்பாசனத் திணைக்களம், பொலன்னறுவை மாவட்டம்

**தேசிய போட்டி ரீதியில் விலைமனுக்களைக் கோரல்**

01. பொலன்னறுவை நீர்ப்பாசனப் பணிப்பாளரினால் பொலன்னறுவை வலயத்திற்கான பின்வரும் நிர்மாணங்களின் பொருட்டு தகைமை வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | நீர்ப்பாசனப் பொறியிய லாளர் பிரிவு | விலைக் கோரல் பிணைத் தொகை (பணமாக) | விலைக் கோரல் பிணைத் தொகை (நிதி நிறுவனம்) | ஆகக் குறைந்த CIDA (ICTAD) தரம் | நிர்மாணக் காலம் (வாரங்கள்) |
|---|---|---|---|---|---|---|
| DI/PLN/PIDP/NCB 2023/01 | பொலன்னறுவை நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் கவுடுல்ல பிரிவிலுள்ள தம்சோபுர 01ஆம் இலக்க ஊட்டக் கால்வாயில் 0+100 முதல் 0+750 வரை நிர்மாணித்தல் | கவுடுல்ல | 35,000.00 | 48,500.00 | C 7 or C 8 | 15 |
| DI/PLN/PIDP/NCB 2023/02 | பொலன்னறுவை நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் கவுடுல்ல பிரிவிலுள்ள தம்சோபுர 02ஆம் இலக்க ஊட்டக் கால்வாயில் 0+115 முதல் 0+900 வரை நிர்மாணித்தல் | கவுடுல்ல | 180,000.00 | 250,000.00 | C 5 or C 6 | 30 |
| DI/PLN/PIDP/NCB 2023/03 | பொலன்னறுவை நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் கவுடுல்ல பிரிவிலுள்ள தம்சோபுர 03ஆம் இலக்க ஊட்டக் கால்வாயில் 0+106 முதல் 0+720 வரை நிர்மாணித்தல் | கவுடுல்ல | 78,000.00 | 108,000.00 | C 6 or C 7 | 30 |
| DI/PLN/PIDP/ NCB 2023/04 | பொலன்னறுவை நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் கவுடுல்ல பிரிவிலுள்ள தம்சோபுர 04ஆம் இலக்க ஊட்டக் கால்வாயில் 0+100 முதல் 0+600 வரை நிர்மாணித்தல் | கவுடுல்ல | 46,500.00 | 64,500.00 | C 6 or C 7 | 30 |
| DI/PLN/PIDP/ NCB 2023/05 | பொலன்னறுவை நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் கவுடுல்ல பிரிவிலுள்ள தம்சோபுர 05ஆம் இலக்க ஊட்டக் கால்வாயில் 0+100 முதல் 0+632 வரை நிர்மாணித்தல் | கவுடுல்ல | 58,000.00 | 80,750.00 | C 6 or C 7 | 30 |
| DI/PLN/PIDP/ NCB 2023/06 | பொலன்னறுவை நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் கவுடுல்ல பிரிவிலுள்ள தம்சோபுர 06ஆம் இலக்க ஊட்டக் கால்வாயில் 0+100 முதல் 0+500 வரை நிர்மாணித்தல் | கவுடுல்ல | 17,500.00 | 24,500.00 | C 8 or C 9 | 15 |
| DI/PLN/PIDP/NCB 2023/07 | பொலன்னறுவை நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் கவுடுல்ல பிரிவிலுள்ள தம்சோபுர 07ஆம் இலக்க ஊட்டக் கால்வாயில் 0+100 முதல் 0+875 வரை நிர்மாணித்தல் | கவுடுல்ல | 224,000.00 | 311,500.00 | C 5 or C 6 | 30 |

02. விலைக்கோரலுக்கான தகைமையைப் பெறுவதற்கு தகைமை வாய்ந்த விலைமனுதாரர் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) நீர்ப்பாசனம் மற்றும் வடிகாலமைப்புத் துறையில் குறித்த தரத்திற்கான பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும்.
03. வெளிக்களப் பரிசோதனை 2023-04-11ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு கவுடுல்ல பிரதேச நீர்ப்பாசன பொறியிலாளர் அலுவலகத்தில் ஆரம்பமாகும் என்பதுடன் கேள்வி முன்னோடிக் கூட்டம் அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்கு நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.
04. பொலன்னறுவை, புதிய நகரம், நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தில் (027-2222215) மற்றும் கவுடுல்ல பிரதேச நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் (தொ.பே. 027-2248434) வாரத்தின் வேலை நாட்களில் 09.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
05. இதன் பொருட்டு ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் மேற்குறிப்பிடப்பட்ட வகையில் பெறுகைக் குழுவின் தலைவருக்கு எழுத்து மூல வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை 2023-03-28ஆம் திகதி முதல் 2023-04-24ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மீளளிக்கப்படாத 3000.00 ரூபாவை நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்திற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
06. பூரணப்படுத்திய கேள்வி ஆவணங்களை 2023-04-25ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு நீர்ப்பாசனப் பணிப்பாளர், பெறுகைக் குழுவின் தலைவர், நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம். பொலன்னறுவை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது மேற்குறிப்பிட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிட்டோ சமர்ப்பித்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்தவுடன் அவை உடன் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
07. அனைத்து கேள்விகளுடனும் மேற்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஏற்றுக்கொள்ளக் கூடிய கேள்விப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
08. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**பொறி. எல்.எம்.டபிள்யூ. ரத்னசிரி,**
**நீர்ப்பாசனப் பணிப்பாளர்,**
**பொலன்னறுவை.**

**திகதி: 2023-03-24**
**தொலைபேசி: 027-2222215**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 500/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch Acc. No. 000000377
Call :- Ramani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk

## மீட்கப்படாதிருக்கும் அடகு நகைகளை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

மக்கள் வங்கி மட்டக்களப்பு பிராந்தியத்தின் பின்வரும் கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 31.12.2021 வரை அடகு வைக்கப்பட்டு 06.05.2023ஆம் திகதி வரை மீட்கப்படாத நகைகள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள திகதி, இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். முன் அறிவித்தல் எதுவுமின்றி இவ் ஏல விற்பனையை ஒருங்கிணைக்கவோ, இரத்துச் செய்யவோ அல்லது பிற்போடவோ வங்கிக்கு உரிமை உண்டு என்பதை அறியத் தருகிறோம்.

ஏல விற்பனை ஆரம்பமாகும் நேரம் முற்பகல் 9.00 மணி.

| | |
|---|---|
| ஏல விற்பனை நடைபெறும் திகதி | 07.05.2023 |
| ஏல விற்பனை நடைபெறும் இடம் | மட்டக்களப்பு நகரக்கிளை |
| கிளையின் பெயர் | காத்தான்குடி, கொக்கட்டிச்சோலை, களுவாஞ்சிக்குடி, வாழைச்சேனை, ஓட்டமாவடி |
| சேவை நிலையம் | ஆரையம்பதி, கிரான்குளம், இருதயபுரம், மண்டூர், பழுகாமம், சித்தாண்டி, வாகரை, கிரான் |

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**மட்டக்களப்பு (0652224476)**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

## வட மத்திய மாகாண சபையின் மாகாண கல்வி பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்த்தல்

வட மேற்கு மாகாண சபையின் மாகாண கல்வி திணைக்களத்தில் மாகாண கல்விப் பணிப்பாளர் பதவிக்காக தகுதியுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. www.psc.nw.gov.lk என்ற வட மேற்கு மாகாண பொது சேவை ஆணைக்குழுவின் இணயதளத்தில் மேற்கூறப்பட்டுள்ள பதவியின் ஆட்சேர்ப்பு தொடர்பான அறிவித்தல் மற்றும் அனைத்து விபரங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களுக்கான மூடும் திகதியானது **2023.04.24 ஆகும்.**

**ஆளுநரின் செயலாளர்,**
**வட மேற்கு மாகாண ஆளுநரின் அலுவலகம்,**
**மாளிகாவ,**
**குருநாகல்.**

**2023.03.27**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

## அறிவித்தல்
### 2007ம் ஆண்டு 7ம் இலக்க (11)1 பிரிவின் கீழ்

இத்தால், எல் டி எல்ஓல்டிங்ஸ் (பிறைவட்) லிமிடட் தனது நிறுவனத்தின் பெயரை எல் டி எல் ஓல்டிங்ஸ் லிமிட்டட் என 2007ம் ஆண்டு 7ம் இலக்க (11)1 பிரிவின் கீழ் பெயர் மாற்றம் செய்துள்ளது. இப் பெயர் மாற்றமானது இருபத்து மூன்று (23) மார்ச் இரண்டாயிரத்து இருபத்து மூன்று (2023)ம் வருடத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

கம்பனி பதிவிலக்கம் PV 2588, பதிவு முகவரி இல. 77, லேவல் 1, பார்க் வீதி, கொழும்பு-02

**நிறுவன சபையின் கட்டளையின் கீழ்**
**கம்பனி செயலாளர்.**

### பெயர்மாற்ற அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்படும் அறிவித்தல்
கம்பனியின் முன்னைய பெயர் :
**மெக்லாரன்ஸ் இன்டஸ்ரியல் சொலூசன்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்**
கம்பனி பதிவிலக்கம் : **பிவி 00211223**
கம்பனியின் பதிவு முகவரி : **இல.284, வொக்ஷால் வீதி, கொழும்பு - 02**
கம்பனியின் புதிய பெயர் :
**யாந்திரரக்சன் டெக்னோலொஜிஸ் (பிரைவட்) லிமிட்டெட்**

**சபையின் கட்டளைப்பிரகாரம்**
**மெக்லாரன்ஸ் குருப் முகாமைத்துவ லிமிட்டெட்**
**செயலாளர்கள்.**




## விலைமனுக்களுக்கான அழைப்பு

### கல்வி அமைச்சு

### இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் (SLIATE) நிறுவனங்களுக்கு ஜெனிட்டோரியல் சேவையினை வழங்குதல் – 2023/2024

தலைமையகம் மற்றும் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள் (SLIATE) களுக்கு ஜெனிட்டோரியல் சேவையினை வழங்குவதற்கு பதிவுசெய்யப்பட்ட வர்த்தக நிறுவனங்களில் இருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை உயர்தொழில்நுட்ப கல்வி நிறுவனம் (ATIs) சார்பாக திணைக்கள பெறுகைக்குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| | நிறுவனம் | தொடர்பு இல |
|---|---|---|
| 01 | இலங்கை உயர் தொழில்நுட்பகல்வி நிறுவனம், 320, "ஜனவத்து பியச" T.B.ஜாயா மாவத்த, கொழும்பு - 10 | 011-2691307 |
| 02 | ATI - கொழும்பு, இல.42, ரொட்ரிகோ பிளேஸ், கொழும்பு - 15 | 011-2521152/ 0112521282 |
| 03 | ATI - தெஹிவளை, வைத்யா ரோட், தெஹிவளை | 011-2738349 |
| 04 | ATI - கண்டி, இல.16, கெப்பெட்டிபொல மாவத்த, கண்டி | 081-2232097 |
| 05 | ATI - காலி, ஸ்ரீதம்ம மாவத்த, லபுதுவ, அக்மீமன, காலி | 091-2246179 |
| 06 | ATI - அம்பாறை, இங்கினியாகல வீதி, அம்பாறை | 063-2222056 /0632223035 |
| 07 | ATI - யாழ்ப்பாணம், இல.665/5, பீச் வீதி, குருநாகல், யாழ்ப்பாணம். | 021-2222595 /021-2229803 |
| 08 | ATI - குருநாகல், 22/1, வில்கொட வீதி, குருநாகல் | 037-2229583 /0372224911 |
| 09 | ATI - கேகாலை, பண்டாரநாயக்க மாவத்த, கேகாலை | 035-2221297 /035-2221713 |
| 10 | ATI - திருகோணமலை, கின்னியா வீதி, வரோதயநகர், திருகோணமலை | 026-2223232 /026-2050617 |
| 11 | ATI - பதுளை, கிறீன்லேன்ட் டிரைவ், பதுளை | 055-2230218 /0552223818 |
| 12 | ATI - கம்பஹா, றைவல எசல, நைவல, வேயன்கொட | 033-2287519/ 0332292544 |
| 13 | ATI - இரத்தினபுரி, புதியநகர், இரத்தினபுரி | 045-2231492/ 0452231493 |
| 14 | ATI - தங்கல்ல, யாயவத்த, நெடொல்பிட்டிய, தங்கல்ல | 0472241845/ 0472241846 |
| 15 | ATI - மன்னார், Delasalle ஆங்கிலமொழி பாடசாலை கட்டிடம், தலைமன்னார் வீதி, மன்னார் | 023-3122555 |
| 16 | ATI - வவுனியா, A9 வீதிக்கு அப்பால், வேப்பங்குளம், ஓமந்தை, வவுனியா | 024-2052733 |
| 17 | ATI - நாவலப்பிட்டி, இல-15-1/6, Back வீதி, கம்பளை வீதி, நாவலப்பிட்டி | 0542050634 |
| 18 | ATI - மட்டக்களப்பு, பிரதான வீதி, கோவில் குளம் மேற்கு, ஆரயம்பதி, மட்டக்களப்பு | 0652247519/ 0652247470 |
| 19 | ATI - சம்மாந்துறை, பிரதான வீதி, சம்மாந்துறை | 067-2261304 |
| 20 | ATI - அநுராதபுரம், அக்கர III, அநுல மாவத்த, பண்டுலகம, அநுராதபுரம் | 0252234417 |

சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் நிதிப் பிரிவிற்கு மீளிக்கப்படும் கட்டணமாக ரூ.30000.00 ஐ செலுத்துவதன் பேரிலான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து, வேலை நாட்களில் 2023.03.27 முதல் 2023.04.17 வரை மு.ப.9.00 முதல் பி.ப.3.00 இற்கிடையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் (ATI/தலைமையகம்) இன் நிதிப்பிரிவிலிருந்து ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு நிறுவனத்திற்கு மேல் விலைமனு சமர்ப்பிக்க விரும்பும் விலைமனுதாரர்கள் இருப்பின் தலைமையகத்தின் பெறுகைப்பிரிவுடன் தொடர்பு கொண்டு அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். (தொ.பே- 0112691307 ext- 108)

எல்லா விலைமனுவுடனும், விலைமனு திறக்கப்படும் திகதியில் இருந்து 120 நாட்கள் செல்லுபடியாகும் வருடாந்த ஒப்பந்த விலைமனு விலைமனுவின் 1% தொகைக்கான ஓர் விலைமனுப்பிணையை இணைத்தல் வேண்டும். "பணிப்பாளர் நாயகம், இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம், பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் எந்த வர்த்தக வங்கியிலிருந்தும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக விலைமனுப்பிணை இருத்தல் வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பொறியிடப்பட்ட விலைமனு ஆவணங்கள் உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "(சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பெயர்) - இற்கு ஜெனிட்டோரியல் சேவையினை வழங்குதல்- 2023/24" என்று குறிப்பிட்டு, சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்புச் செய்தல் வேண்டும். விலைமனு ஆவணங்கள் 2023.04.18ம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன் ஒவ்வொரு நிறுவனத்தையும் அடைதல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்கப்பட மாட்டாது.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் விலைமனுக்கள் மூடப்படும் நேரத்தின் பின்னர் விலைமனுக்கள் உடனடியாகத் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

மேலதிக தகவல்களை, கொழும்பு-10, T.B.ஜாயா மாவத்த, 320, இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம், பெறுகைப்பிரிவு (தொ.பே.0112691307 நீடிப்பு 108) இலிருந்து, அல்லது வேலைநாட்களில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பதிவாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். தொடர்பு விபரங்களுக்கு www.sliate.ac.lk ஐ தயவுசெய்து பார்வையிடவும்.

**விலைமனு சமர்ப்பிப்பதற்கு முன்பு வளாகத்திற்கு விலைமனுதாரர்கள் விஜயம் செய்து மற்றும் பரீட்சித்து, சேவையின் விபரம், தன்மை மற்றும் தேவைப்பாடுகள் மற்றும் விலைமனுவில் அடங்கியுள்ள அனைத்தையும் தாமதமாகவே முழுமையாக தெரிந்துக்கொள்ளலாம்.**

**தலைவர்**
**திணைக்களப் பெறுகைக்குழு**
**இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம்,**
**320, T.B.ஜாயா மாவத்த,**
**கொழும்பு - 10**

காணி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு

## தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களம்

## கேள்வி அழைப்பு

தேசிய தாவரவியற் பூங்காத் திணைக்களத்திற்குச் சொந்தமான கீழ்க்காணும் நிறுவனங்களில் வேலை, சேவை மற்றும் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக அதற்காக வியாபாரமாக பதிவு செய்துள்ள தகைமையான நிறுவனங்களில் இருந்து பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்.

| தொடர் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | தகைமைகள் | கேள்விப் பிணை: காசாக தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களத்தில் வைப்புச் செய்வதாயின் (ரு) | கேள்விப் பிணை: வங்கிப் பிணையாக வழங்குவதாயின் (ரு) | மீளளிக்கப் படாத கேள்வி ஆவணக் கட்டணம் (ரு) |
|---|---|---|---|---|---|
| **வேலை** | | | | | |
| 1 | தேசிய தாவரவியற் கூடத்தின் கூரையை புதுப்பித்தல் (பொது மதிப்பீடு ரூ. 6.5 மி.) | C7 அல்லது அதற்கு மேல் | 32,500.00 | 65,000.00 | 2,000.00 |
| 2 | மீகலேவ ஹரித்த பியச பயிற்சி நிலையத்தின் விடுதியின் கூரையை புதுப்பித்தல் (பொது மதிப்பீடு ரூ. 3.5 மி.) | C8 அல்லது அதற்கு மேல் | 17,500.00 | 35,000.00 | 2,000.00 |
| **சேவை** | | | | | |
| 3 | பேராதனை ரோயல் தாவரவியற் பூங்காவின் பாதுகாப்பு சேவையை நடத்திச் செல்லல் 2023-2024 | | 100,000.00 | 200,000.00 | 5,000.00 |
| **பொருட்கள்** | | | | | |
| 4 | தேசிய தாவரவியற் கூடத்திற்கான page unit உபகரணத்தை கொள்வனவு செய்தல் | | 7,500.00 | 15,000.00 | 1,000.00 |
| 5 | ஹக்கல தாவரவியற் பூங்காவின் செயின் லின்க் வேலியை அமைப்பதற்கு தேவையான பொருட்களை கொள்வனவு செய்தல் | | 10,000.00 | 20,000.00 | 1,000.00 |
| 6 | மலர்ச்செய்கை ஆய்வு மற்றும் அபிவிருத்தி பிரிவின் மலர் செய்கைக்கு தேவையான UV பொலித்தீன், நிழல் வலை மற்றும் பொலித்தீன் கொள்வனவு செய்தல் | | 40,000.00 | 80,000.00 | 3,000.00 |
| 7 | பேராதனை ரோயல் தாவரவியற் பூங்கா முன்னால் அமைந்துள்ள ஞாபகார்த்த விற்பனைக் கூடத்தில் விற்பனை செய்வதற்காக படங்களுடனான தபால் அட்டைகளை அச்சிடுதல் | | 5,000.00 | 10,000.00 | 1,000.00 |
| 8 | பேராதனை ரோயல் தாவரவியற் பூங்கா முன்னால் அமைந்துள்ள ஞாபகார்த்த விற்பனை கூடத்தில் விற்பனை செய்வதற்கான டி-சேர்ட் உற்பத்தி செய்தல் | | 7,500.00 | 15,000.00 | 1,000.00 |
| 9 | பேராதனை ரோயல் தாவரவியற் பூங்காவின் பூங்கா தொழிலாளர் குழாமிற்கான சீருடை வழங்குதல் | | 15,000.00 | 30,000.00 | 2,000.00 |

02. கேள்வி மாதிரிப் பத்திரங்கள் நிபந்தனைகள் மற்றும் ஏனைய விபரங்களை பேராதனையில் அமைந்துள்ள தேசிய தாவரவியற் பூங்கா திணைக்கள தலைமையகத்தில் 2023.03.27 முதல் 2023.04.24 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மீளளிக்கப்படாத மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் கேள்வி ஆவணக் கட்டணத்தைச் செலுத்தி, பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறு இல்லையெனில் https://www.botanicgardens.gov.lk/bid-invitation எனும் தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் கேள்வி ஆவணங்களைப் பதிவிறக்கம் செய்து கொள்வதற்கு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கவனிக்கவும்:**

அவ்வாறு இணையதளத்தினால் கேள்வி ஆவணங்களை பதிவிறக்கம் செய்து சமர்ப்பிப்பதாயின் கேள்வி ஆவணங்கள் 02 பிரதிகள் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென பெயர் குறிப்பிட்டு கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி நிபந்தனைகள் பற்றி நன்றாக விளங்கி முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட மாதிரிகளை இரு பிரதிகளுடன் (மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி) 2023.04.25ம் திகதி மு.ப. 11.00 இற்கு முன் பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களம், த.பெ. 14, பேராதனை என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அவ்வாறு இல்லையெனில் கேள்விப் பத்திரங்களை கையோடு கொண்டுவந்து திணைக்கள தலைமையகத்தின் பிரதம கணக்காளர் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

04. கேள்விப் பத்திரங்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறைகளில் திறக்கக்கூடிய இடங்களை சீல் இட்டு அனுப்புதல் வேண்டும். அத்துடன் அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். 2023.04.25 மு.ப. 11.00 இற்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்பட்டு முடிவடைந்தவுடன் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் மேற்படி கேள்விகள் திறக்கப்படும்.

05. கேள்விப் பிணையை மேற்குறிப்பிட்டவாறு தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களத்தில் வைப்புச் செய்ய முடியும். அத்துடன் அவ்வாறு இல்லையெனில் கேள்விப் பத்திரத்துடன் மேலே தரப்பட்டுள்ள நிதி பெறுமதியுடைய கேள்விப் பிணைமுறை ஒன்றை அரச அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கியிலிருந்து பணிப்பாளர் நாயகம், தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களத்தின் பெயரில் கேள்விப் பத்திரம் திறக்கப்படும் தினம் முதல் முன்வரும் 90 நாட்களுக்கு செல்லுபடியாகுமாறு பெற்றுக்கொண்டு சமர்ப்பித்தல் வேண்டும். பிணைமுறியை சமர்ப்பிக்காத கேள்விப் பத்திரங்கள் கவனத்தில் கொள்ளாமலேயே நிராகரிக்கப்படும். இதற்காக வங்கியினால் விநியோகிக்கப்படும் காசோலை மற்றும் வங்கி கொடுப்பனவுக் கட்டளைகள் ஏற்கப்படமாட்டாது.

06. கேள்விப் பத்திரங்கள் பற்றிய தீர்மானம் எடுக்கும் முழுமையான உரிமை திணைக்கள பெறுகைக்குழுவிற்கு உரித்தாவதுடன், இவ் அறிவித்தலில் அல்லது கேள்வி மாதிரிகளில் குறிப்பிடப்படும் அல்லது குறிப்பிடப்படாத இப்பெறுகை விடயத்துடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் காரணங்கள் பற்றி தீர்மானம் எடுக்கும் அதிகாரம் தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தாகும். இது பற்றிய மேலதிக விபரங்களை தொ.பே. இலக்கம் 081-2388654 மூலம் பிரதம கணக்காளரை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

07. இது பற்றிய கேள்விக்கு முன்னரான கூட்டம் 2023.04.18ம் திகதி மு.ப. 10.30 இற்கு ரோயல் தாவரவியற் பூங்காவின் மலர்ச் செய்கை மற்றும் பூங்கா அலங்கார கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பாரிய பெறுகைக்குழு,**
**தேசிய தாவரவியற் பூங்கா திணைக்களம்,**
**பேராதனை.**
2023.03.27



CDU/TS/2023/05 & 06

# இலங்கை சுங்கம்

## கையகப்படுத்தப்பட்ட பண்டங்களின் கேள்வி விற்பனை

கையகப்படுத்தப்பட்ட வாகனங்கள்/ தங்கம்/தங்க ஆபரணங்கள்/ மின்னியல்/ இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் சில நானாவித பண்டங்கள் ஆகியனவற்றின் கேள்வி விற்பனையானது இலங்கை சுங்க மத்திய அகற்றல் பணியகத்தில் 2023 மார்ச் 30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு நடைபெறும்.

விற்பனை செய்யப்படவுள்ள பண்டங்களின் பட்டியலை 2023 மார்ச் 27 ஆம், 28 ஆம் மற்றும் 29 ஆம் திகதிகளில் மு.ப. 10 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் மீளளிக்கப்படாத தொகையாகிய 25 ரூபாவைச் செலுத்திய பின்னர் இலங்கை சுங்க 3 ஆம் மாடியின் மத்திய அகற்றல் பணியகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், விற்பனையாகவுள்ள பண்டங்களின் பட்டியலானது 2023 மார்ச் 24 ஆம் திகதியிலிருந்து **www.customs.gov.lk** என்ற சுங்க உத்தியோகபூர்வ இணையதளத்தில் காட்சிப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்கட்கு பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

011-2430795
011-2143434 – நீடிப்பு – 7300

**சுங்கப் பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை சுங்கம்,**
**'சுங்க இல்லம்',**
**இல.: 40, பிரதான வீதி,**
**கொழும்பு-11.**

---

### காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. RBK/LAN/AQURE/A3/65/271

கீழே காட்டப்படும் அட்டவணையில் குறிப்பிடப்படும் காணியின் வாழ்நாள் உரிமையாளருக்கு நஷ்ட ஈட்டுத் தொகையான ரூபாய் முப்பத்து நான்காயிரத்து நூற்று இருபத்தெட்டு சதம் ஐம்பத்தைந்து (ரூ. 34,128.55) கேகாலை மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இல. LA/163/2022 ன் கீழ் கையளிக்கப்பட்டுள்ளதை இத்தால் அறியத் தருகின்றேன். மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து 17.11.2022ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட பத்திரிகை இல. 2306/55 இணைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : சப்ரகமுவ |
| மாவட்டம் | : கேகாலை |
| பிரதேச செயலாளர் | |
| பிரிவு | : ரம்புக்கனை |
| கிராமம் | : நத்தம்புர |
| காணியின் பெயர் | : திகனமுல்லவத்த |
| வரைபட இல. | : இ.கி. வரைபட இல. 129 பிற்சேர்க்கை இல. 03 |
| துண்டு இல. | : 271 |
| விஸ்தீரணம் | : ஹெக்டயார்ஸ் 0.0715ன் ½ ன் ½ (பீ.ஜீ. லீலாவதியிற்கு உரிமையான பகுதி) |
| அமைவு | : வடக்கு - துண்டு இல 270 |
| | கிழக்கு - துண்டு இல 270 |
| | தெற்கு - துண்டு இல 273 மற்றும் 267 |
| | மேற்கு - துண்டு இல 267 மற்றும் 270 |

**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலாளர் அலுவலகம்,**
**ரம்புக்கனை.**

**2023.03.02ம் திகதி**

---

### காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. RBK/LAN/AQURE/A3/65/291

கீழே காட்டப்படும் அட்டவணையில் குறிப்பிடப்படும் காணியின் வாழ்நாள் உரிமையாளருக்கு நஷ்ட ஈட்டுத் தொகையான ரூபாய் ஏழாயிரத்து எண்ணூற்று நாற்பத்தைந்து சதம் இருபத்தெட்டு (ரூ. 7,845.28) கேகாலை மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இல. LA/199/2022 ன் கீழ் கையளிக்கப்பட்டுள்ளதை இத்தால் அறியத் தருகின்றேன். மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து 17.11.2022ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட பத்திரிகை இல. 2306/55 இணைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : சப்ரகமுவ |
| மாவட்டம் | : கேகாலை |
| பிரதேச செயலாளர் | |
| பிரிவு | : ஹிந்தபொன்தெனிஎ |
| கிராமம் | : நத்தம்புர |
| காணியின் பெயர் | : |
| வரைபட இல. | : இ.கி. வரைபட இல. 129 பிற்சேர்க்கை இல. 03 |
| துண்டு இல. | : 291 |
| விஸ்தீரணம் | : ஹெக்டயார்ஸ் 0.1157ன் 1/3 பங்கு |
| அமைவு | : வடக்கு - துண்டு இல 290 மற்றும் 292 |
| | கிழக்கு - துண்டு இல 292 |
| | தெற்கு - துண்டு இல 293 மற்றும் 289 |
| | மேற்கு - துண்டு இல 289 மற்றும் 287 |

**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலாளர் அலுவலகம்,**
**ரம்புக்கனை.**

**2023.03.02ம் திகதி**

---

### காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 33ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. RBK/LAN/AQURE/A3/65/160

கீழே காட்டப்படும் அட்டவணையில் குறிப்பிடப்படும் காணியின் வாழ்நாள் உரிமையாளருக்கு நஷ்ட ஈட்டுத் தொகையான ரூபாய் தொண்ணூற்று ஏழாயிரத்து எண்ணூற்று இருபத்திரண்டு சதம் நான்கு (ரூ. 97,822.04) கேகாலை மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு இல. LA/197/2022 ன் கீழ் கையளிக்கப்பட்டுள்ளதை இத்தால் அறியத் தருகின்றேன். மேலதிக தகவல்களுக்கு தயவு செய்து 17.11.2022ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட பத்திரிகை இல. 2306/55 இனைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : சப்ரகமுவ |
| மாவட்டம் | : கேகாலை |
| பிரதேச செயலாளர் | |
| பிரிவு | : ரம்புக்கனை |
| கிராமம் | : |
| காணியின் பெயர் | : ஜமனாரங்கஹமுலவத்த |
| வரைபட இல. | : இ.கி. வரைபட இல. 134 பிற்சேர்க்கை இல. 01 |
| துண்டு இல. | : 160 |
| விஸ்தீரணம் | : ஹெக்டயார்ஸ் 0.0442 |
| அமைவு | : வடக்கு - துண்டு இல 161 |
| | கிழக்கு - துண்டு இல 163 |
| | தெற்கு - துண்டு இல 156 |
| | மேற்கு - துண்டு இல 156 மற்றும் 150 |

**பிரதேச செயலாளர்,**
**பிரதேச செயலாளர் அலுவலகம்,**
**ரம்புக்கனை.**

**2023.03.02ம் திகதி**

---

# இலங்கை வங்கி

## ஆர்வத்தை வெளிப்படுத்தல் (EOI)

### படைப்பாற்றல்மிகு விளம்பர முகவர் நிறுவனங்களைத் தெரிவு செய்தல்
### (CREATIVE ADVERTISING AGENCIES)

### ஆர்வத்தை வெளிப்படுத்தல் இல. P/PROC/2023/61

இலங்கையின் முதற்தர வங்கியான இலங்கை வங்கியானது தமது விளம்பர எண்ணக்கருக்களை மேம்படுத்தவும் ஏனைய சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரம் சம்பந்தமான விடயங்களை மேம்படுத்தவும் படைப்பாற்றல் மிக்க விளம்பர முகவர் நிறுவனங்களிடமிருந்து சேவைகளைப் பெறுவதற்கு எதிர்பார்க்கின்றது.

ஆர்வத்தை வெளிப்படுத்த எதிர்பார்ப்பவர்கள் கீழ்க்காணும் தகைமைகளை உடையவர்களாகக் காணப்பட வேண்டும். இத் தகவல்களை வழங்கத் தவறுபவர்களின் முன்மொழிவுகள் நிராகரிக்கப்படும். (ஆவணச் சான்றுகள் வழங்கப்பட வேண்டும்)

- குறிப்பிட்ட சேவையில் குறைந்தபட்சம் மூன்று (3) ஆண்டுகள் அனுபவம். (வியாபாரப் பதிவு, கூட்டுத்தாபனச் சான்றிதழ் அல்லது உரிய ஒப்பந்தமானது இத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.)
- கடந்த மூன்று (3) நிதி ஆண்டுகளுக்கான அண்ணளவான மொத்த வருடாந்தப் பணப் புரள்வானது ரூ. 15.0 மில்லியனிலும் அதிகமாகக் காணப்பட வேண்டும். (2019, 2020 மற்றும் 2021) அல்லது (2019 / 2020, 2020 / 2021 மற்றும் 2021 / 2022 முதலான ஆண்டுகளுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுகள் இத்துடன் இணைக்கப்படவேண்டும்.)
- விளம்பரத்துடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளுடன் நேரடியாகத் தொடர்புடைய "படைப்பு இயக்குநர், நகல் எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், வடிவமைப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்" போன்ற ஆளணியினரைக் கொண்டிருக்க வேண்டும். என்பதோடு அவ் ஆளணியினர் குறித்த தொழில்களில் கொண்டுள்ள அனுபவங்களை உள்ளடக்கிய சுயவிபரக் கோவையை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

ஒப்பந்தமானது வழங்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு (02) வருடங்கள் செல்லுபடியாகும்.

1. ஆங்கில மொழியிலான பூரணமான EOI ஆவணத் தொகுதியைக் கீழே உள்ள முகவரியில் ஏதேனும் வேலை நாட்களில் எழுத்து மூலமான விண்ணப்பத்தினையும் ரூ.3,935.00 வரி உட்பட (ரூ.3,500.00 + ரூ.90.00 SSCL + ரூ.345.00 பெ.சே.வரி 15%) திருப்பிச் செலுத்தாக் கட்டணத்தையும் செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும். கட்டண முறைமை பணமாகும். இந்த ஆர்வ வெளிப்படுத்தல்களை இலங்கை வங்கியின் சொத்துக்களும் சேகரிப்பும் பகுதியின் பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஆர்வத்தை வெளிப்படுத்தும் ஆவணங்களின் ஊடாகவே சமர்ப்பிக்க வேண்டும். நகல் எடுக்கப்பட்ட EOI ஆவணங்களினூடாக ஆர்வத்தை வெளிப்படுத்தலாகாது.

| | |
|---|---|
| EOI ஆவணங்களை பார்வையிடும், கொள்வனவு செய்யும் காலப்பகுதி | : 2023.03.27ஆம் திகதி முதல் 2023.04.04ஆம் திகதி வரை 0900 மணி முதல் 1430 மணி வரை |
| EOI ஆவணங்களை ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் | : 2023.04.06 1000 மணி |

குறிப்பிட்ட திகதி மற்றும் நேரத்திற்குப் பின்னர் தாமதித்துக் கிடைக்கும் ஏலவிலை கூறல்கள் நிராகரிக்கப்பட்டுத் திறக்காமல் திருப்பியனுப்பப்படும்.

2. தெரிவுசெய்யப்படும் நிறுவனங்கள் வங்கியில் தமது செயற்பாடுகளை வெளிப்படுத்தவென அழைக்கப்படும்
3. பதிப்புரிமை மற்றும் உரிமை என்று வரும்போது வங்கியின் தேவைக்கென முகவர் நிறுவனங்களினால் ஆக்கி அளிக்கப்பட்டு வங்கியினால் பணம் செலுத்தப்படும் ஆக்கங்கள் அனைத்தும் வங்கியின் சொத்தாகக் கருதப்படும்.
4. இறுதி முடிவானது வங்கியினாலேயே எடுக்கப்படும் என்பதோடு மேன்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. காரணங்கள் வழங்காமல் சில அல்லது அனைத்து விண்ணப்பங்களையும் நிராகரிக்கும் மற்றும் விண்ணப்பத்தின் ஏதேனுமொரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமை இலங்கை வங்கிக்கு உண்டு.

எவ்வகையிலேனும் ஆதரவு திரட்டலானது தகுதியிழப்பிற்குக் காரணமாக அமையும்.

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி,
"இலங்கை வங்கிச் சதுக்கம்", இல.01,
இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.

1975 BOC
www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

---

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

### 2023 ஆம் ஆண்டிற்காக சீருடைகளை வழங்கல்

கீழே வழங்கப்பட்டுள்ள விபரங்களின் பிரகாரம் பின்வரும் அம்சங்களை வழங்குவதற்காக புகழ்வாய்ந்த வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

வளமுள்ள விலைமனுதாரர் கீழே குறித்துரைக்கப்பட்டுள்ள ஒரு அம்சம் அல்லது அனைத்து அம்சங்களுக்காக முன்வைப்புக்களை சமர்ப்பிக்கலாம்.

| No. | Bid No. | Description | Document Fee (Inclusive of Taxes) (Rs.) |
|---|---|---|---|
| 01. | B/03/2023 | Supply of Trouser material & Shirting materials | 2,000.00 |
| 02. | B/04/2023 | Supply of Sarees with Blouse Pieces | 1,000.00 |
| 03. | B/05/2023 | Supply of Towels, Bedsheets & Socks | 1,000.00 |
| 04. | B/06/2023 | Supply of materials & stitching of uniforms for Aviation Function, Katunayake, Rathmalana & Mattala | 5,000.00 |
| 05. | B/07/2023 | Supply of Shoes | 1,000.00 |

2023.04.18 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் ஒவ்வொரு தொகுதிக்கும் மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலகத்தின் 1 ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம் அல்லது **http://ceypetco.gov.lk/public.tenders/.** என்ற இபெகூ இன் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

2023.04.19 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு விலைமனுக்கள் மூடப்பட்டு கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியின் பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்களை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம். 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம், வளமுள்ள விலைமனுதாரர்கள் **https://eroc.drec.gov.lk** என்ற இணையதளத்தின் மூலமாக கம்பனிகளின் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு பெற்று அவர்களின் விலைமனுவுடன் பிசிஏ-3 சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைமனுக்கள் தபாலில் பதிவுத் தபாலுறையில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலகத்தின் 1 ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின், 011 5455335 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது **supplies@ceypetco.gov.lk** என்ற மின்னஞ்சல் வழியாக பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல.: 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09.**

---

## பெறுகை அறிவித்தல்

### இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு - 10

இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு தேவையான இரசாயன நோயியல் அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்காக கோரப்படும் விண்ணப்பத்துடன் 1000. 'பேட்'களை அச்சிட்டு வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. குறித்த வழங்கலுக்காக தகைமையுடைய பதிவு செய்த நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கு இதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் அத்துடன், மீளளிக்கப்படாத ரூ. 1000.00 வைப்பை 2023.04.18 வரை வார நாட்களில் இலங்கை தேசிய வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்கு செலுத்திய பின்னர் இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல்கள் பிரிவிலிருந்து இதனோடு சம்பந்தப்பட்ட கேள்வி நிபந்தனைகளுடான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் வேளையில் சாம்பிளை சமர்ப்பிப்பதுடன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் சாம்பிள்கள் ஏற்கப்படமாட்டாது 2023.04.19 மு.ப. 10.00 இற்கு இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் பணிமனையில் இந்த விலைமனுக்கள் திறக்கப்படும்

**மருத்துவ நிபுணர்**
**டபிள்யூ கே. விக்ரமசிங்ஹ**
**தலைவர்**
**பிரதேச பெறுகைக் குழு**
**இலங்கை தேசிய வைத்தியசாலை.**

---

## இலங்கை கட்டளைகள் நிறுவனம்

(தொழில்நுட்பவியல் அமைச்சின் கீழானது)

### இலங்கை கட்டளைகள் நிறுவனத்திற்காக IP-PBX (INTERCOM) முறைமையொன்றை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்கான விலைமனுக்களுக்கான அழைத்தல்

இலங்கை கட்டளைகள் நிறுவனத்திற்காக IP-PBX (INTERCOM) முறைமையொன்றை வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிற்காக விலைமனுக்கோரல்கள் அழைக்கப்படுகின்றன. 2023.03.27 ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500 இலங்கை ரூபா மற்றும் SSCL மற்றும் பெசேவ ஆகியவற்றை செலுத்திய பின்னர், கொழும்பு-08, எல்விட்டிகல மாவத்தை, விக்டோரியா இடம், 17 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை கட்டளைகள் நிறுவன நிருவாகப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். 2023.04.07 ஆம் திகதியன்று மு.ப. 9.30 மணிக்கு நிறுவனத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.

விலைமனுக்கோரல்கள் 2023.04.20 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

**தலைவர் - பெறுகைக் குழு,**
**இலங்கை கட்டளைகள் நிறுவனம்,**
**இல. 17, விக்டோரியா இடம்,**
**எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-08.**
**தொலைபேசி: 011-2671567-72**

---

## அறிவித்தல்

### அங்கத்தவர் பெயர் பட்டியலை நாளதுவரைக்கு உட்படுத்துதல்

2018.10.04ம் திகதிய இல. 2091/63 எனும் அதி விசேட வர்த்தமானியில் திருத்தப்பட்ட 1974.01.10ம் திகதிய இல. 93/5 எனும் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1973 கூட்டுறவுச் சங்க விதிக் கோவையின் 12(iii) பிரிவின் பிரகாரம் தற்போது பதிவு செய்துள்ள கூட்டுறவு சங்கங்களால் 12(i) இல் குறிப்பிடப்படும் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட அங்கத்தவர் பெயர் பட்டியலை சரியாக தயாரிக்க வேண்டியுள்ளதால் சகல செயற்பாடுடைய அங்கத்தவர்களினதும் தகவல்களை உள்ளடக்கியதாக மேற்படி பெயர் பட்டியலை நாளதுவரைக்கு உட்படுத்த வேண்டும் என கட்டளையிடப்பட்டுள்ளது.

மேற்படி கட்டளையின் பிரகாரம் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்/ பதிவாளரின் கட்டளைப் பிரகாரம் பதிவு இல வாடகை / 143 மற்றும் 1974.12.09ம் திகதி பதிவு செய்துள்ள வரையறுக்கப்பட்ட குளியாப்பிட்டிய பிரிவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 2023.03.20ம் திகதி முன்னர் அங்கத்துவத்தைப் பெற்றுள்ள உங்களது அங்கத்துவரும் நாளதுவரைக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளது.

அதன் பிரகாரம் அங்கத்துவத்தை நாளதுவரைக்கு உட்படுத்தும் விண்ணப்பத்தை சங்கத்தின் சகல பிரதேசங்களில் இருந்தும்/ கிராமிய வங்கிக் கிளைகள் மற்றும் தலைமையகத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேற்படி அங்கத்துவம் நாளதுவரைக்கு உட்படுத்தும் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து 2023.04.21ம் திகதிக்கு முன் மேற்படி சங்கத்தின் எந்த இடத்திற்கும் ஒப்படைப்பதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

சங்கத்தின் அங்கத்துவம் காரணமாக உரித்தாகும் சகல சட்டரீதியிலான உரிமைகளையும் முறையாக பெறுவதை உறுதி செய்வதற்காக உங்களது அங்கத்துவம் நாளதுவரைக்கு உட்படுத்தப்படுதல் இடம்பெறுகிறதென கௌரவமாக எதிர்பார்க்கிறேன்.

**நிர்வாக சபையின் கட்டளைப் பிரகாரம்**
**செயலாளர்.**

தினகரன்
# விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2023 மார்ச் 27 திங்கட்கிழமை

## இலங்கை உலகக் கிண்ணம் செல்ல வாய்ப்புகள் எப்படி?



நியூசிலாந்திடம் 198 ஓட்டங்களால் படுதோல்வியை சந்தித்த இலங்கை அணிக்கு ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டிக்கு நேரடி தகுதி பெறுவதற்கான வாய்ப்பு கை நழுவும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஒக்லாந்தில் கடந்த சனிக்கிழமை (25) நடந்த மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டியிலேயே நியூசிலாந்து அணி நிர்ணயித்த 275 ஓட்ட இலக்கை துரத்திய இலங்கை அணி 76 ஓட்டங்களுக்கே சுருண்டது.

இதனால் இலங்கை அணி இந்தியாவில் நடைபெறும் உலகக் கிண்ணத்திற்கு நேரடி தகுதி பெற மற்ற அணிகளின் போட்டி முடிவுகள் தமக்கு சாதகமாக இருப்பதற்கு எதிர்பார்க்க வேண்டி உள்ளது.

இதன்படி இலங்கை அணி தொடர்ந்தும் நேரடித் தகுதி பெற வேண்டுமானால் நியூசிலாந்துக்கு எதிரான எஞ்சிய இரண்டு போட்டிகளிலும் வென்று தொடரை கைப்பற்றுவது கட்டாயம் என்பதோடு தென்னாபிரிக்க அணி நெதர்லாந்துடன் ஆடவுள்ள இரு போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் குறைந்தது ஒரு போட்டியில் தோற்க வேண்டும்.

அவ்வாறு நிகழாத பட்சத்தில் இலங்கை அணி அயல் நாட்டில் நடைபெறவுள்ள ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டிக்காக வரும் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் சிம்பாப்வேயில் நடைபெறும் தகுதிகாண் போட்டிகளில் ஆட வேண்டிய நிலை ஏற்படும்.

## இலங்கை அல்லது ஆப்கானுடன் ஒருநாளில் ஆட இந்தியா திட்டம்



இலங்கை அல்லது ஆப்கானிஸ்தானுடன் வரும் ஜூன் மாதத்தில் குறிகிய கிரிக்கெட் தொடர் ஒன்றை நடத்துவதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை ஆலோசித்து வருகிறது.

அவுஸ்திரேலியாவுக்கு எதிராக இந்திய அணி ஆடவுள்ள உலக டெஸ்ட் சம்பியன்சிப் போட்டிக்குப் பின்னர் ஜூன் மாதத்தின் இரண்டாவது பாதியில் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் ஒன்றை நடத்தவே இந்தியா திட்டமிட்டுள்ளது.

எனினும் இவ்வாறான போட்டித் தொடர் ஒன்று இந்தியாவின் மேற்கிந்திய தீவுகளுக்கான சுற்றுப்பயணத்திற்கு முன்னர் ஏற்பாடு செய்யப்பட வேண்டி உள்ளது. இந்திய அணி ஜூலை முதல் வாரத்தில் மேற்கிந்திய தீவுகளுக்கு பயணிக்கவுள்ளது.

இலங்கை அணிக்கு வரும் ஏப்ரல் மாதத்தில் சொந்த மண்ணில் இரண்டு டெஸ்ட் போட்டிகள் இருப்பதோடு அதனைத் தொடர்ந்து ஜூன் மாதம் எந்தப் போட்டி அட்டவணையும் இல்லை. வரும் ஜூலை மாதத்திலேயே இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ஆடுவதற்காக பாகிஸ்தான் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது.

இந்தியாவில் ஒருநாள் உலகக் கிண்ணப் போட்டி இந்த ஆண்டு நடைபெறவுள்ள நிலையில் இந்தியாவுடன் அதன் சொந்த மண்ணில் ஒருநாள் தொடர் ஒன்றில் ஆடுவது அதிக அனுபவத்தை தருவதாக அமையும்.

## யாழ் மத்திய கல்லூரி காலிறுதிக்கு தகுதி

பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுக்கு உட்பட்ட பிரிவு மூன்றுக்கான இரண்டு நாள் கிரிக்கெட் போட்டியில் பென்தொட்ட, காமினி தேசிய கல்லூரியை யாழ். மத்திய கல்லூரி இன்னிங்ஸ் மற்றும் 111 ஓட்டங்களால் தோற்கடித்து காலிறுதிக்கு முன்னேற்றம் கண்டது.

காலிறுதிக்கு முந்தைய ஆட்டமாக கடந்த சனிக்கிழமை (24) நிறைவடைந்த இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் மத்திய கல்லூரி முதல் இன்னிங்ஸுக்காக 9 விக்கெட்டுகளை இழந்து 358 ஓட்டங்களைப் பெற்றது.



அனன்தன் கஜன் ஆபாராமாக துடுப்பெடுத்தாடி 153 ஓட்டங்களை பெற்றதோடு நிஷான்தன் அஜன் அரைச்சதம் பெற்றார்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய காமினி தேசிய கல்லூரி 85 ஓட்டங்களுக்கு சுருண்டது. விக்னேஸ்வரன் பருதி 7 விக்கெட்டுகளை பதம் பார்த்தார். தொடர்ந்து பலோ ஓன் செய்த அந்த அணி 162 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. பருதி இரண்டு இன்னிங்ஸ்களிலும் மொத்தமாக 10 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.



## ஏழாவது வரிசையில் ஆட மறுத்த சர்ச்சை: தனஞ்சய டி சில்வா பதில்

நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் 7ஆவது வரிசையில் துடுப்பெடுத்தாட மறுத்ததாக வெளியான செய்தியை இலங்கை அணி துடுப்பாட்ட வீரர் தனஞ்சய டி சில்வா நிராகரித்துள்ளார்.

‘நாளைய (கடந்த சனிக்கிழமை) போட்டியில் நான் 7ஆவது வரிசையில் துடுப்பெடுத்தாடுவதை மறுத்ததாக சமூக ஊடகத்தில் செய்தி பரவி இருப்பதோடு நான் எப்போதும் அணியுடன் இருக்கும் வீரர் என்பதைக் கூக்கொள்ள விரும்புகிறேன்’ என்று தனுஞ்சய கடந்த வெள்ளிக்கிழமை பதிவிட்ட ‘ட்விட்’ இல் குறிப்பிடப்பட்டுள்ளது.


எனினும் தாம் முதல் ஐந்து வரிசைக்குள்ளேயே துடுப்பெடுத்தாடுவேன் என்றும் ஏழாவது வரிசையில் ஆடமாட்டேன் என்று தனஞ்சய தேர்வாளர்களிடம் கூறியதாகவே செய்தி பரவியது.

எனினும் ஒக்லாந்தில் கடந்த சனிக்கிழமை நடந்த முதல் ஒருநாள் போட்டியில் தனஞ்சய அணியில் இடம்பெற்றிருக்கவில்லை.

இந்நிலையில் தனஞ்சய நியூசிலாந்துக்கு எதிரான ஒட்டுமொத்த ஒருநாள் தொடரில் இருந்தும் நீக்கப்படும் வாய்ப்பு இருந்ததாகவும் ஆனால் அந்த நிலை தற்போது விலகி இருப்பதாகவும் இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுவை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

முதலாவது ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 198 ஓட்டங்களால் தோல்வியை சந்தித்த நிலையில் நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டி நாளை (28) கிறைஸ்சேர்ச்சில் நடைபெறவுள்ளது.

## லெபனானில் இரு நேர வலயங்களால் குழப்பம்



லெபனானில் அரசியல் மற்றும் மத நிறுவனங்களுக்கு இடையிலான மோதலால் அந்நாட்டில் சம காலத்தில் இரு நேர வலயங்கள் செயற்படுத்தப்பட்டிருப்பது மக்களுக்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

லெபனானில் பகலொளி சேமிப்பு நேரம், நோன்பு மாதத்திற்குப் பின்னர் ஆரம்பிக்கப்படும் என்று அந்நாட்டு இடைக்கால பிரதமர் நஜிப் மிகாதி அறிவித்துள்ளார். இது முஸ்லிம்களுக்கு தமது நோன்பை முன்கூட்டியே திறப்பதற்கு உதவும் என்று அவர் கூறியுள்ளார்.

எனினும் ஆண்டில் பகலொளி சேமிப்பு நேரம் வழக்கமாக நிகழ்ந்து வரும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 26) தொடக்கம் ஆரம்பித்ததாக அந்நாட்டு கிறிஸ்தவ நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதனால் சில வர்த்தகங்கள் மற்றும் அலுவலகங்கள் அரசின் அறிவிப்பையும் மேலும் சிலது வழக்கமான போக்கிலும் தமது செயற்பாடுகளை ஆரம்பித்ததால் நாட்டில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

லெபனானின் மூன்று தொலைக்காட்சிகள் ஞாயிறு தொடக்கம் தமது நேரத்தை மாற்றியபோதும் மத்திய கிழக்கு விமான சேவைகள் அரசின் அறிவிப்பை பின்பற்றி நேரத்தை மாற்றாமல் இருக்க தீர்மானித்தன.

இந்நிலையில் கைபேசிகள், மடிக்கணினிகள் மற்றும் மின் சாதனப் பொருட்களில் இந்த நேர மாற்றம் செயற்படுத்துவது குறித்து அரசு இன்னும் தெளிவுபடுத்தாமல் உள்ளது.

ஏற்கனவே பொருளாதார நெருக்கடியில் இருக்கும் லெபனானில் அரசியல் கட்சிகள் மதப் பிரிவுகளாகவே செயற்படுகின்றன. அங்கும் 1970கள் மற்றும் 80களில் கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் தரப்புகள் இடையே சிவில் யுத்தம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

பகலொளி சேமிப்பு நேரம் என்பது வழக்கமான நேரத்தை கோடை மாதங்களில் முன்னோக்கி நகர்த்தும் பல நாடுகளிலும் பின்பற்றப்படும் வழக்கமாக உள்ளது. இது கோடை மாதங்களின் பகல் நேரத்தையும் வேலை, பாடசாலை நேரங்களையும் ஒருமுகப்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படுகிறது.

“சேமிக்கப்பட்ட” பகலொளி மாலையில் உல்லாச நிகழ்வுகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. இம்முறை பின்பற்றப்படாவிட்டால், காலையில் சூரிய ஒளி தூக்கத்தில் வீணடிக்கப்படும்.

## சர்வதேச செய்திகள்

## அமெரிக்காவை புரட்டிப்போட்ட பயங்கர சூறாவளி: 26 பேர் பலி



அமெரிக்காவின் தெற்கு மாநிலங்களான மிசிசிப்பி மற்றும் அலபாமாவை சூறையாடி இருக்கும் பயங்கர சூறாவளியில் குறைந்தது 26 பேர் உயிரிழந்திருப்பதோடு பெரும் அழிவு ஏற்பட்டுள்ளது.

தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதோடு மிசிசிப்பி மாநில அரசு அவசர நிலையை பிரகடனம் செய்துள்ளது.

வீதிகளில் ட்ரக் வண்டிகள் தொடக்கம் வாகனங்கள் வீசி எறியப்பட்டு, வீடுகள் புரட்டியடிக்கப்பட்டும் ரோலிங் போர்க் என்ற நகர் முற்றாகத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. தனது குளியல் தொட்டியில் மறைந்து உயிரை காத்துக் கொண்டதாக அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பிய ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கும் ரோலிங் போர்க் சிறு நகரில் மாத்திரம் குறைந்தது 12 பேர் உயிரிழந்துள்ளனர். 75 வீதம் கறுப்பினத்தவர் வாழும் இந்த நகரில் உள்ள ஐந்தில் ஒரு பங்கினர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளனர்.

“நகரம் காணாமல்போய்விட்டது ஆனால் நாம் மீண்டுள்ளோம்” என்று அந்த நகரைப் பார்வையிட்ட மிசிசிப்பி ஆளுநர் எல்ட்ரிட்ஜ் வோக்கர் சி.என்.என் தொலைக்காட்சிக்குத் தெரிவித்தார்.

அமெரிக்க நேரப்படி கடந்த சனிக்கிழமை (25) ஏற்பட்ட இந்த சூறாவளி ஒரு மணி நேரம் வரை நீடித்துள்ளது. மக்கள் உறங்கிக் கொண்டிருந்த இரவு நேரத்தில் எந்த முன்னெச்சரிக்கையும் இல்லாமலேயே இந்த சூறாவளி ஏற்பட்டிருப்பதோடு அதன் பயங்கர சத்தத்தைக் கேட்டே மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு ஓட்டம் பிடித்துள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்ததோடு பாதிப்படைந்த இடங்களுக்கு ஆதரவு அளிக்கப்படும் என உறுதியளித்துள்ளார்.

## உக்ரைன் மன்றாட்டம்



மேற்கத்திய நாடுகள் மேலும் இராணுவ உதவியை அனுப்பும் வரை ரஷ்யாவுக்கு எதிரான பதில் தாக்குதல்களை உக்ரைனால் ஆரம்பிக்க முடியாது என்று உக்ரைன் ஜனாதிபதி வொலொடிமிர் செலன்ஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் டாங்கிகள், பீரங்கிகள் மற்றும் ஹிமார்ஸ் ரொக்கெட் லோஞ்சர்கள் இன்றி முன்னரங்குகளுக்கு தமது துருப்புகளை அனுப்ப முடியாது என்று ஜப்பான் பத்திரிகை ஒன்றுக்கு அவர் தெரிவித்துள்ளார். கிழக்கு உக்ரைனில் நிலைமை நல்லதாக இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

‘எமது கூட்டாளிகளிடம் இருந்து வெடிபொருட்கள் வரும் வரை நாம் காத்திருக்கிறோம்’ என்று அவர் கூறினார்.

உக்ரைனின் நட்பு நாடுகள் மேலும் ஆயுதங்களை வழங்க வாக்குறுதி அளித்தபோதும் அவைகளை வழங்குவதில் நெருக்கடி மற்றும் தாமதம் ஏற்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

கிழக்கு உக்ரைனில் ரஷ்யா தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருப்பதோடு அங்குள்ள பக்மூத் நகரில் உக்கிர மோதல் இடம்பெற்று வருகிறது.

## ரஷ்ய அணு ஆயுதங்கள் பெலாரஸில் நிறுத்தம்

ரஷ்யா மூலோபாய அணு ஆயுதங்களை பெலாரஸில் நிலைநிறுத்தும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டி அறிவித்துள்ளார்.

இது அணு பரவல் தடை ஒப்பந்தத்தை மீறுவதில்லை என்று வலியுறுத்தி இருக்கும் புட்டின், ஐரோப்பாவில் அமெரிக்கா தனது ஆயுதங்களை நிலைநிறுத்தி இருப்பதை ஒப்பிட்டு குறிப்பிட்டிருப்பதாக ரஷ்ய அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.

எனினும் தமது ஆயுதங்களின் கட்டுப்பாட்டை பெலரஸிடம் வழங்காது என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த அறிவிப்பை அடுத்து கருத்து வெளியிட்டிருக்கும் அமெரிக்கா, அணு ஆயுதத்தை பயன்படுத்த ரஷ்யா தயாராவதாக தாம் நம்பவில்லை என்று தெரிவித்துள்ளது.

‘எமது சொந்த மூலோபாய அணு ஆயுத போக்கை மாற்றிக் கொள்வதற்கான எந்த ஒரு காரணத்தையும் நாம் காணவில்லை’ என்று அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.



பெலாரஸ் போர் நடக்கும் உக்ரைனுடன் நீண்ட எல்லையை பகிர்வதோடு நேட்டோ உறுப்பு நாடுகளான போலந்து, லித்துவேனியா மற்றும் லத்வியா நாடுகளுடனும் எல்லையை பகிர்ந்து கொள்கிறது.

1990களின் நடுப் பகுதிக்குப் பின்னர் ரஷ்யா தனது ஆயுதங்களை நாட்டுக்கு வெளியில் நிலை நிறுத்துவது இது முதல் முறையாக உள்ளது.

1991இல் சோவியட் ஒன்றியம் வீழ்ந்ததால், நிலைநிறுத்தப்பட்ட அணு ஆயுதங்கள் ரஷ்யா, உக்ரைன், பெலாரஸ் மற்றும் கசகஸ்தான் ஆகிய நான்கு நாடுகளில் இருந்தன.

எனினும் அந்த ஆயுதங்களை ரஷ்யாவுக்கு எடுத்து வரும் நடவடிக்கை 1996ஆம் ஆண்டு பூர்த்தியானது.

பெலாரஸ் அரசு ரஷ்யாவின் நெருங்கிய கூட்டாளியாக இருப்பதோடு உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்புக்கு அதரவு அளித்து வருகிறது.

ரஷ்ய அரச ஊடகத்திற்கு கடந்த சனிக்கிழமை பேசிய பூட்டின், இந்த ஆயுதங்களை செயற்படுத்தும் பணியாளர்களுக்கான பயிற்சி அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படுவதாகவும் மூலோபாய அணு ஆயுதங்களுக்கான களஞ்சிய வசதி ஒன்று வரும் ஜூலை 1ஆம் திகதிக்கு பூர்த்தி செய்யப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அணு ஆயுதங்களை வீசக் கூடிய சிறிய எண்ணிக்கையிலான இனக்தர் மூலோபாய ஏவுகணை அமைப்பு ஏற்கனவே பெலாரஸுக்கு மாற்றப்பட்டிருப்பதாகவும் புட்டின் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் அணு ஆயுதம் எப்போது அங்கு அனுப்பப்படும் என்பது பற்றி அவர் கூறவில்லை.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மார்ச் மாதம் 27ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.